26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733

தூர்ந்த பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 பாலம் 20 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் OCTOBER 15, 2016

# பசுமை வாயுக்களைக் கட்டுப்படுத்தும் கனேடிய அரசின் திட்டம்

கனேடிய நாடாளுமன்றத்தில் 2016 ஒக்ரோபர் 3இல் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒரு திட்டத்தை கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ சமர்ப்பித்தார்.

கனேடிய மாகாண அரசுகள் பசுமை வாயுக்களைக் கட்டுப்படுத்தும் தமது சொந்தத் திட்டங்களை அமல்படுத்தாவிட்டால் கனேடிய மத்திய அரசு 2018 ஆம் ஆண்டில் இருந்து 'காபன் விலை'யாக ஆகக் குறைத்தது, ஒரு tonne இற்கு $10 அறவிடும். இந்தக் காபன் விலை வருடம் ஒன்றுக்கு ஒரு tonne இற்கு $10ஆல் அதிகரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் வருடம் ஒன்றுக்கு ஒரு tonne இற்கு $50 ஆக அறவிடப்படும்.

கனேடிய மாகாண அரசுகள் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த முக்கியமாக இரண்டு முறைகளைக் கையாளுகின்றன. ஒன்று காபன் விலை (Carbon price) அறவிடல். இது ஒரு நிறுவனம் வெளியேற்றும் காபன் அளவிற்கு ஏற்ப அவர்களிடம் தண்டப் பணம் அறவிடுதல். மற்றைய முறை காபன் 'வரம்பு மற்றும் வர்த்தக முறை' (Cap and trade system). இம்முறையில் மாகாண அரசு நிறுவனம் ஒன்றுக்கு காபன் வெளிவிடும் அளவில் வரம்பு ஒன்றை விதிக்கும். அந்நிறுவனம் அந்த வரம்புக்குள் காபனை வெளியிட்டால் தமது மேலதிக அளவை அதாவது அந்த வரம்பு எல்லையை அடையும் அளவு காபனை



இன்னொரு நிறுவனத்திற்கு விற்கலாம். இதேபோல் ஒரு நிறுவனம் தமது வரம்புக்கு மேல் காபனை வெளியிட்டால் அவர்கள் தமது வரம்பு எல்லைக்கு மேற்பட்ட காபனை இன்னொரு நிறுவனத்திடம் (வரம்பு எல்லைக்கு உள்ளே காபனை வெளியிடும் நிறுவனம்) இருந்து வாங்க வேண்டும். இவ்வாறு நிறுவனங்களுக்கு இடையே வர்த்தகம் செய்ய விடுவதால் ஒரு நிறுவனம் தமது காபன் வெளியிடும் அளவை வரம்பு எல்லைக்கு மிகக்குறைவாக வைப்பதன் மூலம் தமது மேலதிக காபன் அளவை இன்னொரு நிறுவனத்திற்கு விற்றுப் பணத்தைப் பெற்று தமது தொழில்நுட்ப வசதியை மேம்படுத்தும்.

கனேடிய பிரதமர் தனது உரையில் மாகாண மற்றும் பிரதேச அரசுகள் 2018ஆம் ஆண்டுக்கு இடையில் தமது மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களில் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்க 'காபன் விலை' திட்டம் அல்லது 'காபன் வரம்பு மற்றும் வர்த்தக முறை' திட்டம் ஒன்றை அமல்படுத்தாவிட்டால் மத்திய அரசின் மேற்கூறிய 'காபன் விலை' திட்டம் 2018 ஆம் ஆண்டில் இருந்து அமல்படுத்தப்படும் என்றார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தால் ஏற்படும் காலநிலை பாதிப்பில் இருந்து ஓடி ஒளிவதற்கு ஒரு வழியும் இல்லை. அதனை எதிர்நோக்கியே தீரவேண்டும். நாங்கள் கடந்த 10 வருடங்களாகப் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைத் தடுக்க

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

IP GOLDHOUSE 905-554-5890

வீடு,வியாபார நிலையம் வாங்க விற்க..
Kannan Nadarajah
416-889-1083

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
SUBRA Financial Solutions Inc.
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
MORTGAGE ALLIANCE

Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca

# HOUSE FOR SALE

## 32 Nahanni Terrace




**Scarborough**
3+1 Bedrooms
2 Washrooms
Seperate Entrance

## 22 Havery Jones




**Bowmanville**
5 Bedrooms
4 Washrooms
3300 Sq.ft.

## 21 Berger Ave.




**Markham**
4 Bedrooms
4 Washrooms

1st , 2nd Mortgage for Home/ Business
We buy old houses for highest price
Home Renovation
Home renovation Loan

CANADA WEALTH MANAGEMENT INC

## CANADA WEALTH MANAGEMENT INC.

6055 Steels Ave E. Unit C102, Scarborough, ON. M1X 0A7

RANGAN Tel: 647.702.2159

வீடு வாங்க விற்க,

வீடுகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும் 1st,2nd மோட்கேஜ்,

பழைய வீடுகள் பெறுமதி மிக்க விலையில் வாங்கப்படும்.

Home Renovation செய்து கொடுக்கப்படும்.

# Thinking of Selling or Buying?

## You deserve more than you think!

## Turn to the Expert!

**SELLING**
- First class marketing
- Professional photography
- Free home evaluation
- Free home staging
- Free moving (Up to $1000)

**BUYING**
- Assist with financing - Low Interest Rate
- Free home inspection (up to $500)
- Free moving (up to $1000)
- Free lawyer fee (up to $1500)

About **THAS**
Professional
Knowledgeable
Solid Negotiator
Business owner,
Real Estate Investor and Advisor

Listing Commission from 0% *

## Thas ThiruUnavukkarasu

Sales Representative Dip-in-Eng.(Hons)

**416-388-4333**

thasremax@gmail.com

RE/MAX ACE REALTY INC. BROKERAGE



# Friends MATRIMONY



திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்

- ✓ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✓ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✓ அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்

**info@friendsmatrimony.com**
**www.friendsmatrimony.com**
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
| --- | --- |
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# பசுமை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

எந்த முயற்சியும் செய்யாமல் வீணாக்கி விட்டோம் என்றார்.

அமெரிக்க நிறுவனமான Bloomberg தமது ஆசிரியர் தலையங்கத்தில் கனேடியப் பிரதமரின் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த எடுத்த இந்த நடவடிக்கையைப் பாராட்டியுள்ளது. அதில் கனேடிய அரசின் இந்த நடவடிக்கை பாரிஸ் மாநாட்டில் எடுத்த பசுமை வாயுக்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற்குத் திருப்தி தரக்கூடிய அளவு பசுமை வாயுக்களைக் குறைக்காவிட்டாலும் இது மிகவும் சரியான பாதையில் செல்ல வழி வகுக்கும் ஒரு திட்டம் என்று பாராட்டியுள்ளது.

கனேடிய அரசின் திட்டப்படி 2022ஆம் ஆண்டில் வருடம் ஒன்றுக்கு ஒரு tonne காபன் வெளியேற்றத்திற்கு $50 அறவிடப்படும். பாரிஸ் மாநாட்டில் எடுத்த பசுமை வாயுக்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்தை திருப்திப்படுத்த கனடா 2030 ஆம் ஆண்டில் வருடம் ஒன்றுக்கு ஒரு tonne காபன் வெளியேற்றத்திற்கு $200 அறவிட வேண்டும். ஆனால் இவ்வாறு காபன் விலை அறவிடுவது திடீரென உயர்த்தப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். ஒரு நாடு பசுமை வாயுக்களைக் குறைக்க ஒரு திட்டத்தை முதலாவதாக ஆரம்பிப்பது மிகவும் கடினமான விடயம். அதுவும் காபன் வெளியேற்றத்திற்குப் பணம் அறவிடுவது என்பது இன்னும் கடினமான விடயம். இவ்வாறான ஒரு விடயத்தைத் துணிந்து எடுத்த கனேடிய பிரதமரையும் கனேடிய அரசையும் பாராட்டிய Bloomberg ஏனைய நாடுகளும் கனடாவினை முன்மாதிரியாகக் கொண்டு பசுமை வாயுக்களைக் குறைக்கும்



திட்டங்களை உருவாக்க வேண்டும் என Bloomberg நிறுவன ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தினுடைய தற்போது நடைமுறையில் உள்ள காபன் விலைத்திட்டம் கனேடியப் பிரதமர் பிரேரித்த திட்டத்தை விடக் கடுமையானது. பிரிட்டிஸ் கொலம்பியா மாகாணத்தில் காபன் விலைத்திட்டம் 2008 யூலை 1ஆம் திகதியில் இருந்து அமல்படுத்தப்படுகிறது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் காபன் விலைத்திட்டம் 2008 இல் ஒரு tonne இற்கு $10ஆக இருந்தது. அது வருடம் ஒன்றுக்கு ஒரு tonne இற்கு $5ஆல் அதிகரிக்கப்பட்டு 2012ஆம் ஆண்டில் வருடம் ஒன்றுக்கு ஒரு tonne இற்கு $30 ஆக அறவிடப்பட்டது. இதுவே தொடர்ந்தும் 2012ஆம் ஆண்டில் இருந்து அறவிடப்படுகிறது. இவ்வாறு அறவிடப்படும் மேலதிக வருமானம் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த உதவும் புதிய திட்டங்களை அமல்படுத்தப் பாவிப்பதால் இத்திட்டம் 'நடுநிலை வருவாய்த்' (Revenue neutral) திட்டம் என்று அழைக்கப்படுகிறது.

குவிபெக் மாகாணமும் ஒன்ராரியோ மாகாணமும் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த 'காபன் வரம்பு மற்றும் வர்த்தக முறைத்' திட்டத்தை அமல்படுத்துகின்றன.

இதனால் கனேடியப் பிரதமரின் அறிவிப்பை பிரிட்டிஷ் கொலம்பியா, குவிபெக் மற்றும் ஒன்ராரியோ மாகாண முதல்வர்கள் வரவேற்றுள்ளனர். அல்பேட்டா மாகாணத்தின் புதிய ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த முதல்வரும் இத்திட்டத்தை வரவேற்றாலும் இதுவரை காலமும் கனடாவின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிய அல்பேட்டா மாகாண மக்களுக்கு இந்தத்திட்டத்தால் ஏற்படும் பொருளாதார இழப்புகளுக்கு ஈடுசெய்யக் கனேடிய மத்திய அரசு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். சஸ்கச்சுவான் மாகாணத்தின் பழமைவாதக் கட்சி முதல்வர் கனேடிய மத்திய அரசின் இந்தக் காபன் விலைத்திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். கனேடிய மத்திய அரசின் இந்தக் காபன் விலைத் திட்டத்திற்கு கனடாவின் பிரதேசங்களின் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கனேடிய மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சர் கதரின் மக்கன்னா CBC ஊடகத்திற்குக் கருத்துத் தெரிவிக்கையில் கனடாவின் மூன்று மாகாண, பிரதேச அரசுகள் காலநிலை மாற்றத்திற்கான மாநாட்டை புறக்கணித்தன. கனேடியர்கள் இம்மூன்று அரசுகளும் எவ்வாறு பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளார்கள் என அறிய ஆவலாக உள்ளனர் என்றார். நாங்கள் எல்லோரும் இப்பிரச்சினை தொடர்பாகத் தொடர்ந்து கலந்துரையாடல்கள் நடத்தி ஒரு தீர்வுக்கு வருவதையே கனேடிய மக்கள் விரும்புகிறார்கள் என்றார். கனேடிய மத்திய, மாகாண, பிரதேச அரசுகளின் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் 2016 ஒக்ரோபர் 3இல் நடத்திய மாநாட்டில் இருந்து சஸ்கச்சுவான் மாகாண அமைச்சர் உட்பட கனேடியப் பிரதேசங்களின் அமைச்சர்கள் வெளிநடப்புச் செய்தது பற்றிக் குறிப்பிடுகையிலேயே மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்திற்கான அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

புதிய ஜனநாயகக் கட்சியும் பசுமைக் கட்சியும் கனேடியப் பிரதமரின் இந்தப் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...



# Opening Soon
# Shirdi Sai School of Canada

We are accepting registration ( Kindergarten to Grade 5) for this brand new school opening soon in scarborough.

To register your interest please go to:

**http://shirdisaischoolofcanada.com/**

SHIRDI SAI SCHOOL
HONESTY
COMPASSION
PEACE
LOVE
INTEGRITY
CANADA



# ரொறன்ரோ தமிழ்ச்சங்கம்

## மாதாந்த இலக்கியக் கலந்துரையாடல்

**"பத்திரிகைத்துறையில் எமது பார்வைகளும் பயணங்களும்"**

ஒருங்கிணைப்பு: வைத்திய கலாநிதி இ.லம்போதரன்

சிறப்புபேச்சாளர்கள்உரை:

திரு.ராஜா மகேந்திரன் (விளம்பரம்)
திரு.ரி.கே.பரமேஸ்வரன் (ஈழநாடு)
திருமதி.ராஜி அரசரத்தினம் (தமிழர் செந்தாமரை)
திரு.ஆர்.என்.லோகேந்திரலிங்கம் (உதயன்)

ஜயந்தெளிதல் அரங்கு

நாள்: 29-10-2016
நேரம்: மாலை 3:00 முதல் 7:00 வரை

இடம்: ரொறன்ரோ தமிழ்ச்சங்க மண்டபம்
3A, 5637, Finch Avenue East,
Scarborough, M1B 5K9

தொடர்புகளுக்கு: அகில் - 416-822-6316

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்!

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க,
வீடு வாங்க, விற்க
மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?



| BEST RATES FOR "AAA" CLIENTS | |
|---|---|
| 5 Yrs Variable : | Call Us |
| 2 Yrs Fixed Rate : | 2.09%* *OAC |
| 5 Yrs Fixed Rate : | 2.39 % * |

## "மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

**வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00**




உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit
மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி
எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

எமது முகவரி

**1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)**



ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**

And,,
*For All Your Real Estate Services*

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் புதிய மொந்தையில் பழைய கள்ளா?

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கர வாததடைச்சட்டத்திற்குப் பதிலாக கொண்டு வரப்படவுள்ள உத்தேச, பயங்கர வாத எதிர்ப்பு சட்டமூல வரைபிற்கு அமைச்சரவை கடந்த 11ம் திகதி அங்கீகாரம் வழங்கியுள்ளது. எனினும், இந்த உத்தேச சட்டமூலத்தின் உள்ளடக்கங்கள் இதுவரை பகிரங்கப்படுத்தாமையினால் மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பாரிய சந்தேகங்களை இது ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சட்டம் குறித்து அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்டுள்ள கருத்து மக்களுக்கு சந்தேகம் ஏற்பட காரணமாகவும் அமைந்துள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் பதிலாக கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமானது, முன்னரை விடப் பயங்கர மானதாக இருக்கும் என சுமந்திரன் தெரிவித் துள்ளார். தமக்கு இச்சட்டமூலம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் தாம் இதனை அறிந்து கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார். நாடாளுமன்றில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே சுமந்திரன் இவ்விடயத்தைக் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்குப் பதிலாக சட்டமொன்றை உருவாக்குதல் தொடர்பான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இதற்கு சுமந்திரனும் பரிந்துரைகளை வழங்கியிருந்தார். அதன் பிரகாரம் ஒரு வரைபு முதலில் தயாரிக்கப்பட்டு பின்னர் அது கைவிடப்பட்டுள்ள தாகவும், பாதுகாப்புடன் தொடர்புடைய குழு வொன்று வேறு ஒரு வரைபை தயாரித்துள்ள தாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். இப்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் பயங்கரவாத தடைச்சட்டத்தை விட மோசமானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கர வாத தடைச்சட்டத்திலுள்ள தடுத்து வைத்தல், வாக்குமூலம் பெறுவதை மறைத்தல் உள்ளிட்ட விடயங்கள் நீக்கப் படாமல் புதிய சட்ட மூலத்திலும் காணப்படு மென தமக்கு அறியக் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியிருக்கின்றார். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக சர்வதேசத் திற்கு வாக்குறுதி அளித்துவிட்டு, அதனையே வேறு ஒரு பெயரில் கொண்டு வருவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்ப தோடு, இது அரசாங்கத்திற்கு நெருக்கடியை யே தோற்று விக்குமென சுமந்திரன் மேலும் தெரிவித்தார். இந்தப் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அடுத்த மார்ச் மாதமளவில் நடைமுறைக்கு வரும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்க கூறுகின்றார்.

இன்று உலகில் பல்வேறு அமைப்புக்கள் பல்வேறு புதிய நுட்பங்களைக் கையாண்டு பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. ஆகவே தற்கால பயங்கரவாத செயற்பாடுகளுக்கு முகங்கொடுக்கும் விதமான வகையில் புதிய சட்டம் உருவாக்கப்படும் என்று பிரதமர் ரணில் குறிப்பிடுகின்றார்.



இதற்காக இலங்கையின் ஓய்வுபெற்ற முன்னாள் இராணுவத் தளபதிகள் மற்றும் விசேட, துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகள் பெற்றுக் கொள்ளப்பட்டு, எதிர்வரும் இருபது, முப்பது வருடங்களுக்கு செல்லுபடியாகும் விதமான முறையில் இந்தப் புதிய சட்டம் உருவாக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவசரகாலச் சட்டத்தினாலும், பயங்கரவாத தடைச்சட்டத்தினாலும் இந்த நாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே, இச்சட்டத் தினால் குற்றமற்றவர்கள் கூடச் சிறையில் அடைக்கப்பட்டனர். இச்சட்டத்தைப் பயன் படுத்தி கைது செய்யப்பட்ட பலர் காணாம லாக்கப்பட்டனர். இன்று இலங்கையில் சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகள் விசாரணைகளோ, வழக்குகளோ இன்றி விடுதலையுமின்றி வாடுவதற்கு இந்தச் சட்டமே காரணம் என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

போர்ச் காலத்தில் அமலில் இருந்த அவசர காலச்சட்டம் மஹிந்த ராஜபக்ஸ அரசாங்கத் திலேயே நீக்கப்பட்டது. அதாவது போர் முடிவுற்ற பின்னர் 2011ம் ஆண்டு நீக்கப்பட்டது. ஆனாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட அமைப்பாக வைத்திருக்கவும், உயர் பாதுகாப்பு வலயங்களை நீடிக்கவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த அங்கத்தவர்களை தடுத்து வைத்திருக்கவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் புதிய விதிகளை அரசாங்கம் அமல்படுத்தியது.

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதும் அச்சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட ஏனைய ஒழுங்கு விதிகளும் நீக்கப்பட்டிருக்க வேண்டும். அச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை தொடர்ந்தும் தடைசெய்யப்பட்ட அமைப்பாக கருத முடியாது. அதேபோல் உயர் பாதுகாப்பு வலயங்களும் நீக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், உயர் பாதுகாப்பு வலயங்களைத் தொடர்ந்து வைத்திருக்கவும் விடுதலைப்புலிகள் மீதான தடையை நீடிக்கவும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் புதிய விதிகள் அமல் படுத்தப்பட்டதாக அப்போது தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச மனிதஉரிமைகள் அமைப்புக் களும், சர்வதேச நாடுகளும் இலங்கையில் நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றே அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன. ஐரோப்பிய யூனியனும், ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக் குழுவும் அரசாங்கத்திடம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாத தடைச்சட்டத்தினை நீக்குவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்திருந்த போதிலும் அதனை நீக்குவதற்கான உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட வில்லை என மனித உரிமைகள் கண் காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் குற்றச் சாட்டியிருந்தமையும் நினைவிற் கொள்ளத்தக்கது.

இவ்வருடம் யூன் மாதம் ஜெனீவா மனித உரிமை பேரவையில் இடம்பெற்ற இலங்கை தொடர்பான விவாதத்தின் போது, நல்லிணக்கச் செயற்பாடுகள் விடயத்தில் அரசாங்கம் வழங்கிய பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளதாகவும், பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக சர்வதேச தரத்துடன் கூடிய சட்டம் வரவேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியிருந்தது. எனவே, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது சுமந்திரன் சந்தேகிப்பதைப் போன்று மோசமானதாக அமையுமானால் அது தமிழ் மக்களை மட்டுமன்றி சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றுவதாகவே அமையும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம் எனும் பெயரில் புதிய சட்டமொன்றை கொண்டுவருவதற்குத் தீர்மானித்துள்ளதாக அரசாங்கம் முன்ன தாகக் கூறி வந்தது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல், விசாரணை நடவடிக்கைக-ளின் போதுள்ள சட்ட திட்டங்கள் மற்றும் புலனாய்வு சேவை நடவடிக்கை என்பன தொடர்பான பிரதான மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக இந்தத் தேசிய பாதுகாப்புச் சட்டம் காணப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது வரப்போகின்ற புதிய சட்டம் பயங்கர வாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரிலேயே வரப்போவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதால் பெயர் மாறியது போன்று, அதன் உள்ளடக்கமும் மாறி விடுமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதன் உள்ளடக்கம் இன்னமும் பகிரங்கப்படுத் தப்படாததால் முற்றுமுழுதாக இச்சட்டம் குறித்து கருத்துக்களை வெளியிட முடியாது. ஆனாலும், பிரச்சினைகள் இருக்குமானால் அதற்கு எதிராக போராடவும், சர்வதேசத்திற்கு அதனைக் கொண்டு செல்லவும் முடியும்.

- விகிர்தன் -

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம். இரண்டு கட்சிகளி னதும் தேசிய மாநாடுகள் முடிவடைந்து ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதி வேட்பாளர்கள் தெரிவும் முடிவடைந்தவுடன் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முதல் இரண்டு பிரிவுகளும் முடிவடைந்து விட்டன. தற்போது மூன்றாவது பிரிவான தேர்தல் பிரசாரமும் பொதுத்தேர்தலும் நடைபெறுகிறது. இம்மூன்றாவது பிரிவு எதிர்வரும் நொவம்பர் 08, 2016 இல் நடை-பெற இருக்கும் பொதுத் தேர்தல் வரை தொடரும்.

### முக்கிய நான்கு ஜனாதிபதி வேட்பாளர்களும் பின்வருமாறு

ஜனநாயகக்கட்சி - Hillary Clinton
குடியரசுக்கட்சி - Donald Trump
Libertarian கட்சி - Gary Johnson
பசுமைக்கட்சி - Jill Stein

CBC ஒக்ரோபர் 11 ஆம் திகதியின் கருத்துக்கணிப்பின் படி அமெரிக்க மக்களில் வாக்களிக்கத் தகுதி உள்ளவர்களில்

47.3% ஆனவர்கள் Hillary Clinton ஐ ஆதரிக்கிறார்கள்
41.6% ஆனவர்கள் Donald Trump ஐ ஆதரிக்கிறார்கள்
11.0% ஆனவர்கள் ஏனைய கட்சி வேட்பாளர்களை ஆதரிக்கிறார்கள்

கடந்த விளம்பரம் இதழ் வெளிவரும்போது நாடுதழுவிய வாக்குகளில் 2.2% அதிகப் படியான வாக்குகளைப் பெற்றிருந்த Hillary தற்போது 5.7% அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளார். நாடுதழுவிய வாக்கெடுப்புக்களின் வீதம் ஜனாதிபதி யைத் தெரிவு செய்வது இல்லை. மாநிலங் களில் இருந்து தெரிவு செய்யப்படும் தெரிவாளர்களே ஜனாதிபதியைத் தெரிவு செய்கிறார்கள்.

ஜனாதிபதியைத் தெரிவு செய்ய 270 தெரிவாளர்களது ஆதரவு தேவை. Hillary இற்கு 341 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்கக்கூடிய நிலையில் தற்போது இருக்கிறார். Donald இற்கு 197 தெரிவாளர்களது ஆதரவு கிடைக்க கூடிய நிலையிலேயே தற்போது இருக்கிறார்.

Hillary இன் ஜனநாயகக்கட்சி உபஜனாதிபதி வேட்பாளர் Tim Kaine இற்கும் Donald இன் குடியரசுக்கட்சி உபஜனாதிபதி வேட்பாளர் Mike Pence இற்கும் இடையேயான முதலாவது விவாதம் கடந்த 2016 ஒக்ரோபர் 04ஆம் திகதி Longwood பல்கலைக்கழகம், Farmville, Virginia இல் நடைபெற்றது. Tim Kaine தற்போது Virginia இல் செனட்டர் ஆக இருக்கிறார். Mike Pence தற்போது Indiana இன் ஆளுனராக இருக்கிறார். இவர்கள் இருவருமே நீண்டகாலமாக அரசசேவை செய்து வருகிறார்கள். இவர்கள் இருவருடைய மகன்களும் அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றுகிறார்கள்.

Tim Kaine தனது விவாதத்தில் Donald Trump எப்பொழுதும் தன்னைப்பற்றியே பேசுபவர், மெக்சிக்கோவில் இருந்து வந்தவர் களை கொலை மற்றும் கற்பழிப்பு செய்தவர் கள் என்று கூறுகிறார், தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவை திரும்பத் திரும்ப அமெரிக்காவில் பிறக்காதவர் என்று கூறினார். மற்றும் பெண்களையும், ஆபிரிக்கஅமெரிக்கர் களையும் இழிவுபடுத்துகிறார். இவற்றை எல்லாம் எவ்வாறு Mike Pence நியாயப்படுத்துவார் என பலமுறை கேட்டார். இவற்றிற்குப் பதிலளித்த Mike Pence இதில் பல தவறான தகவல்கள் என்றும் Hillary Clinton தான் Donald Trump இன் ஆதரவாளர்களைக் கீழ்த்தரமாகக் கூறினார் என்றும், அவரின் வெளிநாட்டுக் கொள்கையால் தான் சிரியா தற்போது



இவ்வாறு சீரழிகிறது என்றார்.


இரண்டு உபஜனாதிபதி வேட்பாளர்களும் தீவிர சமய நம்பிக்கை உடையவர்கள். அவர்களிடம் உங்கள் மத நம்பிக்கைக்கும் பொதுமக்களது அரசியல் கொள்கைக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் எனக்கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த Tim Kaine இது தனக்கு மிகவும் இலகுவானது. எனது தனிப்பட்ட வாழ்க்கையை நான் சமய நம்பிக்கைப்படியும் பொது அரசியல் விடயங்களை அரசியல் கொள்கைப்படியும் முடிவு எடுப்பேன் என்றார். தான் எல்லா சமயத்தையும் சமமாக மதிப்பவர் என்றும் தனது சமய நம்பிக்கை (Catholic Church) மரணதண்டனைக்கு எதிரானது. ஆனால் நான் ஆளுனராக இருக்கும்போது அந்த மாநிலச் சட்டப்படி மரணதண்டனையை ஏற்று நிறைவேற்றினேன் என்றார். அதுபோல் தனது மதநம்பிக்கை உயிர்க்கொலைக்கு எதிரானது, கருக்கலைப் புக்கு எதிரானது. ஆனால் நாட்டுச் சட்டப்படி நான் பெண்களுக்கு இவ்விடயத்தில் எது தேவை எனத் தீர்மானிக்கும் முழு உரிமையையும் கொடுப்பேன் என்றார்.

Mike Pence தான் Christian மத நம்பிக்கை உடையவர் என்றும், தான் உயிர் கொலைக்கும் கருக்கலைப்பிற்கும் எதிரானவர் என்றார். தான் தனது மாநிலத்தில் கருக் கலைப்பைத் தவிர்க்கும் மாற்று வழிமுறை களை நடைமுறைப்படுத்தியவர் என்றார். தான் Indiana மாநிலத்தை அமெரிக்காவின் முதலாவது தத்தெடுப்பு சார்பு மாநிலமாக (Pro - Adoption State) மாற்றியவர் என்றார். இதனால், தான் பெண்களுக்கு கருக் கலைப்பை தவிர்க்கும் வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவேன் என்றார்.

2016 ஒக்ரோபர் 09 ஆம் திகதி இரண்டாவது ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதம் Washington பல்கலைக்கழகம், St Louis இல் நடைபெற்றது. இந்த விவாதத்திற்கு முன்னர் ஒக்ரோபர் 07 ஆம் திகதி Washington Post ஊடகம் NBC நிறுவனத்தில் 'Today Show' நிகழ்ச்சி நடத்தும் Billy Bush இற்கும் Donald Trump இற்கும் இடையே 2005இல் நடந்த பெண்கள் பற்றிய கீழ்த்தரமான ஓர் உரையாடலை வெளியிட்டிருந்தது. இது குடியரசுக்கட்சியின் பிரபலங்களுக்கு இடையே Donald Trump இற்கு வெளிப்படையாக ஆதரவு அளிப்பதற்கு ஒரு தர்ம சங்கடமான நிலையை ஏற்படுத்தியிருந்தது.

இதைத் தொடர்ந்து ஒக்ரோபர் 09 ஆம் திகதி இரண்டாவது ஜனாதிபதி வேட்பாளர்களது விவாதத்திற்கு முன்னர் Donald Trump முன்னாள் ஜனாதிபதி Bill Clinton இற்கு எதிராகப் பாலியல் குற்றச்சாட்டை சுமத்திய மூன்று பெண்களுடனும், 1975 இல் 12 வயதாக இருக்கும் போது பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட இன்னொரு



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...



# தோட்டத் தொழிலாளர்களின் போராட்டமும், வடக்குக் கிழக்கின் ஆதரவும்!




- ஆதித்தன் -

மலையகத்தின் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாக நடத்தி வந்த போராட்டத்திற்கு அவர்கள் எதிர்பார்த்த சரியானதொரு தீர்வு கிடைக்கவில்லை எனினும், அவர்களின் போராட்டத்திற்கு நாடளாவிய ரீதியில் ஆதரவு வெளிப்படுத்தப்பட்டுள்ளமையானது அவர்களுக்குக் கிடைத்த வெற்றி என்றே குறிப்பிடலாம்.

நாளாந்தக் கொடுப்பனவாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்பதே அவர்களின் பிரதான கோரிக்கையாகவிருந்தது. தேர்தல் காலங்களில் அவர்களுக்கு இந்தச் சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று வாக்குறுதிகளை வழங்கியே அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் வாக்கு வேட்டையில் இறங்குகின்றன. ஆனால், தேர்தல் முடிந்து பதவிக்கு வந்தவுடன் அந்த வாக்குறுதிகள் காற்றில் விடப்படுகின்றன.

தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து, கடந்த 18 மாத காலமாக நடைபெற்ற 10 இற்கும் மேற்பட்ட பேச்சுவார்த்தைகளில் சம்பள அதிகரிப்புக் கோரிக்கையை தோட்ட நிர்வாகங்களின் சம்மேளனம் நிராகரித்தே வந்துள்ளன. பல்வேறு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டும் கூட எதுவும் நடக்கவில்லை. இதனையடுத்தே தொழிலாளர்கள் தொடர்ச்சியாகப் பாரிய போராட்டங்களை மேற்கொண்டனர். இவர்களின் போராட்டத்திற்கு வடக்கு, கிழக்கு பகுதிகளிலும் ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளன. தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத்தில் தொழிலாளர்களின் போராட்டத்திற்குத் தங்களின் ஆதரவை தெரிவித்தது.
அத்துடன், வட மாகாண முதலமைச்சர் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்தை ஆதரித்து அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார். அதில் அவர்களின் கோரிக்கை நியாமானது என்பதற்கான காரணங்களையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு உழைத்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் வேதனம் ஏன் வழங்க முடியாது? என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில், 'தமது சம்பளக் கோரிக்கையை வலியுறுத்தி மலையகத்தில் உள்ள பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரும் இணைந்து கொண்டு கடந்த 12 தினங்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் நியாயமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான கோரிக்கைகள் என்ற அடிப்படையில் அதனை மனிதாபிமான ரீதியில் அணுகுமாறு நாங்கள் அரசையும் தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தையும் வேண்டிக் கொள்கின்றோம். தமக்கு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வும் 18 மாதங்களுக்கான சம்பள நிலுவையும் வாரத்தில் 06 நாட்கள் தொழிலும் கிடைக்கப் பெறுவதை உத்தரவாதம் செய்தாலே அன்றி, தமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்ற நிலையில் நாளொன்றுக்கு 730 ரூபாய் என்ற ரீதியில் சம்பளத்தை மாற்றியமைக்க தோட்டத் தொழிலாளர்கள் சங்கமும் முதலாளிமார் சம்மேளனமும் இணங்கியிருப்பது திருப்தியளிப்பதாக இல்லை. இந்த நாட்டின் வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற தொழில்களில் முன்னிலை வகிக்கக் கூடிய தேயிலை உற்பத்தித் தொழிற்துறையின் முதுகெலும்பாக விளங்கக்கூடிய தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் இருப்பிட வசதிக் குறைவுகள், குழந்தைகளின் பாடசாலை வசதியின்மை, சீதோஷ்ண நிலை போன்ற இன்னோரன்ன இடையூறுகளுக்கு மத்தியில் எமது நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்கு உழைத்து வரும் அவர்களின் நியாயமான கோரிக்கைகள் பெருந்தன்மையுடன் நோக்கப்பட வேண்டியவை.

பயிற்சி பெறாத ஒரு கூலியாள் கூட குறைந்தபட்ச நாட் கூலியாக 1,000 ரூபாயை பெறுகின்ற இச்சந்தர்ப்பத்தில் தோட்டத் தொழிற்றுறையில் பயிற்சி பெற்ற இவர்களுக்கு நாளாந்த அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடிய அளவுக்கு அவர்களின் சம்பளங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். அவர்களின் கோரிக்கையான 6 நாட்கள் தொழில் கிடைக்கப் பெறுவதையும் உறுதி செய்வதற்கு அரசு ஏற்ற நிர்வாகங்களுடன் கலந்துரையாட வேண்டும். நலிந்து போன நிலையில் வாழுகின்ற இம்மக்கள் இந்நாட்டின் ஒரு சாதாரண குடிமகனுக்கு இருக்கக்கூடிய சலுகைகளுக்கும் வசதிகளுக்கும் ஒப்பான வகையில் அவர்களின் சம்பளங்களைத் திருத்தி அமைத்து வழங்கப் பெருமனதுடன் முன்வர வேண்டும். தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் வெற்றிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்' எனத் தெரிவித்துள்ளார். கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் தோட்டத் தொழிலாளிகளின் போராட்டத்திற்குக் கிழக்கு மாகாண சபையின் ஆதரவை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இவற்றை விடவும், யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு என வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பேரணிகள் - ஆர்ப்பாட்டங்கள் என்பன தோட்டத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நடத்தப்பட்டுள்ளன. இந்த வகையில், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரும் போராட்டம் நியாயமானது என்கின்ற கருத்து பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன் இம்முறை அது சர்வதேச கவனத்தையும் ஈர்க்கும் அளவிற்கு சர்வதேச ஊடகங்களில் இடம் பிடித்துள்ளது.

இதிலே, இங்கு குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம் யாதெனில், இவ்வாறான, ஒடுக்கப்பட்ட சமூகங்களுக்காக அனைத்து சிறுபான்மைத் தரப்பினரும் குரல் கொடுப்பது ஒட்டுமொத்த சிறுபான்மை மக்களின் பலத்தைத் திரட்டவும் அதனை தக்கவைக்கவும் உதவும்.

சுனாமி பேரிடர் ஏற்பட்ட போது, வடக்குக் கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மலையகத்திலும், தென்னிலங்கையிலும் வாழும் மக்கள் உதவிகளை வழங்கினார்கள். அங்குள்ள தமிழர் சார்ந்த அமைப்புக்கள், ஆலய நிர்வாகங்கள் பெருமளவு பொருட்களைப் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு பகுதிகளுக்கு நேரடியாகக் கொண்டு வந்து வழங்கியதைக் காண முடிந்தது.

அதேபோன்று மலையகத்தில் கடந்த வருடத்தில் இடம்பெற்ற பாரிய மண்சரிவு அனர்த்தத்தின் போது வடக்குக் கிழக்கில் இருந்தும் உதவிகள் அங்கு சென்றன. எனினும் அவை பாரிய உதவிகளாக இருக்கவில்லை. வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மலையகத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். இவ்வாறான உறவுகள் சிறுபான்மையினரிடம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

தமிழ் தேசியத்தை வளர்ப்பதற்கான செயற்பாடு வடக்குக், கிழக்குத் தமிழர் - புலம்பெயர்ந்து வாழும் தமிழர் - தமிழ் நாட்டுத் தமிழர் என மூன்று தளத்திலும் ஒருங்கிணைந்து கட்டி எழுப்பப்பட வேண்டும் என்கின்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும், வடக்குக் கிழக்கு மட்டுமன்றி, இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களிலும் பரந்து வாழும் தமிழரை ஒன்றிணைப்பது என்பது முதன்மையான பணியாகும். தற்போது இடம்பெறுவது போன்று நியாயமான போராட்டங்களுக்கு ஆதரவளிப்பது அல்லது, ஏதேனும் இடர்கள், அனர்த்தங்கள் ஏற்படும் போது உதவுவது போன்ற செயற்பாடுகளின் மூலம் பரஸ்பரம் உறவுகளையும், நம்பிக்கைகளையும் கட்டியெழுப்ப முடியும்.

இன்று வடக்குக், கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் எண்ணிக்கை சுமார் பதினைந்து இலட்சமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. அதே வேளையில், மலையகம் மற்றும், தென்னிலங்கையில் நிரந்தரமாக வாழும் தமிழ் மக்களின் தொகையும் பதி




னைந்து இலட்சம் என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் தமிழ் பேசும் சமூகத்தினராகிய முஸ்லிம்களையும் இணைத்துக் கொள்ளும்போது மேலும் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும். இந்த ஒருங்கிணைவின் ஊடாகத் தமிழ்மக்கள் தங்கள் கோரிக்கைகளை ஆளும் தரப்பிடமோ, சர்வதேச சமூகத்திடமோ முன்வைக்கும் போது அது மிகப்பெரிய பலம்பெற்றதாக அமையும்.

கடந்த சிலநாட்களாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் போராட்டமும் அதற்கு ஆதரவாக வடக்குக் கிழக்கிலும், கொழும்பிலும் நடத்தப்பட்ட ஆதரவுப் பேரணிகளும், வெளியிடப்பட்ட அறிக்கைகள், கருத்துக்களும் அனைத்து சிறுபான்மையினரும் ஒன்றிணைவதற்கான ஒரு வெளியை - ஒரு களத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

இப்போது, இந்தப் போராட்ட அழுத்தம் காரணமாக 620 ரூபாயிலிருந்து 730 ரூபாவாக சம்பளத்தை அதிகரிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்புத் தொகை போதாதெனினும், இந்த அதிகரிப்பிற்குத் தொடர்ச்சியாக நடைபெற்ற போராட்டங்களே காரணமாகும்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தாலும், இலங்கையின் தேயிலை, இறப்பர் ஆகியவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளமையால் அவர்களின் சம்பளக் கோரிக்கையை நிறைவேற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக, அரசாங்கத் தரப்பில் கூறப்படுகின்றது. இருந்தாலும் உழைப்பிற்கேற்ற ஊதியத்தை எவ்விதத்திலும் வழங்கியே ஆகவேண்டும் எனபதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!

oshawa




Taunton/Townline









**INVESTMENT**

Rented

Retail Unit Any Business possible close to all major retails..

$249K... Mortgage available

MARKHAM RD / 14 TH AVE

Hwy 48/Lakeridge Rd



Approx 10 Acre $249k

Salem/Taunton



4 bm 4 wsrm home $749k




## TORONTO'S World Class Lake Condos, Prestige Ownership VIP ACCESS CALL ME!! Cash Back Available

*Kennedy/ Kingston Rd*

*Restaurant Ready to go..*



*STORE PLUS APT*

**World Class Lake Condos**

**Prestige Ownership**
**VIP ACCESS CALL ME!!**




***Scarborough best Residential location with all amenities***




# Pat Pushpakanthan

Real Estate Broker

**416-894-1187**

Our MLS listing include:

- Free Professional Photography
- Free Professional virtual tour
- Free custom website of your home
- Free Home Staging
- Free Feature Sheets
- Free UTube Video
- Free Online Marketing............. , Open house and more..

## Hall of Famer

**PAT WILL BEAT ANY DEAL*!!**

*To buy Home, New Condos, commercial, Farms, Lands..*

*Call Me For Free service!*



Century 21 AFFILIATE REALTY INC BROKERAGE*

OFF: 416-290 1200

nhome2025@gmail.com

**Profit From 15 years of Real estate Success!**

*From , when you buy a house more than $ 400K house from me ,^Not intended to solicit existing buyers and sellers, under contract * some conditions apply, no other deal combined

# தமிழ் சினிமா சர்வதேச விருதுபெறும் தகுதியுடையது!

## நேர்காணல் - அனுராக் காஷ்யப்

"தமிழும் தமிழர்களும் எனக்குப் புதிதல்ல. என்னுடைய பள்ளி, கல்லூரிப் படிப்பெல்லாம் சினிமாத் துறைக்கு சம்பந்தமே இல்லாத வேறு துறைகளிலும் விஞ்ஞானத் துறையிலும்தான் இருந்தது. அதன்பின்னர் சினிமாதான் என் வாழ்க்கை என முடிவு செய்தபிறகு எனது இளமைப் பருவம் முழுவதையும் தமிழ்நாட்டில் கோடம்பாக்கத்திலும் ஆந்திராவில் ஹைதராபாத்திலும்தான் களித்துள்ளேன். மணிரத்னம், ராம்கோபால் வர்மா இருவருடனும்தான் நான் பணியாற்றினேன். சென்னையில் இருந்த நாட்களின் பாதிப்புகள் இப்போதும் என் சினிமாக்களில் அவ்வப்போது வெளிப்படும். என் சமீப படத்தில்கூட வசந்தபாலனின் அங்காடித்தெரு பற்றிய காட்சிகள் இடம் பெற்றுள்ளன." பேச்சை நிறுத்திவிட்டு நினைவுகளில் மூழ்குகிறார் அனுராக் காஷ்யப் உலகளவில் இன்றைய இந்திய சினிமாவின் முகம்.

இந்தியா முழுக்க இளம் திரைப்பட இயக்குநர்களின் ஆதர்சம் இன்று அனுராக் காஷ்யப்தான். ராம்கோபால் வர்மாவின் 'சத்யா' படத்தில் இணை திரைக்கதாசிரியராக தன் சினிமா வாழ்வைத் தொடங்கிய அனுராக் காஷ்யப், இதுவரை 10க்கும் மேற்பட்ட படங்களை இயக்கியுள்ளார். அத்தனையும் சர்வதேச சினிமா விருதுகளை வாங்கிக்குவித் திருப்பவை. லெனின் விருது வழங்கும் விழா மற்றும் திரைப்படக் கல்லூரி மாணவர்களுடனான கலந்துரையாடலுக்காக சமீபத்தில் சென்னை வந்திருந்த அனுராக்கைச் சந்தித்தோம்.

### இப்போது வெளிவரும் தமிழ் சினிமாக்களைப் பார்க்கிறீர்களா?

நான் சென்னையில் இருந்த நாட்களில் மட்டுமல்ல, அன்றிலிருந்து தொடங்கி இன்று வரை தமிழ் திரைப்பட உலகத்துடன் நெருங்கியவன். அதனால், இங்கு ஏற்படுகிற ஒவ்வொரு வளர்ச்சியையும் கூர்ந்து கவனித்து வருகிறேன். இன்றைய தமிழ் இயக்குநர்களில் பாலா, அமீர், சசிகுமார் ஆகிய மூவரின் படங்களின் மீதும் எனக்கு ஓர் ஈர்ப்பு உண்டு. 'நான் கடவுள்', 'பருத்தி வீரன்', 'சுப்பிரமணியபுரம்' படங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தன. எனது 'கேங்ஸ் ஆ∴ப் வாபூர்' படத்தின் ஆரம்பத்தில் இந்த மூன்று பேருமே, எனது வேரைத் தேடிப் போக வைத்தவர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறேன். வசந்தபாலனின் படங்களும் எனக்கு மிகவும் பிடிக்கும். அதற்கு அடையாளமாகவே எனது 'ராமன் ராகவ்' படத்தில் 'அங்காடித் தெரு' பற்றி காட்சிகளை அமைத்தேன். ஆனால், எந்த ஒரு தமிழ் இயக்குநராலும் இரண்டு படங்களுக்கு மேல், தொடர்ந்து ஏன் நல்ல படத்தைப் படைக்க இயலவில்லை என்பது தெரியவில்லை?

### சர்வதேச திரைப்பட விருதுகளைப் பெறுவதற்கான தகுதியிருந்தும் தமிழ் சினிமாவுக்கு ஏன் விருதுகள் கிடைப்பதில்லை?

தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் திரைப் படங்கள் வந்திருந்தாலும் அப்படங்களை விருதுகள் தேர்வுக்கு அனுப்ப வேண்டிய உரிமை இங்கு தயாரிப்பாளர்களிடமே உள்ளது. இது ஓர் அவலம். இதனால்தான் தமிழ் படங்களுக்கு பெரும்பாலும் விருதுகள் சாத்தியமில்லாமல் போகிறது. உதாரணமாக சசிகுமாரின் 'சுப்ரமணியபுரம்' எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விருது பெறுவதற்குரிய அத்தனை வாய்ப்புகளும் இருந்த படம். அது விருதுகள் தேர்வுக்கு அனுப்பப்படவே இல்லை. அனுப்பியிருந்தால் என்னுடைய படத்தைவிட அதிக விருதுகள் பெற்றிருக்கும் படமாக 'சுப்ரமணியபுரம்' இருந்திருக்கும். சிறந்த இயக்குநரான பாலாவின் 'பரதேசி' படத்திற்கும் இதே நிலைதான். இவைபோன்று இல்லாமல் வெற்றிமாறனின் 'விசாரணை' வெளிநாட்டு திரைப்பட விழாவிற்கு அனுப்பப்பட்டதாலேயே பல விருதுகளை பெற்றது. மேலும் வெனிஸ், கான், சண்டான்ஸ் போன்ற சர்வதேச அளவில் மதிக்கப்படும் மிக உயர்ந்த திரைப்பட விருதுகளைப் பொறுத்தவரைக்கும், அவற்றுக்காக அனுப்பப்படும் படங்கள் முதலில் திரைப்பட விழாக்களில்தான் திரையிடப்பட வேண்டுமென்பது கட்டாயம். இந்த வரையறைக்கு உட்பட்டுத்தான் வெற்றிமாறனின் 'விசாரணை', ஷோபாசக்தி நடித்த 'தீபன்' படங்களும் விருதுகளை வென்றது. இப்போது 'விசாரணை' ஆஸ்கர் விருதுக்கு இந்தியாவில் இருந்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வெற்றிமாறனுக்கு என் வாழ்த்துகள்.

### உங்கள் முதல் திரைப்படமான 'பான்ஞ்' தொடங்கிக் கடைசிப் படமான 'ராமன் ராகவ்' வரை இந்தியத் தணிக்கைக் குழுவினரால் கண்டபடி குதறித் தள்ளப்பட்டே உங்கள் படங்கள் வெளிவந்துள்ளன. அது உங்களைப் பாதிக்கவில்லையா?

உண்மைதான். எனது ஒவ்வொரு படைப்பிலும் இந்திய அரசின் தணிக்கைத் துறை கை வைத்து எனது சுதந்திரத்தை பறித்துள்ளது. கடந்த பதினாறு ஆண்டுகளாக எனது சுதந்திரத்திற்காக நான் அவர்களுடன் மல்லுக்கட்டி வருகிறேன். அதனால், நான் அவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகவும் இருந்து வருகிறேன். நான் பலமுறை தணிக்கைக் குழுவுடன் போராடியுள்ளேன். முதலில் "பான்ச்" திரைப்படத்துக்காக. அனை வரும் அது தணிக்கையால் தடை செய்யப்பட்ட படம் என நினைத்திருக்கின்றனர். ஆனால், தணிக்கை மறுஆய்வுக் குழு சில



காட்சிகளை நீக்கச் சொல்லி படத்தை வெளியிட அனுமதித்தது. அதுதான் தற்போது இணையத்தில் காணக் கிடைக்கிறது.

"பிளாக் ∴ப்ரைடே" படம் தணிக்கை குழுவின் எந்தவித வெட்டுகளும் இன்றி ஒப்புதல் பெற்றது. ஆனால், வழக்கு நடந்து கொண்டிருந்ததால், நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டது. கடைசியில் 2 வருடங்களுக்குப் பிறகு, நீதிபதி சபர்வால், அந்த வழக்கில் தீர்ப்பு வெளியாகும் முன்னரே, படத்தை வெளியிட அனுமதியளித்தார். கிட்டத்தட்ட ஒட்டுமொத்த படமும் அப்படியே தான் வெளியானது. சிவசேனாவைக் குறிக்கும் ஒரு சில காட்சிகள் மட்டும் வேறு வழியின்றி நீக்கப்பட்டன.

"குலால்" எந்த தணிக்கை சர்ச்சையிலும் சிக்கவில்லை. அதில் இருந்த சில வசனங்கள் மட்டும் நீக்கப்பட்டன. ஆனால், தொலைக் காட்சிக்கான மறு தணிக்கையின் போது நிறைய வெட்டப்பட்டது. "அக்லி" எந்த பிரச்சினையையும் சந்திக்கவில்லை. புகை பிடித்தல் தொடர்பான எச்சரிக்கை விளம்பரத்தை வைக்க மாட்டோம் என சுகாதாரத்துறை அமைச்சகத்துடன் போராடினோம். அப்போதைய அரசாங்கத்துடன் இதுகுறித்து போராட வேண்டும் என நினைத்தது எங்கள் தனிப்பட்ட முடிவே. நீதிமன்ற வழக்கில் நாங்கள் தோற்றோம். படம் எந்த வெட்டும் இன்றி வெளியானது. "வாட்டர்" படத்தில் படப்பிடிப்பே அனுமதிக்கப்படவில்லை.

- சிவதாணு -

கடைசிப் படமான 'ராமன் ராகவ்' படத்தில் சில காட்சிகளில் பூனை ஓர் உருவக வெளிப்பாடாக ஆங்காங்கே சிறப்பாக கையாளப்பட்டுள்ளதாகப் பலரும் என்னிடம் கூறுவதுண்டு. இதுபோன்று பூடகமாக காட்சிப்படுத்துவதோ, எதையும் மறைமுகமாக ஒளித்துக் சொல்லுவதோ எனது பாணி இல்லை. பூனை போன்ற குறியீட்டின் மூலம் காட்சியை நகர்த்தி படமாக்கும் முறைக்கு என்னைத் தள்ளியதே தணிக்கைத் துறையின் கெடுபிடிகள்தான்.

### இளைஞர்களின் வன்முறை கலாசாரம், மதுப் பழக்கம் ஆகியவற்றை ஆதரிப்பதாகவும் கொண்டாடுவதாகவும் உங்கள் படங்கள் குறித்து விமர்சனங்கள் உள்ளதே?

ஒவ்வொருவரது பார்வையும் ஒரே மாதிரி இருப்பது இல்லை. வெவ்வேறு அனுபவங்களையும் வெவ்வேறு அரசியல் நிலைப்பாடு கொண்டவர்களையும் கொண்டுள்ள நாடு இது. எல்லோரையும் திருப்திப்படுத்த

தொடர்ச்சி 20ஆம் பக்கம்




# அடமானக்கடன் பெறுவதில் அரசு ஏற்படுத்தும் புதிய நிலைப்பாடு

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் - 473**

ஒக்ரோபர் 17, 2016 இலிருந்து அடமானக் கடன் பெறுவதில் கனடாவின் மத்திய அரசின் நிதி அமைச்சர் பில் மோனோ (Bill Morneau) புதிய இறுக்கமான கட்டுப்பாடுகளை கொண்டு வருகின்றார். இந்நிலைப்பாடு கடந்த வருடம் லிபரல் அரசு பதவி ஏற்றபின் அடமானக்கடன் மீது ஏற்படுத்தும் இரண்டாவது இறுக்கமாகும். ஏற்கனவே இருந்த 5% ஆரம்ப முதலீட்டிலிருந்து $500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியான வீடு, மனை வாங்கும்போது 10% ஆக அதிகரிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. 5% இருந்து 10% மாற்றம் டிசம்பர் 2015 இல் ஏற்படுத்தப்பட்டது.

### 1வது மாற்றம்

20% இற்குக் குறைவாக ஆரம்ப முதலீடு செய்து ஆதனம் வாங்கும் போது பெறப்படும் அடமானக்கடனின் முறையில் மாற்றம் ஏற்படுகின்றது. புதிய முறையின் பிரகாரம், ஒருவர் அல்லது ஒரு குடும்பம் பெறும் அடமானக்கடனின் பெறும் தொகை குறைக்கப்படுகின்றது. அதாவது ஒருவர் இப்பொழுது அடமானக்கடனை 5 வருட மாறாத அடமானக்கடனாகப் பெறும்போது (5 Years Closed Mortgage) கழிவுபெற்ற அடமான வட்டி வீதத்தினை (Discounted Mortgage Rate) கொண்டே பெறப்படும் அடமானக்கடனின் தொகை கணிக்கப்படும்.



கனேடிய மத்திய வங்கியின் குறிக்கப்பட்ட 5 வருட வட்டி வீதத்தினைக் கொண்டே அடமானக்கடனின் பெறுமானம் கணிக்கப்படும். உதாரணமாக **இன்றைய பெறுமதியின் படி** ஒருவர் 5 வருட மாறாத கழிவுபெற்ற அடமானக்கடன் வட்டிவீதம் 2.30% எனக்கொண்டால் இதனை வைத்தே அவரின் அடமானக்கடன் தொகை கணிக்கப்படும். புதிய கணக்கின் படி கனேடிய மத்திய வங்கியின் 5 வருட வட்டிவீதம் 4.64% இனை வைத்து புதிய அடமானக்கடன் கணக்கிடப்படும். அதாவது புதிதாகக் கடன் பெறுபவரின் கடன்தொகை பெறும் பெறுமானம் குறிக்கப்பட்டளவு குறைக்கப்படுகிறது.

உதாரணம் (1)
வருட வருமானம் $100,000 எனக் கொண்டால் பழைய முறையின்படி இவர் பெறக்கூடிய கடன்தொகை $650,000.
புதிய முறையில் இவர் பெறும் தொகை $512,133 (ஒக்ரோபர் 17, 2016 இற்கு பின்)

குறிப்பு - இந்தமுறை அமல்படுத்தப்பட்ட பின் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையளவு முதல் தடவை ஆதனம் வாங்குபவர்கள் சந்தையில் இருந்து முற்றாக அகற்றப்படுவார்கள்.

### 2வது மாற்றம்

கடன் திருப்பிக் கொடுக்கும் காலம் ஆகக் கூடியது 25 வருடங்களாகவும், ஆகக்கூடிய வீட்டின் விலை $1 மில்லியனாகவும் Credit Score 600இற்கு அதிகமாகவும் காணப்படல் வேண்டும். 20% இற்குக் குறைவாக முதலீடுசெய்து ஆதனம் வாங்கும்போதே இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

### 3வது மாற்றம்

இதுவரை நாம் இருக்கும் வீட்டின் (Principal Home) விற்பனை Canadian Revenue Agency இற்கு காட்டப்படுவதில்லை. எதிர்காலத்தில் சகல விற்றல், வாங்கல்களும் கணக்கிடப்படல் வேண்டும். அத்துடன் CRA இற்குத் தெரியப்படுத்தல் வேண்டும்.

குறிப்பு - Principal Home இல் ஏற்படும் விலை அதிகரிப்பிற்கு (Capital Gain) வரி செலுத்த வேண்டியதில்லை. இது ஏற்கனவே உள்ளது. இதில் மாற்றம் இல்லை.

### 4வது மாற்றம்

அடமானக்கடன் பெறும்போது, நாம் காப்புறுதி பெற்றிருந்தால் (CMHC /

தொடர்ச்சி 20ஆம் பக்கம்


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Footing, Foundation, Framing & Building Envelope

By Experienced Fine Italian Craftsmen & Tradesmen $110/sq ft

(Interior Finishes, Fixtures, Appliances and Painting Extra)



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு

அனுபவம் நிறைந்த, நாணயமான,

தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial & Commercial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

Purchase of the Lot, Building Design, Municipal Fees, and Site Preparation are Not Included in Our Price

# அன்பும் அமைதியும் இரசாயனங்கள்

மகிழ்ச்சி என்றால் என்ன? இதைப் புரிந்து கொள்வதற்குப் பற்பல வழிகள் உள்ளன. ஓர் எளிமையான வழி, இப்போது நீங்கள் அமைதியை இழந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். அமைதியை இழந்துவிட்டால், நீங்கள் முதலில் உங்கள் கணவருடனோ அல்லது மனைவியுடனோ சண்டை போடத் தொடங்குவீர்கள். அங்குதான் முதலில் ஆரம்பிக்கும், இல்லையா? பிறகு மெது வாகப் பக்கத்தில் இருப்பவரோடு சண்டை போடுவீர்கள். அடுத்தது உங்கள் முதலாளி யோடு சண்டை போடத் தொடங்குவீர்கள். உங்கள் முதலாளியோடு சண்டை போடும் போது, நீங்கள் ஒரு வைத்தியரைப் பார்க்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என அனை வரும் புரிந்துகொள்கின்றனர், இல்லையா?


பிறகு ஒரு வைத்தியரைப் பார்க்கிறீர்கள். அவரும் மாத்திரை கொடுக்கிறார். அந்த மாத்திரையை சாப்பிட்டவுடன் அமைதியாகி விடுகிறீர்கள். அந்த அமைதி குறைவான காலமாக இருக்கலாம். ஆனால் நீங்கள் அமைதியாகி விடுகிறீர்கள், இல்லையா? இந்த மாத்திரை என்பது ஒரு சிறிய இரசாயனத் துண்டு. அந்த இரசாயனத்தை முழுங்கியவுடன் உடல் அளவிலும் மன அளவிலும் அமைதியாகி விடுகிறீர்கள். இதை வேறு விதமாகச் சொல்வதென்றால், நீங்கள் அமைதி என்று எதை அழைக்கிறீர் களோ அது ஒரு குறிப்பிட்ட வகையான இரசாயனம்தான். மகிழ்ச்சி என நீங்கள் அழைப்பதும் வேறு வகையான ஓர் இரசாயனம்தான். துன்பம் என்று நீங்கள் அழைப்பதும் இன்னொரு வகையான இரசாயனம் தான். பதட்டம், அழுத்தம், கவலை, பயம், கிளர்ச்சி, களிப்பு இவையெல்லாம் வெவ்வேறு வகையான இரசாயனங்கள். ஒவ்வொரு மனித அனுபவத்திற்கும் பின்னால் ஓர் இரசாயன அடிப்படை உள்ளது.

சரியான இரசாயனத்தை நீங்கள் கொண்டி ருந்தால் அமைதியும் மகிழ்ச்சியும்தான் உங்கள் இயல்பாக இருக்கும். அமைதி யாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பது வாழ்வின் முடிவல்ல, வாழ்வின் தொடக்கம். அமைதியாகக் கூட நீங்கள் இல்லை யென்றால் இன்னமும் நீங்கள் வாழ்க்கை யைத் ஆரம்பிக்கவே இல்லை என்றுதான் அர்த்தம். முட்டாள்தனமான மனதில் மிகவும் சிக்கிப் போய் விட்டீர்கள். இன்னும் நீங்கள் வாழ்க்கையை ஆரம்பிக்கவே இல்லை. அமைதியாக இருப்பதும், மகிழ்ச்சியாக இருப்பதும் ஞானோதயம் அடைவதைப் போன்ற பெரிய விடயமல்ல.

காலை உணவையோ இரவு உணவையோ நீங்கள் அனுபவிக்க வேண்டுமானால் நீங்கள் மகிழ்ச்சியாக இருந்தால்தான் முடியும், இல்லையா? உங்களுக்குள் போராட்டமாக இருந்தால், நீங்கள் உணவை அனுபவித்து உண்ண முடியுமா? நீங்கள் உயிருடன் இருக்க உண்பது என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அதைச் சரியாகச் செய்யக்கூட மகிழ்ச்சி தேவைப்படு கிறது. எனவே அமைதியாகவும் மகிழ்ச்சி யாகவும் இருப்பது வாழ்க்கையின் தொடக்கமா அல்லது முடிவா? அது தொடக்கம் தான், இல்லையா? உங்களால் அமைதியாகக் கூட இருக்க முடியவில்லை என்றால் உங்கள் வாழ்க்கையில் வேறு என்னதான் செய்யப் போகிறீர்கள்? ஆனால் தற்போது மன அமைதியைத்தான் வாழ்க்கையின் உயர்ந்த பரிமாணமாக மக்கள் பிரச்சாரம் செய்து வருகிறார்கள்.

ஆன்மீகவாதிகள் என்றழைக்கப்படுபவர்கள், அமைதியாக இருப்பதுதான் வாழ்வின் உச்சநிலை என்று சொல்லிவருவது மிகவும் துரதிஷ்டவசமானது. எப்படி உணவு என்பது உங்கள் உயிருக்கு ஓர் அடிப்படையோ அதேபோல அமைதி என்பதும் உயிருக்கு அடிப்படையான ஒன்றுதான். அமைதி, மகிழ்ச்சி என்பது ஞானோதயம் பற்றியல்ல, கடவுள் பற்றியல்ல. அது வாழ்க்கையின் துவக்கம், வாழ்க்கையின் இறுதியல்ல. துரதிஷ்டவசமாக உலகில் பெரும்பாலா னோர் வாழ்க்கையை இப்படி தொடங்காத தால் தான் அதை வாழ்வின் இறுதி இலட்சியமாக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். நீங்கள் மன அமைதியுடன் இருக்க முடியவில்லை என்றால் உங்களால் அமைதியாக ஓரிடத்தில் உட்கார முடியாது, மகிழ்ச்சியாகச் சாலையில் நடக்கமுடியாது, உங்கள் வாகனத்தைக் கூட அனுபவித்து ஓட்ட முடியாது, இல்லையா?

எனவே உங்களுக்குள் சரியான இரசாயனத் தை உருவாக்குவது மிகவும் முக்கியமா னது. எப்படி வெளிச்சூழல் நன்மைக்காக ஒரு விஞ்ஞானம் உள்ளதோ, அப்படியே உள்நலத்திற்காகவும் ஒரு விஞ்ஞானம் உள்ளது. மிக நீண்ட நாட்களாக யோகா எனப்படும் அந்த விஞ்ஞானம் கவனிக்கப் படாமல் உள்ளது. வெளிப்புற விஞ்ஞானம் உங்களுக்குச் சௌகர்யத்தையும் வசதியை யும் தரமுடியும், ஆனால் அந்த சௌகர்யமும் வசதியும் உங்கள் வாழ்க்கை யில் எந்த வழியிலும் மாற்றத்தை எடுத்து வராது. உள்சூழ்நிலைக்கான விஞ்ஞானமே சரியான நோக்கத்தை நோக்கி உங்களை இட்டுச் செல்லும்.



## சத்குரு வாசுதேவ்

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

## *4 day Inner Engineering Program*

***led by an Isha teacher trained by Sadhguru in Scarborough and Mississauga from November 03rd to 06th***

***Program Venue***

***Princess Banquet***, 3330 Pharmacy Avenue,
Scarborough (Toronto), ON M1W 3V8

***Park Inn by Radisson***, Toronto Airport West, 175 Derry Road East
Mississauga (Toronto), ON L5T 2Z7

***Program schedule***

Program timings are as follows for each day:

Thursday Nove 03rd: 6:30PM - 9:45 PM | Friday Nove 04th : 6:30PM - 9:45 PM
Saturday Nove 05th : 8:30AM - 7:00 PM | Sunday Nove 06th: 7:30AM - 7:00 PM

Contact Information

***Email: toronto@ishafoundation.org / Phone: 416 300 3010***
***Online registrations: www.innerengineering.com/total***




# பசுமை...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்டுப்படுத்தும் திட்டம் பசுமை வாயுக் களைக் கட்டுப்படுத்தப் போதாது என அறிக்கை வெளியிட்டுள்ளனர். ஆனால் பழமைவாதக் கட்சி யினரோ கனேடியப் பிரதமரின் இந்தப் பசுமை வாயுக்கள் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம் கடுமையானது, நாட்டின் பொருளா தாரத்தைப் பாதிக்கும் என அறிக்கை விட்டுள்ளனர்.



இவ் இரண்டு அறிக்கைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த பிரதமர் புதிய ஜனநாயகக் கட்சியினர் எமது திட்டம் பத்தாது (not going far enough) என்கின்றனர். அதேவேளை பழமைவாதக்கட்சியினர் எமது திட்டம் கூடிவிட்டது (we go too far) என்கின்றனர். இவற்றில் இருந்து கனேடிய மக்கள் எமது திட்டம் சரியான அளவு நடுநிலை வாய்ந்தது (we have got the right balance) என அறிந்து கொள்வார்கள் என்றார்.

இதுவரை அயர்லாந்து, அவுஸ்திரேலியா, சிலி, சுவீடன், பின்லாந்து, பிரித்தானியா மற்றும் நியூசிலாந்து போன்ற நாடுகள் காபன் விலைத்திட்டத்தை தமது நாட்டில் பசுமை வாயுக்களைக் கட்டுப்படுத்த அமல்படுத்தியுள்ளனர்.

# தமிழ் மரபுத் திங்கள் கனேடிய நாடாளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாக்கெடுப்பில் முன்மொழிவு எம்-24 ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒட்டாவா, ஒன்றாரியோ – ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத் திங்களாக அங்கீகரிக்கும் எம்-24 முன்மொழிவு அனைத்துக் கட்சிகளினதும் ஏகோபித்த ஆதரவுடன் கனேடிய நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தனி நபர் முன்மொழிவாக ஸ்காபரோ - ரூஜ் பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவு மே 20ம்திகதியும், செப்ரெம்பர் 29ம் திகதியும் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு ஒக்ரோபர் 5 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டது. விவாதம் நடைபெற்ற இரண்டு தினங்களிலும், அனைத்து முக்கியக் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், கனடாவெங்கும் தமிழ் - கனேடியர்கள் ஆற்றியிருக்கும் பங்களிப்புகளைச் சுட்டிக்காட்டி, முன்மொழிவுக்கு ஆதரவாக உரையாற்றினர்.

"அரசு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத் திங்கள் என அறிவிப்பதன் மூலம், கனேடியச் சமூகத்திற்குத் தமிழ் - கனேடியர்கள் ஆற்றியுள்ள பங்களிப்புக்களையும், தமிழ் மொழியினதும் பண்பாட்டினதும் செழுமையையும், தமிழ்மரபு பற்றிய அறிவையும் புரிந்துணர்வையும் எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஊட்டவேண்டியதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரிக்க வேண்டும் என்பது இந்த அவையின் கருத்தாகும்" என எம்-24 முன்மொழிவு தெரிவிக்கிறது.

"தமிழ் - கனேடியர்கள் நாடுதழுவிய வகையில் எமது சமூகத்திற்கு ஆற்றியுள்ள அளப்பரிய பங்களிப்புக்களையும், தமிழ் மொழியினதும், மரபினதும், பண்பாட்டினதும் செழுமையையும் அங்கீகரிக்கும் வரலாற்று மைல்கல் இது" என ஸ்காபரோ - ரூஜ் பார்க் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி கூறினார்.

ஸ்காபரோ - தென்மேற்கு தொகுதியின் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினரும், நீதித் துறை அமைச்சரின் நாடாளுமன்ற செயலருமான பில்பிளாயர் உரையாற்றுகையில் மிசிசாகா, டுர்காம், ஒட்டாவா, ரொறான்ரோ, மார்க்கம், ஏஜக்ஸ், பிக்கரிங் உள்ளிட்ட நகரசபைகளும், ஒன்றாரியோ மாநிலமும், ரொறென்ரோ கல்விச்சபையும் ஏற்கனவே ஜனவரி மாதத்தை தமிழ் மரபுத் திங்களாக அங்கீகரித்துள்ளதைச் சுட்டிக் காட்டினார். "இது எமது பொருளாதாரத்திற்கும், ஏனைய துறைகளிற்கும் தமிழ் சமூகம் தொடர்ந்தும் ஆற்றிவருகின்ற அளப்பரிய பங்களிப்புக்களிற்குத் தெளிவான சான்று" என அவர் கூறினார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் முன்மொழிவின் முக்கியத்துவத்தை ஆதரித்து சிலாகித்தனர். "தமிழர்களின் உயிர்ப்பான பண்பாட்டையும், மரபுகளையும், நீண்ட வரலாற்றையும் சக கனேடியர்களுக்கு வெளிக்காட்டவும், அவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும் இந்த முன்மொழிவு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கும்" என மார்க்கம் - யூனியன்வில் தொகுதிக்கான கொன்சவேற்றிவ் நாடாளுமன்ற உறுப்பினர் பொப் சொரோயா (Bob Saroya) விவாதத்தின் போதான தனது உரையில் தெரிவித்தார். இந்த முன்மொழிவுக்கு ஆதரவு தெரிவிப்பது "கனடா பன்முகத்தன்மையால் பலம் பெறுகிறது" என்பதை ஏற்றுக்கொள்வதை நோக்கி முன்வைக்கப்படும் இன்னொரு அடி என வன்கூவர் - கிழக்குத் தொகுதியின் என்.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஜெனி குவான் முன்மொழிவை ஆதரித்து ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.

"இந்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டதானது கட்சி எல்லைகளைக் கடந்ததோடு, பல ஆண்டுகளாக பல்வேறு அரசமட்டங்களையும் பல்வேறு அரசியல் சார்புநிலைகளையும் கொண்ட அரசியல்வாதிகளினதும், சமூகத் தலைவர்களினதும், சமூக அமைப்புக்களினதும் ஒருங்கிணைந்த பரிந்துரையாலும் பங்களிப்புக்களாலும் எட்டப்பட்ட அடைவாகும். இந்த முக்கியமான அடைவை எட்டுவதற்கான எம் அனைவரினதும் ஒருங்கிணைந்த ஒருமுகப்பட்ட முயற்சிக்கு இது சான்று" என ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

முதன் முதலாக கனடா தழுவிய வகையில் நாடாமன்றத் திடல் உட்பட்ட இடங்களிலே தமிழ் மரபுத் திங்களைக் கொண்டாடும் நிகழ்வுகள் ஜனவரி 2017ல் ஆரம்பமாகும். இவை கனடாவின் 150ஆம் ஆண்டு நிறைவையொட்டிய கொண்டாட்டங்களுடன் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கு:
கௌதமன் குருசாமி,
நிறைவேற்று உதவியாளர் - 416-845-4692


பல்லுப் போனால் சொல்லு போச்சு
CAN YOU AFFORD YOUR DENTIST BILLS ???
WHY YOU NEED TO DO DENTAL, VISION & HEARING PLAN ???

Dental, Vision, Hearing Plan
3 in 1 Combined Coverages

- YEAR 1 : 60% Coverage, YEAR 2 : 70% Coverage, YEAR 3 : 80% Coverage, YEAR 4+ : 90% Coverage
- 10% household discount if two or more people live in same address
- Some coverages cover day one
- Client will qualify for UCT member benefits.

பல், கண், காது
மூன்று உறுப்புகளையும் காப்பதற்கான ஒரே காப்புறுதி



Nimal Subramaniam
Financial Advisor
Dir: 416 816 7994
Web: www.nimalInsurance.com
Email: neel900@hotmail.com

KABIS
KABIS & ASSOCIATES INC.
A Solution Company
UCT LaCapitale iA Financial Group

Life Insurance · Non-Medical Insurance · Critical Illness Insurance · Disability Insurance · Mortgage Insurance · Travel Insurance · Super Visa Medical Coverage · Drug and Dental Plan · TFSA · RESP · RRSP · LIRA · LIF

# யாவரும் அறிந்திட இலகு தமிழில், அறிவியல்
# அந்த மூன்று நிமிடங்கள்
# (பேரண்டத்தின் பரிணாம மாற்றத்தைக் கூறும் கதை)

அந்த மூன்று நிமிடங்களுள் நுழைவதற்கு முன்னால்

தலைப்பினைப் பார்த்துவிட்டு, பாக்கிய ராஜாவின் 'திரைப்படம்' போன்றதோ என எண்ணி விடாதீர்கள். இது எங்கள் பேரண்டம். இன்று இருக்கும் நிலைக்கு வருவதற்கு எப்படியான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டது என்பதனைக் கூறும் கதை. இது விஞ்ஞானமோ, அல்லது மண்டையைப் பிச்சுக் கொள்ளும் அறிவியற் சிக்கல்களால் பின்னிப் பிணைந்த ஒன்றோ அல்ல, யாவருமே வாசித்து இலகுவில் புரிந்து கொள்ளக் கூடிய, புரிந்து கொள்ள வேண்டிய கதை. நான் கலைப் பட்டதாரி, நான் தமிழ் இலக்கியவாதி, நான் ஒன்றும் பெரியதாகப் படிக்கவில்லை என்பவை போன்ற தடுமாற்றங்கள் எதுவும் தேவையில்லை. இன்னமும் நான் உயிரியல் பிரிவிற் படித்தனான், எனக்கு இயற்பியல் கொஞ்சம் சிக்கலாக இருந்தது என்ற சிலேசங் கூடத் தேவையில்லை. தைரியமாக இப்பகுதியை – கதையைப் படியுங்கள். பின்னர் உங்களின் அறிவியல் நிலையை அளந்து பாருங்கள். தலை சில பாகையால் நிமிர்ந்துவிடும். தேவையானது மன ஒன்றிப்புடன் தொடர்ந்து வாசியுங்கள். இது ஓர் மர்மக் கதையல்ல, மறைந்து கிடக்கும் பிரபஞ்ச உண்மைகளைக் கூறும் உண்மைக் கதை. ஒரு கதையின் பின்புலத்தைத் தெரிந்து கொண்டால் கதையினைச் சிக்கலின்றித் தெரிந்து கொள்ளலாம். திகில், பரபரப்பு, மர்மம் என்பவை கொண்ட கதைகளில், கதையின் பின்புலம் கதையின் முடிவுகளில்தான் சில சமயங்களில் வெளிப்படும். ஆனால் இதுவோ அறிவியற் கதை என்பதால், முன்னதாகவே கதைக்கான பின்புலத்தைக் கூறுகின்றேன். ஆனாலும் அந்த மூன்று நிமிடங்களின் அறிவியற் பரபரப்பு கொஞ்சம் கூடக் குறையாது என்பதனைக் கூறிக் கொள்கிறேன்.



பிரபஞ்சம் - பேரண்டம் - புடவி என்பதெல்லாம் இன்று நம்மவர்கள் கூறிக் கொள்ளும் பிரபஞ்சத்தையே குறிப்பிடுகின்றன. ஆங்காங்கே இம்மூன்று பெயர்களும் வருமெனக் கூறிக் கொண்டு, எங்களின் அந்த மூன்று நிமிடங்களுக்கான பின்புலத்தை அறிந்து கொள்வோம்.

எங்களது பேரண்டம் எவ்வளவு பெரியது. குறுக்குப் பாட்டிலோ, நீளப்பாட்டிலோ அல்லது உயரப் பக்கமாகவோ, அது பரந்து கிடக்கும் பரப்பை அளந்து முடிக்க முடியாது. அவ்வளவு பெரியது. இப் பேரண்டத்துள் தான் எத்தனை எத்தனை பொருட்கள். இருண்டு கிடக்கும் இப்புடவியினுள் கணக்கிட முடியாத அளவில் பெரும் தூசிக் கூட்டங்கள் இருக்கின்றன. எண்ணிட முடியாத அளவிற் புவியினைப் போன்ற உலகங்கள் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எங்களது புவி சுற்றி வருகிறதே கதிரவன் (அதுதான் சூரியன்) என்கின்ற விண்மீன், அது போன்ற கோடான கோடி விண்கள் இருக்கின்றன. தம்முள், தூசுக் கூட்டங்கள், கோள்கள், விண்மீன்கள் எனக் கோடிக் கணக்கில் வைத்திருக்கும் பால்வழி போன்ற பல கோடி கலக்கிகளும் எங்கள் பேரண்டத்துள் ஓடித் திரிகின்றன. பல பெரும் பாரமான பலகோடி கருந்துளைகளையும் எங்களது பேரண்டம் கொண்டிருக்கின்றது. அதனால் தான் பேரண்டம் இவ்வளவு பெரியதாகவும் பாரமானதாகவும் இருக்கின்றதோ என நீங்கள் கேட்கலாம். இன்னமும் சடப் பொருட்கள் அல்லது இருண்ட சடங்கள் என, எங்களால் கண்டுகொள்ள முடியாத, ஏதோ விளைவுகளை மாத்திரம் ஓரளவுக்கு அறிந்து கொள்ளக் கூடியதானவைகளும் இருக்கின்றன. அவையெல்லாம் விஞ்ஞானிகளால் கிட்டத்தட்ட முற்றாகவே நிரூபிக்கப் பட்ட சமாச்சாரங்கள். எனவே அறிந்து கொண்டாலே போதும்.

இவையெல்லாம் எப்படி பேரண்டத்துள் இருக்கின்றன? எப்படி வந்தன? என்ற கேள்வி உங்களுக்கு வந்திருக்கும். இதுதான் கடவுளின் அற்புதம் என்று விட்டுச் சும்மா இருக்காதீர்கள். அதனையும் அறிந்து கொள்வதற்கான வழிகளை எங்களுக்கு ஆண்டவனே தந்துள்ளான். அறிந்து கொள்வோமே.

மேலெழுந்த கேள்விகளுக்கான விடைகளின் ஆரம்பப்புள்ளிதான் அந்த மூன்று நிமிடங்கள்.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பேரண்டம் பெருத்த வேகத்தில் விரிவடைந்து கொண்டு இருக்கின்றது. அதனால் பேரண்டத்துள் உள்ளவை அவ்விரிவுக்கு ஏற்ப விரிந்து கொண்டு போகவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்கள் உட்பட எல்லாமுமே விரிந்து பரந்து விரிந்து



இருக்க வேண்டும். ஆனாலும் அப்படி ஒன்றும் நிகழ்வதில்லை. ஏனென்றால், பேரண்டத் துள் இருப்பவற்றை இயற்கை நான்கு விசைகளினால் அல்லது நான்கு விளைவு களால் கட்டி வைத்திருக்கிறது. அவை ஈர்ப்புவிசை, வலிந்தவிசை, மெலிந்தவிசை, மின்னையும் காந்தத்தையும் காட்டும் மின்காந்தவிசை என்பவையாகும். இருண்ட பென்னாம் (மிகப்) பெரிய பேரண்டத்துள் இங்குமங்குமாக வெளிச்சத்தைத் தந்து கொண்டிருக்கும் ஒளி மின்காந்த விளைவே ஆகும்.


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca





**MOHAN**
**HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

**WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:**

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537/416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



**யோகா சோதிடம்**

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்களின் நூல்
# 'கனடா ஒரு பரிணாமத்தின் பார்வை'

## *Canada An Evolving Vision*

அடுத்த வருடம் வரும் கனடாவின் 150வது பிறந்த தினத்தினை முன்னிட்டு அறிஞர் சாமி அப்பாத்துரை அவர்களின் இவ் ஆங்கில நூல் வெளியிடப்பட்டிருந்தது

ஏற்கனவே அவரது இரு நூல்கள் ஆங்கிலத்தில் வெளியாகியிருந்தது.

இந்த நூலில் என்ன விடயம் வாசகர் ஒருவர் தெரிந்து எடுக்க வேண்டுமோ அந்தப் பகுதிகள் யாவும் A-Z வடிவ ஒழுங்கில் இறுதிப் பக்கங்களில் சேர்க்கப் பட்டிருக்கிறது. இந்த நூலை உசாத்துணை நூலாக தேட வேண்டியவர்களுக்கு இது இவ்வாறு இலகுவாக்கப்பட்டிருப்பது ஒரு நல்ல விடயமாகும். அதேநேரம் இந்த ஆங்கில நூலை உருவாக்குவதற்காக நூலாசிரியர் உசாத்துணை செய்த சகல நூல்களையும் இறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

கனடா தனித்தன்மையானது என்ற தலைப்பு டன் இந்நூலின் முதல் அத்தியாயம் ஆரம்பிக்கப்படுகின்றது. இதில் கனடாவில் ஒவ்வொரு தனிமனிதனும், அவர் எந்த மொழி? எந்த நாட்டின் பூர்வீகமாக இருந்தாலும், யாவரும் சமம் என்பது அரசியல் அமைப்பு சட்டத்தில் வலியுறுத் தப்பட்டு, அது எப்படி கௌரவமாக பேணப் படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளோடு ஒப்பிட்டு கனடாவின் தனித்துவம் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

15ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா, பிரான்ஸ், ஐரிஸ், ஸ்கொட்லாந்து குடியேற் றவாசிகளால் ஆட்சி ஆரம்பிக்கப் பட்டது. தொடர்ந்து கனடாவின் புகையிரத பாதை களின் உருவாக்கத்திற்காக ஐரோப்பாவின் கிழக்கு, தெற்கு நாடுகளிலிருந்து குடி யேற்றவாசிகளை வரவழைத்தனர். அடுத்த கட்டமாக கனடாவின் வளர்ச்சிக்கு ஐரோப் பியர்களின் வருகை குறைந்தமையால் ஆசியர்களுக்கான பாதை அகலமாக திறக்கப்பட்டது. சர்வதேச நாடுகள் எங்கும் பிரயாணம் செய்யும் போது அந்தந்த நாடுகளின் குடிவரவு பிரிவுகளில் கனடிய பாஸ்போட்க்கு உள்ள கௌரவம் பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

நோக்கமும் பார்வையும் என்ற தலைப்பில் உள்ள அத்தியாயத்தில் பின்வரும் விடயங் கள் குறிப்பிடப்பட்டுள்ளது. கனடாவின் மரபுரிமை பிரித்தானியா, பிரான்ஸ் குடி யேற்றவாசிகளினால் ஆரம்பிக்கப்பட்டு அவர்களின் இரு மொழிகளும் தேசிய மொழிகளாக இருந்தபோதும் சுமார் 200 நாடுகளிலிருக்கும் 160 மொழிகளை வளர்ப் பதற்கும் மற்றும் கலாச்சாரங்கள், பண்பாடு களை பேணுவதற்கும் என்றுமே தடை யில்லை. அவர்கள் என்றும் கனேடியர் களாகவே கருதப்படுவர். உலகின் பல நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் அமெரிக்கா, கனடாவின் உள்நாட்டு அலுவல்கள் திட்டமுறைகளில் வெளிப்படை யாகத் தலையிடவோ, ஆதிக்கம் செய்யவோ அனுமதிப்பதில்லை. ஆனால் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு ஆபத்து வரும் இடங்களில், கனடா உதவிகரம் நீட்டியுள்ளது. கனடாவின் மூலவளம் கனடாவிலேயே பயன்படல் வேண்டும். கனடாவினுள் இயங்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடுகளும் கனேடி யர்களுக்கே முதலில் பயன்படவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவை உட்பட பல் வேறு வகையான கனடாவின் நோக்கமும், பார்வையும் கோட்டுபாடுகளுடனும், உதார ணமாக வரலாற்றுச் சம்பவங்களுடனும் இங்கு தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

குடிவரவும் குடியகல்வும் என்ற நான்காம் அத்தியாயத்தில் தொடர்ச்சியாக சுமார் 137 பக்கங்களில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் விசேடமாக இவற்றினை ஓர் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் கற்றுக் கொள்ள விரும்புபவர்களுக்கு மிகத்தேவை யான பகுதியாகும்.

- குடிவரவில் பொதுவான போக்கு.
- சர்வதேச ரீதியில் குடிவரவாளர்கள்.
- குடிவரவில் சொல்லப்படாத உண்மைகள்.
- ஒரு புறசார்பான இனவாதம் (1919 ஆம் ஆண்டில் ஆசிய நாடுகளின் மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் விவ சாயத்தொழிலில் மட்டும் தேவைக்காக அங்கீகரித்திருந்தார்கள்).
- புகையிரதப் பாதைகள் உருவாக்குவதற் காக, அதன் தேவைகளுக்காக அனுமதிக் கப்பட்டு அகதிகளின் தொகை.
- தொடர்ந்து பல்வேறுபட்ட காலங்களில் குடிவரவுக் கொள்கைகளில் பரிணாம மாற்றங்கள்.
- பல்கலாச்சாரக் கொள்கைகள்.
- திறமைசாலிகளின் சுய ஸ்பொன்ஸர் அங்கீகரிக்க மதிப்பிடும் மதிப்பு எண்கள்.
- மாகாண ரீதியிலான பரவலாக்கம்

என ஏராளமான விடயங்களை புள்ளிவிபர தகவல்களுடனும் பல சட்டப் பிரிவுகளின் தெளிவுரைகளுடனும் நூல் ஆசிரியர் இங்கு வெளி கொணர்வது மிகச் சிறப்பான ஓர் விடயமாகும்.

குடிவரவாளர்கள் விடயத்தில் இன்றைய பிரதமரின் பார்வை உட்பட நூலின் முன் அட்டைப் படத்தில் குறிப்பிட்ட மாதிரி, பன்னாட்டு மக்கள், பன்னாட்டு கலாச் சாரங்கள் என்ற பல வண்ணச் சதுர கட்டைகளினால் படிப்படியாக காலம் காலமாக கட்டி எழுப்பப்பட்டு வரும் கனடாவின் பரிணாம வளர்ச்சியில் மூன்றாம் தலைமுறையின் பார்வை எப்படியிருக்கும் என்பதும் நூலாசிரியர் இங்கு விபரிக்கத் தவறவில்லை. அவை அனுபவரீதியாகக் கண்ட உண்மை. ஏனெனில் ஈழத்தமிழர் பலரும் கனடாவில் தற்போது இரண்டாம் தலைமுறையின் மத்தியில் வாழ்கின்றோம்.

அறிஞர் சாமி அப்பாத்துரையின் அரசியல் ஆய்வுக் கண்களோடு கூடிய இந்நூல் மிகவும் கருத்தாழமிக்கது. ஆங்கிலத்தினை இரண்டாம் மொழியாகக் கொண்டு ஈழத்திலிருந்து கனடாவில் குடியேறிய ஒருவரது ஆங்கில மொழி ஆற்றல் வரிக்கு வரியாக அபாரமான அறிவியல்துறை சார்ந்த நிபுணத்துவங்களுடன் இங்கு நிரூபிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே இந்த ஆசிரியர் ஆங்கிலத்தில் ஏற்கனவே இரு நூல்களை வெளியிட் டுள்ளார். அவையாவன

1 Canada - The Meat of the World Sandwich

2. Canada - A Nation in motion


கனேடிய அரசியல், பொருளாதாரம், வரலாறுகளை ஆர்வமுடன் படிக்க விரும்பு வர்கள், இத்துறையில் பணி புரிபவர்கள், ஆய்வுகளை மேற்கொள்பவர்கள், கனேடிய அரசின் கொள்கை வகுப்பாளர்கள் (ஒரு ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சியினை நெறிப்படுத்தும் எதிர்க்கட்சிகள் போல இந்நூலும் இதில் உள்ள விமர்சனங்களும் அவர்களுக்கு நிச்சயம் தேவைப்படும்) போன்றவர்களுக்கு இந்நூல்கள் அதிக பயன்பாடு உள்ளதாகும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் ஆங்கில நூல்களைப் படிக்கும் சமூகத்தில் ஒரு குறுகிய வட்டத்தினரே இந்நூலின் வாசகர் களாக இருக்கப்போகிறார்கள் என்பதில் என்னைப் பொறுத்தவரையில் சந்தேகமில்லை.

ஓர் ஆக்கபூர்வமான நூலை பொதுவாக உருவாக்கி முடிப்பது என்பது இலகுவான ஒன்றல்ல. உருவாக்கப்படும் ஒவ்வொரு நூலும் வாசகர்களின் வாழ்வில் சிறிதளவேனும் ஒரு திருப்பு முனையாக இருக்க வேண்டும். என்றும் வாசகன் ஒருவனின் மேசையிலிருந்து அது அவனுக்கு பேசும் ஒரு பொருளாக இருக்க வேண்டும்.

உதாரணமாக சிலவற்றினை இங்கு குறிப்பிடலாம்.

'நெப்போலியன் ஹில்' என்ற ஆங்கில நூல் ஆசிரியர் எழுதிய 'Think & Grow Rich' என்னும் நூல் வெளிவந்து நூறு ஆண்டுகளைக் கடந்தாலும் மீண்டும் மீண்டும் பல பதிப்புகள் வெளிவருகின்றன. 'மனம் தரும் பணம்' என்னும் தலைப்பில் இந்த நூல் தமிழ் நாட்டில் வரிக்கு வரி மொழி பெயர்த்து ஒரு புத்தக பிரசுரக்கம்பனி வெளியிட்டிருந்தது.




'புனித பைபிள்' என்னும் சமயநூல் பல மொழிகளில் வெளிவந்து விட்டது. ஒவ்வொரு வரியினையும் கோடு இட்டு அதனை மீண்டும் மீண்டும் படிக்கும் வாசகர்கள் எத்தனை பேர் உள்ளனர். நூல்கள் என்பது அப்படியல்லவா இருக்க வேண்டும். இப்படிப் பல ஆங்கில, தமிழ் நூல்களை உதாரணமாகச் சொல்லிக் கொண்டே போகலாம்.

உருவாக்கப்படும் ஒவ்வொரு நூலும் ஏதோ ஒரு வழியில் பெரும்பான்மையான வாசகர் களை நின்று நின்று வழி நடத்தும் ஒரு பொக்கிஷமாக இருக்க வேண்டும்.

இந்த நூல் ஆசிரியரின் ஆற்றல்கள், திறமைகள் தமிழ் மொழி அதற்குச் சமனாக ஆங்கில மொழி என பன்முகப்படுத்தப் பட்டது. இப்படிப்பட்ட ஒருவர் தமது மூன்று ஆங்கில நூல்களையும் ஒரே பாணியில் எடுத்துச் செல்லும் வடிவத்திலிருந்து மாறி மக்களுக்கு பரவலாக பயன்படும் வடிவில் சற்று மாற்று வடிவில் ஏன் எடுத்துச் சென்றிருக்கக் கூடாது?

'கனடாவுக்கு வந்து சேர்வதற்குப் பத்து வழிகள்' என்ற தலைப்பில் அவரது வழி காட்டலோடு கடந்த 'விளம்பரம்' இதழில் சுருக்கமான ஒரு தகவலை வெளியிட்டிருந் தோம். இங்கு நூல் ஆசிரியர் சாமி அப்பாத்துரையினைப் பொறுத்தமட்டில் அந்த ஒவ்வொரு தகவல்களுக்கும் நீண்ட ஆய்வுக் கட்டுரை வழங்கும் ஆளுமை படைத்தவர். அப்படித் தகவல்களை வழங்கும் நூல் அத்துறை சார்ந்த இவரைப் போன்ற அனுபவமுடையவர்களால் வெளி கொணர்ந்தால் அது கனடாவுக்கு இடம் பெயர விரும்பும் கனடாவுக்கு வெளியில் வாழும் மக்களுக்கு வரப்பிரசாதமாக அமையும்.

**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*

*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

# சிறுநீரகக் கல்

**நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்**

## *Kidney Stone*

சிறுநீரகம் சார்ந்த பிரச்சினைகள் முன்பை விட தற்போது அதிகரித்துவிட்டன. இதற்கு நம் வாழ்க்கை முறைதான் காரணம். அதிலும் தற்போது பலரும் அவதிப்படுவது சிறுநீரகத்தில் கல் உருவாகும் பிரச்சினை தான். பொதுவாகப் பெண்களுடன் ஒப்பிடும் போது ஆண்களுக்கே சிறுநீரகக் கல் உருவாவதற்கு மூன்று மடங்கு வாய்ப்புண்டு.

### சிறுநீரகக் கல் என்றால் என்ன?

சிறுநீரில் பல வேதிப் பொருட்கள் கலந்துள்ளன. அவற்றுள் சில மணிச் சத்துகள், சில உயிரியல் பொருட்கள் இவை இரண்டும் தகுந்த விகிதத்தில் இருப்பதால் தான் அவை சிறுநீர்த் தரையில் படிந்து திடப்பொருளாகாமல் இருக்கின்றன. சிலருக்கு இதன் விகிதாசாரத்தில் மாற்றமேற்படுவதால் சிறு துகள்களாகவோ, கற்களாகவோ படிய வைக்கின்றன. இவைதான் நாளடைவில் கற்களாக உருவாகின்றன.

### சிறுநீரக கற்கள் உருவாகக் காரணங்கள்

1. சிலருக்குப் பரம்பரையாக சிறுநீரக கற்கள் உருவாகும் உடற்கூறு இருப்பதுண்டு.
2. கற்களை உருவாக்கும் உப்புகள் மிகுந்த உணவுகளை அதிகமாக உண்பதாலும், தினமும் போதுமான அளவு தண்ணீர் அருந்தாததாலும் வரும்.
3. சிறுநீர் பாதையில் அடிக்கடி கிருமித் தொற்று ஏற்படுவதால் கிருமிகள் சிறுநீர்ப் பாதையின் தசைச்சுவரை அரித்துப் புண்ணாக்கும். பின்பு அவற்றின்மீது சிறுநீரின் உப்புகள் படியும்போது கற்கள் உருவாகின்றன.
4. ஆண்களுக்கு 50 வயதிற்குமேல் புரஸ்ட்ரேட் (Prostrate) சுரப்பி வீங்கும் அதனால் சிறுநீர் வெளியேறுவதில் தடை ஏற்படும். இதனால் சிறுநீர்பையில் (Blader) சிறுநீர் தேங்கும். இதன் விளைவுதான் சிறுநீர் கற்கள்.
5. சிலருக்கு பெரா தைரொய்ட்டு (Para Thyroid) இயக்க நீர் மிகையாகச் சுரந்து இரத்தத்தில் கல்சியத்தின் அளவை அதிகரிக்கச் செய்து சிறுநீரக கற்களை உருவாக்கும்.

### சிறுநீர் கற்கள் - அறிகுறிகள்

சிறுநீர் கற்கள் மிகச் சிறியதாகவும் பெரிதாகவும் இருக்கலாம். இவை சிறுநீர்ப்பாதையில் அடைப்பை ஏற்படுத்தாத வரை அறிகுறிகள் தெரிவதில்லை. சிறுநீரகத்திலிருந்து கல் வெளியேறி குறுகிய சிறுநீர் குழாயில் நுழைந்து வெளியேற முடியாமல் தடைப்படும்போது தாங்க முடியாத வலி ஏற்படும். சிறுநீர் வெளியேறுவதில் சிக்கல் உண்டாகும். முதுகில் வலி ஆரம்பித்து அது வயிற்றுப் பகுதியை தாக்கினாலோ பின்பு அது தொடைகள் மற்றும் அந்தரங்க உறுப்பு களுக்குப் பரவினாலோ காய்ச்சல், சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல் போன்றவை இருந்தால் அவை சிறுநீரகக் கற்களின் அறிகுறிகள். இந்தக் கற்கள் சிறுநீர் பாதையின் சவ்வுப்படலத்தை உராய்வதால் தான் இரத்தம் சிறுநீரில் கலக்கும். சாதாரணமாக 8 மி.மீ வரையுள்ள கற்கள் சிறுநீருடன் வெளியேற வாய்ப்புண்டு. அவை பெரிதாக இருந்தால் சிகிச்சை செய்ய வேண்டிவரும்.

### நோய் தடுப்பு முறைகள்

1. எந்த உணவை சாப்பிட்டாலும் நன்கு தண்ணீர் குடிக்க வேண்டும். குளிர் நீரைவிட இளஞ்சூடான நீர் மிகவும் நன்று.
2. ஈரப்பதம் அதிகமுள்ள உணவுவகைகள், நார்ச்சத்து (Fiber) அதிகமுள்ள உணவு கள் சிறுநீரகக் கல் உருவாவதை தடுக்க உதவும். மலச்சிக்கலும், ஜீரணக் கோளாறு களும் வராது பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. வாரம் இரண்டு தடவையாவது வாழைத் தண்டுடன் சிறிது ஓமம் சேர்த்து சூப் செய்து குடித்து வர சிறுநீரகத்திலுள்ள கழிவுப் பொருட்கள் முற்றாக வெளியேறும்.
4. குறிப்பாக கோடைகாலத்தில் வியர்வை மூலம் உடலிலுள்ள நீர் வெளியேறுவதால் சிறுநீரின் அளவு குறைந்து சிறுநீர்ப்பாதை வரண்டு அங்கு கற்கள் உருவாக வாய்ப்புள்ளதால் அந்நேரம் அதிகளவு தண்ணீர் உட்கொள்ள வேண்டும்.
5. மிருகங்களின் இறைச்சி வகைகளை அதிகமாக உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.
6. முட்டைக்கோஸ் முள்ளங்கி, வெங்காயம் என்பன சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கின்றன.
7. பொரித்த உணவுகள் மற்றும் மசாலா அதிகம் கலந்த உணவுகளை முடிந்தவரை தவிர்ப்பது நல்லது.

### சிறுநீரகக் கற்களும் யோகா பயிற்சியும்

யோகாசனப் பயிற்சி மேற்கொள்பவர் களுக்கு நாம் அறிந்த வரை சிறுநீரக கற்கள் உருவாவதே இல்லை. அதுமட்டு மன்றி ஒருவருக்கு சிறுநீரகத்தில் உருவான கற்களை கரைக்கும் திறன் இந்த யோகாசன முறைகளுக்கு உண்டு.

முதலில் சிறுநீர்ப்பாதையில் அடைப்பை ஏற்படுத்தும் கற்களை மண்டுகாசனம், சலபாசனம் என்பனவற்றை 5 நிமிடங்களா வது தினமும் செய்துவர அவை கரைந்து சிறுநீருடன் வெளியேறும். இந்த ஆசனங்கள் பழகுவதற்கு இலகுவானது. வாரம் இருமுறையாவது பயிற்சி செய்பவர் களுக்கு சிறுநீரகக்கல் Kidney Stone உருவாகக்கூடிய சாத்தியம் இருக்காது. அடுத்து பின்புறம் வளைந்து செய்யும் ஆசனங்கள்: புஜங்காசனம், பிறையாசனம் என்பன சிறுநீரகத்திலிருந்து கற்களை சிறுநீர்ப்பாதைக்குத் தள்ளி சிறுநீர்ப்பையில் செலுத்தக்கூடிய சக்தி வாய்ந்தவை.

மேலும் உட்டியான பந்தம் என்னும் கிரியை முறை ஒன்று உள்ளது. இதனை முறைப்படி ஒரு யோகாசன ஆசிரியரின் உதவியுடன் சரிவர செய்து வரும்போது சிறுநீரகத்திலுள்ள கற்களும் இதர கழிவுகளும் முழுமையாக வெளியேறும். இவற்றுடன் சேர்த்து விபரித கரணி ஆசனத்தையும் செய்துவரும் போது சிறுநீரகக் கற்களானது 3 முதல் 4 வாரங்களில் முழுமையாக நீங்கிவிடும்.






C - 416.617.5721
H - 416.289.2033 after 7:00pm

# அமெரிக்க...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

பெண்ணுடனும் சேர்ந்து ஒரு தொலைக் காட்சிப் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்தினார். இதில் அவர் Hillary Clinton தனது கணவன் மீது குற்றம் சுமத்திய வர்களை கீழ்த்தரமாக நடத்தினார் என்றும், 12 வயதுப் பெண்ணை பாலியல் வல்லுறவு செய்தவருக்கு ஆதரவாக Hillary சட்டத்தரணியாக இருந்து வாதிட்டார் எனவும் பல குற்றச்சாட்டுக்களை Hillary மேல் வைத்திருந்தார்.

மேலே கூறப்பட்ட இரண்டு விடயங்களும் ஜனாதிபதி வேட்பாளருக்கு இடையேயான விவாதத்தில் வந்தது. இவ்விவாதத்தின் போது Donald அமெரிக்காவினுடைய தற்போதைய மருந்துவ சுகாதாரத் திட்டத்தைக் குறைகூறி அது தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கு Hillary ஆதரவு அளிப்பதாகவும் கூறினார். அத்திட்டம் கனடாவின் மருத்துவ சுகாதாரத் திட்டம் போல் மருத்துவ உதவி கிடைக்க நீண்ட காலம் காத்திருக்கவேண்டிய நிலையை உருவாக்கும் என்று கூறினார். கனேடியர் கள் இவ்வாறு நீண்டகாலம் காத்திருக்க முடியாமல் பெருமளவில் அமெரிக்கா வருவதைச் சுட்டிக்காட்டினார்.



இவற்றைவிட Hillary மீது நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவாறு தனது சொந்த மின்அஞ்சல் உபகரணங்களை பாவித்ததாகக் Donald குற்றம் சாட்டினார். தான் ஜனாதிபதி பதவியில் இருந்திருந்தால் Hillary யை சிறையில் தள்ளியிருப்பேன் என்று கூறினார்.

விவாத இறுதியில் Donald இன் பிள்ளைகளின் மரியாதை கொடுக்கும் மற்றும் திறமைகளை மெச்சி அவர்களை அவ்வாறு வளர்த்ததிற்காக Donald ஐ மதிப்பதாக Hillary கூறினார். அதேபோல் Donald உம் Hillary யின் விடாமுயற்சியை யும் அவரின் திறமையையும் தான் மதிப்பதாகக் கூறினார். இருவருடைய விவாதமும் இறுதியில் ஒருவருடன் ஒருவர் கைகொடுப்பதுடன் முடிவடைந்தது.

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இடையே யான மூன்றாவதும் இறுதியுமான விவாதம் 2016 ஒக்ரோபர் 19இல் நடைபெற உள்ளது.



# சைவசித்தாந்தத்தின் ஒளியை உலகெங்கும் பரப்பிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் குருபூசை

சிவதொண்டன் - தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை - கனடா

சைவ உலகத்திற்கு அளப்பரிய சிவதொண்டு செய்வதற்கு 1927 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி வடஅமெரிக்காவில் கலிபோனியாவில் ஜனனம் செய்த ஒரு அவதார புருஷர் எங்கள் குருதேவர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். அவர் இளம் பராயத்திலேயே தமது பெற்றாரை இழந்து விட்டார். இவரின் பூர்வ புண்ணியவசமாக இருபது வயதிலேயே இவருக்கு ஆன்மீக உதயம் ஏற்பட்டு துறவு நிலைக்கு ஆளாகி விட்டார். உலக பந்தங்களைத் துறந்து பரம சிவ தத்துவங்களின் மகத்துவத்தை உணர்வ தற்காகத் தவத்திலும் தியானத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவரது தூய்மை யான யோகப் பயிற்சியினால் அவருக்கு முழுமையான ஞான அறிவு கிட்டியது.

குருவருளைப் பெற்று பின்பு திருவருளை அடையும் பெருநோக்குடன் ஞானபுருஷரான குருதேவர் தமது இருபத்திரண்டு வயதில், கொழும்புத்துறையில், மிக எளிமையான முறையில் அன்பர்களுக்கு அருட்கடாட்சம் அருளிவந்த எங்கள் ஞானகுரு சிவயோக சுவாமிகளின் அருட்கண் பார்வையுடன், இளந்துறவியாகிய திருநாள் 1949 ஆம் ஆண்டு வைகாசிப் பூரணை தினமாகிய ஒரு நிறைந்த நாள். அன்றைய தினம் சிவயோக சுவாமிகள் இளந்துறவியாகிய குருதேவருக் குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். தீர்க்கதரிசியான எங்கள் சிவ யோகசுவாமிகள் சைவசித்தாந்த தத்துவங் களையும் சைவக் கோயில்கள் கட்டி எழுப்பும் திருப்பணிகளையும் முறையே உலகெங்கும் பரப்பியும் செயற்படவும் மிகப் பரந்த நோக்குடன் குருதேவரை இனங்கண்டு அந்தப் புனிதமான மிகப்பொறுப்புள்ள சிவ-தொண்டினைச் செய்யும்படி கட்டளையிட்டு, குருதேவருக்கு அருள்செய்தார்.


குருதேவரும் தமது குருவின் விருப்பப்படி அமெரிக்காவிற்குத் திரும்பி வந்து தனது ஞானகுரு உபதேசித்தபடி சிவப்பணியாக நிறைந்த மனதுடன் நெறி தவறாமல் "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க", "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற முழு நம்பிக்கையுடன் கர்ம வீரராகச் செயற்பட ஆரம்பித்தார். உலகம் முழுவதும் வியந்து பாராட்டத்தக்க சிவதொண்டுகள் பலவற்றை ஆக்கபூர்வமாக செய்தார்.

உலகத்தின் கிழக்கில் இந்தியாவிலே ஒரு புண்ணிய காசிஷேத்திரம் போல், சைவ மக்களுக்கு மேற்கில் அமெரிக்காவில் வைலுவ நதிக்கரையில் அமைந்திருக்கும் குவை சைவ சித்தாந்த ஆச்சிரமும் அங்கு வெகு விரைவில் பிரதிஷ்டை செய்யப்பட விருக்கும் சன்மார்க்க இறைவன் கோயில், மிக அற்புதமான முறைகளில் நிர்மாணிக் கப்பட்டு வருகிறது. இதன் திருப்பணிகள் பூரணமாக நிறைவேறுதற்கு உலகெங்கும் வாழும் சைவ மக்கள் யாவரும் குவை சைவசித்தாந்த ஆச்சிரமத்துடன் தொடர்பு கொண்டு நன்கொடையாக நிதி வழங்கி குருதேவருக்கு எங்கள் நன்றிக் கடனைச் செலுத்துவது முக்கிய கடமையாகும்.

சைவ உலகின் ஒளிச்சுடராக விளங்கிய குருதேவர் அவர்கள் 13ஆம் திகதி நவம்பர் மாதம் 2001 ஆம் ஆண்டில் கனடா நேரப்படி காலை 5:54 மணியளவில் மகாசமாதியாகி சிவனின் பொற்பாதங்களை அடைந்து சிவசோதியுடன் கலந்து கொண்டார்.

ஒரு பொல்லாப்புமில்லை
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
நாம் ஒன்றுமறியோம்
முழுவதும் உண்மை. - சிவயோக சுவாமிகள்

குருதேவர் சமாதி நிலை அடைந்து 15 வருடங்கள் பூர்த்தியாகிய 15 வது மகா குருபூசை, ஐப்பசித் திங்கள் சித்திரை நட்சத்திரமன்று ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி, 2016, சனிக்கிழமை ஆகும். இந்த நிலையில் சைவசமய அன்பர்கள் யாவரும் எங்கள் நாளாந்த காலை, மாலை கடவுள் வழிபாடுகளிலும், பிரார்த்தனைகளிலும்



எங்கள் குருநாதன் சிவயோக சுவாமிகளை யும், சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி களையும் மனம் கசிந்து வழிபடுவோமாக! எங்கள் நாளாந்த வாழ்க்கையிலும் அவர்கள் காட்டிய வழியில் ஆணவத்தை நீக்கி, ஆன்ம ஈடேற்றத்திற்குச் சிவநாமத்தைச் சொல்லி ஒளிமயமான வாழ்க்கைப் பாதையில் செல்வோமாக!

வாழ்க, வாழ்க சிவயோக குருபரன் திருவடி வாழ்க!
வாழ்க, வாழ்க குருதேவர் திருநாமம் வாழ்க!
வாழ்க, வாழ்க, மேன்மைகொள் சைவநீதி வாழ்க!
வாழ்க, வாழ்க, இவ்வையகம் வாழ்க!

ஓம் நமசிவாய! ஓம் சாந்தி!

Second Career
Planning for a New Career or Upgrading Your Skills?
Find Out:
- Which program best suits your skills?
- What government funding is available for you?
- Which careers have the best job opportunities?



- EENC is an award-winning service network that is connected to 100's of Training Institutions and Employers.
- We are NOT a Training Institution.
- Our services are free and you are under no obligation.

Join 100's Who Say They're Glad That They Called Us First

EENC.ca Employment and Education Network Canada Inc.
2016 readers' choice Awards WINNER
2016 readers' choice Awards DIAMOND
Nira (Mon to Fri 9AM to 5 PM)
(416)-224-5020 Ext: 201
தமிழில் விபரங்களிற்கு:
(416)-224-5020 Ext 205
Second Career மற்றும் அரச நிதியுதவி பற்றிய விபரங்களிற்கு அழையுங்கள்:

BUSINESS / LAW CAREERS
Accounting ♦Payroll Admin ♦Business Administration ♦ERP Information System Analysis ♦Banking and Financial Services ♦Paralegal / Law Clerk ♦Property Administrator ♦Hospitality Management ♦Tourism Management ♦Police Foundations/ Immigrant Consultant ♦Supply Chain & Logistics ♦Business Management ♦Business Analysis, Projects & Service Management ♦PMP ...

IT CAREERS
Network Administration ♦Graphic/Web Designer ♦Software Quality Assurance and Testing Diploma ♦Network Security Specialist ♦Web & Mobile Developer ♦CISCO ♦LINUX ♦Software Quality Assurance and Testing ♦ITIL ♦Datawarehousing & Business Intelligence ...

HEALTHCARE & Related
Medical Office Administration ♦Diagnostic Cardiovascular Sonography♦ ECG/Phlebotomy ♦Aesthetician/ Make-Up Artist ♦Hair Stylist ♦Community Service Worker ♦Personal Support Worker(PSW) ♦Massage Therapist ♦Pharmacy Technician ♦Early Childhood Assistant(ECA) ♦Medical Laboratory Technician ♦Physiotherapist Assistant and Occupational Therapist Assistan♦Food Service Worker ♦Intra Oral Dental Assistant ♦Addiction Worker ...

TRADES
HVAC Technician ♦Gas Technician-G3/G2 ♦Home Inspection ♦Construction & Maintenance Electrician Pre-Apprenticeship ♦Electrical Technology ♦Home Renovation Technician ♦Industrial and Commercial Maintenance ♦Civil / Mechinacial / Engineering ♦Welding / Solar Energy Technician ...

ENGINEERING / DESIGN
Civil Engineering Design and Technology ♦CNC and MasterCAM Technology ♦Mechanical Engineering Design and Technology ♦Structural Engineering Design and Technology♦Electrical and Electronics Engineering Design & Technology ...

PHARMACEUTICAL
Pharmaceutical Manufacturing ♦Pharmaceutical Quality Control ♦Regulatory Affairs ♦Research & Development ♦Industrial Pharmaceutical and Bio-Pharmaceutical Modern Technology ♦Pharmaceutical and Bio-Pharmaceutical Clinical Research ..

# தோப்புக் கரணம்

## *Super Brain Yoga*



நாம் தெரிந்தோ தெரியாமலோ செய்துள்ள குற்றங்களுக்காக ஆலயத்திலுள்ள விநாயகர் சிலை முன் தோப்புக் கரணம் போட்டபடி பாவ மன்னிப்புக் கேட்கின்றோம். தோப்புக் கரணம் போட்டபடி, 'நல்ல புத்தியைக் கொடு சாமி' எனக் கேட்கின்றோம். பாடசாலைகளில் தவறு செய்தாலோ, வீட்டுப் பாடம் எழுதி வரா விட்டாலோ ஆசிரியர்கள் மாணவர்களைத் தோப்புக் கரணம் போட வைப்பதனை மறந்திருக்க மாட்டோம். காரணம் உண்டு, அப்போது புரியவில்லை. இந்தத் தோப்புக்கரணம் அமெரிக்காவில் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? தோப்புக் கரணம் போடுவதால் ஏற்படும் மாற்றங்களை EEG கருவியால் டாக்டர் யூஜினியஸ் அங் அளந்து காண்பித்தார். மூளையில் நியூரான்கள் செயல்பாடுகள் அதிகரிப்பதை பரிசோதனையில் காண்பித்த அவர் மூளையின் வலது, இடது பாகங்கள் சமமான சக்திகளை அடைவதாகவும் சொன்னார்.

லாஸ் ஏஞ்சல்ஸைச் (Los Angeles) சேர்ந்த மருத்துவர் எரிக் ராபின்ஸ் தன்னிடம் வரும் நோயாளிகளுக்கு அந்த உடற்பயிற்சியை சிபாரிசு செய்வதாகக் கூறுகிறார். பரீட்சைகளில் மிகக் குறைந்த மதிப்பெண்கள் எடுக்கும் ஒரு பள்ளி மாணவன் தோப்புக்கரண உடற்பயிற்சியைச் சில நாட்கள் தொடர்ந்து செய்த பின் மிக நல்ல மதிப்பெண்கள் வாங்க ஆரம்பித்ததாகக் கூறுகிறார்.


குழந்தைகளுக்கு ஏற்படும் கவனச்சிதறல், ஏற்கனவே மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்களுக்கும் (ஆட்டிசம் Autism), பழைய நினைவுகள் அழிதல் (அல்சைமர் Alzheimer), இக்காலத்தில் அதிகரித்து வரும் நோய்களுக்குக் கூட இந்தத் தோப்புக்கரண உடற்பயிற்சியை ஆராய்ச்சியாளர்கள் பரிந்துரைக்கிறார்கள். தோப்புக் கரணம் தினமும் செய்வதன் மூலம் மேற்கண்ட நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மிக நல்ல பலன்களைப் பெறுவதாக அவர்களது பரிசோதனைகள் சொல்கின்றன.



கர்ப்பமுற்று இருக்கும் பெண்களுக்கும் பிரசவம் சிரமமின்றி ஆவதுடன் பிறக்கும் குழந்தை பூரண உடல் ஆரோக்கியத்தையும் சிறந்த மன வளத்தையும் பெற்றிருக்கும் என்பது உறுதி. பிரசவத்திற்குச் சில வாரங்களின் பின்னர் இந்தத் தோப்புக் கரணத்தைப் போட்டு வந்தால் வயிறு, முதுகு தசைகள் இறுகி அறுவை சிகிச்சை யின் போது அளித்த மயக்க மருந்துகளால் ஏற்பட்ட வேதனைகள் குறையும்.

முதியோரிலும் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. காது, கண், ஞாபக சக்தி போன்றவை கூர்மை அடைகின்றன. தோப்புக் கரணம் செய்வது பழக்கமில்லாதவர்களுக்கு ஆரம்பத்திலேயே மூன்று நிமிடங்கள் தொடர்ந்து செய்வது கடினமாக இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் ஒரு நிமிடம் செய்வதில் இருந்து ஆரம்பித்து நாட்கள் செல்லச் செல்ல இரண்டு நிமிடங்கள், பிறகு மூன்று நிமிடங்கள் என்று அதிகரிக்கலாம்.

தினமும் காலையும் மாலையும் தலா 10 தோப்புக்கரணம் போட்டு வந்தாலே மூளைக்கு உற்சாகம் கிடைக்கும் என்பதை அவர்கள் புரிந்து அனுபவிக்கிறார்கள். நாங்களும் இதனை பயிற்சி செய்து முன்னேற்றங்கள் காணுவோம். முதியோரும் இதனை பயிற்சி செய்து அவர்களை கவனிப்பவர்களுக்கும் ஆறுதலைக் கொடுக்கலாம் அல்லவா.



**சுந்தரம் இந்திரராஜா**


# JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

## JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON, CONCORD & SCARBOROUGH

- General Labourers in Bakeries, Laundries & Other Factories.
- Mixers
- Window Assemblers.
- Forklift Opetators.
- CNC Machine set-up/ Operators.
- Packagers & Assembly line Workers.
- Welders MIG & TIG.
- Wood & Upholstery Workers.

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN & PHOTO ID
AND TALK TO OUR CUSTOMER SERVICE REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

STAFF MASRER INC.
5109 STEELS AVE W. UNIT 105
TORONTO ON. M9L 2Y8
TEL: 416-551-1626
staff.master.inc@gmail.com

STAFF MASTER INC.

# திரை விமர்சனம் - ஆண்டவன் கட்டளை

கடனை அடைக்க வழி தெரியாமல், வெளிநாடு போய் சம்பாதிக்கலாம் என்ற உள்ளூர் நண்பனின் ஆலோசனையைக் கேட்டு, வெளிநாட்டுக்கு ஆள் அனுப்பும் இடைத் தரகர்களிடம் சிக்கிச் சின்னா பின்னமாகும் ஒருவனின் கதைதான் ஆண்டவன் கட்டளை. தமிழ் திரைத்துறை ஆரோக்கியமான திசையில் பயணிக்கத் தொடங்கி விட்டது என்ற நம்பிக்கையை ஏற்படுத்தும் இன்னொரு படம். புதிய அலை இயக்குநர்களில் ஒருவரான 'காக்கா முட்டை' மணிகண்டன் தனது மூன்றாவது படத்திலும் அந்த நம்பிக்கையை தக்க வைத்திருக்கிறார்.

**- சிவதாணு-**

காந்தி (விஜய் சேதுபதி) ஒரு பொறுப்பான இளைஞன். அப்பா, அம்மாவை இழந்த அவர், தனது அக்காவின் திருமணத்திற்காக வாங்கிய கடனை அடைக்க முடியாமல் திணறுகிறார். இந்நிலையில் சொந்தமாகத் தொழில் செய்யத் திட்டமிட்டு, அதற்காக அக்காவின் நகைகளை கடன் வாங்கி, அடகு வைத்து, தொழிலில் நஷ்டப்பட்டு மேலும் கடன் சிக்கலுக்குள்ளாகிறார். அப்போது, அவரது ஊர்க்காரரான நமோ நாராயணன், லண்டன் சென்று 3 வருடங்கள் கழித்து கையில் நிறைய பணத்துடன் ஊர் திரும்புகிறார். அவரைப் பார்த்து வெளிநாடு சென்றாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை காந்திக்கும் வருகிறது. நமோ நாராயணன், இடைத் தரகர் எஸ்.எஸ். ஸ்டான்லியின் போன் நம்பரைக் கொடுத்து சென்னைக்குச் சென்று இவரைச் சந்தித்தால், அவர் வழி செய்வார் என்கிறார். தனது நண்பன் பாண்டியுடன் (யோகிபாபு) மதுரையில் இருந்து சென்னைக்குச் சென்று எஸ்.எஸ்.ஸ்டான்லியை சந்திக்கிறார் விஜய்.

"ஆறு மாத டூரிஸ்ட் விசாவில் லண்டனுக்கு சென்று, அங்கே கடவுச்சீட்டையும் விசாவையும் தொலைத்துவிட வேண்டும். போலீஸில் பிடிபட்டால் இலங்கைத் தமிழர் என்று ஏதாவது ஓர் ஈழத் தமிழ் ஊர்ப் பெயரைச் சொல்லி சமாளிக்க வேண்டும். லண்டன் போலீஸ் கைது செய்தால் ஆறு மாத காலம் சிறையில் அடைப்பார்கள். அதன்பின்பு அகதி அந்தஸ்துக் கொடுத்து ரிலீஸ் செய்து விடுவார்கள். வேலை கிடைக்கும்வரை, மாதம்தோறும் ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுப்பார்கள். அதைச் சேமித்து ஊருக்கு வந்து கடனை அடைக்கலாம்" என்கிறார் ஸ்டான்லி. இந்தத் திட்டத்திற்கு விஜய்யும் யோகி பாபுவும் சம்மதிக்கிறார்கள். கடவுச்சீட்டுக்காக, சென்னையில் தங்கியிருப்பதுபோல் ஒரு வீட்டு முகவரி சான்று தயாரிக்க, வீடு தேடி அலைந்து ஒரு வீட்டில் குடியேறுகிறார்கள். இவர்களுடன் இலங்கைத் தமிழரான நேசன் என்பவரும் இணைந்துகொள்கிறார். "கடவுச் சீட்டில் பேச்சுலர் என்றிருந்தால் விசா தர மாட்டார்கள் எனவே, மனைவி பெயருக்கான இடத்தில் யாராவது ஒரு பெண்ணின் பெயரைச் சேருங்கள்" என்கிறார் ஸ்டான்லி. இதற்காக கார்மேக குழலி என்று இல்லாத மனைவிக்குப் பெயர் சூட்டுகிறார் விஜய். ஆனால், விசா நேர்முகத் தேர்வில் சொதப்பி விட, அவரது விசா விண்ணப்பம் நிராகரிக் கப்படுகிறது. அதேநேரம் நண்பர் யோகியின்



விண்ணப்பம் ஏற்கப்பட்டு அவர் லண்டனுக் குப் பயணமாகிறார். இதன்பின்னர் லண்ட னுக்கு செல்வதற்காக விஜய் எடுக்கும் முயற்சிகளும், அதில் அவர் சந்திக்கும் சிக்கல்களும், அதனால் அவர் வாழ்க்கை யில் ஏற்படும் தலைகீழ் மாற்றங்களும்தான் மீதிப்படம்.

படத்தின் பெரும்பலமாய் இருப்பது உரையாடல்களும் அதை வெளிப்படுத்தும் நடிகர்களும்தான். விஜய் சேதுபதி, கதா நாயகியாக நடித்திருக்கும் ரித்திகா சிங், யோகிபாபு, எஸ்.எஸ். ஸ்டான்லி, நவீன நாடகக் குழுக்காரராக வரும் நாசர், வழக்கறிஞராக வரும் ஜார்ஜ், அவரது உதவியாளராக வரும் வினோதினி, வீடு வாடகை இடைத்தரகராக வரும் சிங்கம்புலி,

தொடர்ச்சி 20ஆம் பக்கம்


# JOBS! JOBS! JOBS!

வேலை இல்லை என்ற கவலை இனி வேண்டாம். அனைத்து விதமான வேலைகளும் எம்மிடமுண்டு. கனடாவிற்கு புதிதாக வந்தவர்கள், மொழிப் பிரச்சனை உள்ளவர்கள் தமிழில் உரையாடி உங்களின் வேலைத் தேவைகளை நிறைவேற்றலாம். உங்களுக்கு ஏற்ற விதத்தில் பதிவுகள் செய்து தரப்படும்.

**JOB OPENINGS IN TORONTO, MISSISSAUGA, BRAMPTON,CONCORD & SCARBOROUGH**

- General Labourers in Bakeries, Laundries & Other Factories
- Window Assemblers
- Forklift Operators & Warehouse Workers
- CNC Machine set-up/Operators
- Packagers & Assembly Line Workers
- Welders MIG & TIG

PLEASE APPLY IN PERSON WITH YOUR SIN CARD & PHOTO ID AND TALK TO OUR SRI LANKAN REPRESENTATIVE AS SOON AS POSSIBLE

ABLE PLUS PERSONNEL INC
2300 Finch Ave. West, Unit #46
Toronto, ON M9M 2Y3
(416) 742-7474

ABLE PLUS PERSONNEL INC.

# தமிழ்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

என்னால் படம் எடுக்க முடியாது. அதேசமயம் பரிசுகளை பெறுவதற்காகவும் நான் படம் எடுப்பதில்லை.



தேசிய விருது பெற்ற 'குயின்', 'கேங்க்ஸ் ஆ·ப் வாசூர்', 'ராமன் ராகவ்' படங்களில் நடிப்பை எல்லோரும் பிரமிப்புடன் பேசுகிறார் கள். எப்படி நடிகர்களிடம் அதனை வரவழைத்தீர்கள்?

எப்போதும் எந்த நேரத்திலும் நான் நடிகருக்கு நடித்துக் காட்டுவதே இல்லை. அந்த கதாபாத்திரத்தின் குணாம்சங்களை வெவ்வேறு பரிணாமங்களில் அவர்களிடம் விவரித்துக் கூறிவிடுவேன். அப்பாத்திரத்தின் பின்னணி, பொருளாதார அம்சங்கள், கலாசாரம், நடை முறை, மனோநிலை யாவற்றையும் முழு பரிமாணத்துடன் விளக்கிவிடுவதால் அவர்களால் நல்ல பெர்பார்மென்ஸைத் தர முடிகிறது.

உங்கள் படங்களில் உங்களைக் கவர்ந்தது?

"இனி எடுக்கப் போகும் படம்." (சொல்லிவிட்டு சிரிக்கிறார் அனுராக் காஷ்யப்.)

# அடமானக்கடன்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

Genworth Insurance) அடமானக்கடன் திருப்பிச் செலுத்தாத சந்தர்ப்பத்தில், காப்புறுதி நிறுவனங்கள், கொடுத்த அடமானக்கடனை, செலுத்தி வந்தன. எதிர்காலத்தில் இந்தக் கடனின் ஒரு பகுதியை கடன்தரும் நிதி நிறுவனங்கள் பொறுப்பேற்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.



**தனி வீடுகள் சராசரி விலை - செப்ரெம்பர் 2016**

றொறொன்ரோ பெரும்பாகம் $1.01 மில்லியன் (GTA)

றொறொன்ரோ $1.21மில்லியன் (Toronto)

வன்கூவரில் ஓகஸ்ட் 2016 இல் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டவர்கள் வாங்கும் வீடுகளிற்கான மேலதிக புதிய நிலமாற்றுவரி 15%. விற்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையில் 32.6% இறக்கம் ஏற்பட்ட போதிலும் றொறொன்ரோவில் 21.5% அதிகரிப்பு முந்தைய வருடங்களும் ஒப்பிடும்போது ஏற்பட்டுள்ளது.

# திரை விமர்சனம்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

கடவுச்சீட்டு அலுவலகத்தில் "தாஜ்மஹால், தஞ்சை பெரிய கோவில் பார்த்திருக்கியா?" என்று கேட்கும் ஆங்கிலேய அதிகாரி, அட்சரம் பிசகாமல் போலிக் கையெழுத்துப் போடும் தாத்தா, கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்க அல்லல்படும் அக்கா கணவராக வரும் ஏ. வெங்கடேஷ், ரித்திகாவின் அம்மாவாக நடித்திருக்கும் ராஜேஸ்வரி பரமேஸ்வரன் என்று எல்லோருமே மிகச் சிறப்பான பங்களிப்பைச் செய்திருக்கிறார்கள்.



விஜய் சேதுபதி ஒரு துணை நடிகருக்குரிய எளிமையோடு இந்தக் கூட்டத்தில் ஒருவராக இருக்கிறார். படம் முழுவதையும் தனது இயல்பான நடிப்பால் நிரப்பியிருக்கிறார். காட்சிக்குக் காட்சி அவரது நடிப்பில் நகைச் சுவையும் மிளிர்கிறது. அதிகம் காட்சிகள் இல்லை என்றாலும், ஏதோவொரு உந்துதலில் விஜய் சேதுபதிக்கு உதவப் போய் மாட்டிக்கொண்டு, தவிக்கும் பாத்திரத்தில் நம்மையும் தனது நடிப்பில் பதற வைத்திருக்கிறார் ரித்திகா சிங். இறுதியில், "நான் உங்கள கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்று விஜய் சேதுபதி கேட்கும் போது, விஜய் சேதுபதிக்குத் தெரியாமல் அளவாய் ஒரு வெட்கச்சிரிப்பை வெளிப்படுத்தி சிறப்பாக்குகிறார். பாண்டியாக வரும் யோகி பாபு போகிறபோக்கில் உதிர்க்கும் வசனங்கள் அப்போதைக்கு சிரிக்க வைப்பதுடன் ஆயிரம் கதைகளையும் சொல்கின்றன. தமிழ் திரைப்பட வில்லன் கையாட்கள் போல் இருக்கிறார். ஆனால், வேடிக்கையான நகைச்சுவையாக அப்பாவித்தனமும் மக்குத்தனமும் இணைந்தவராக வெளுத்துக் கட்டுகிறார். நேசன் என்ற இலங்கைத் தமிழர் பாத்திரத்தில் நடித்திருப்பவரின் சிறிது நேர பதைபதைப்பும் அவருடைய நடிப்பும் அந்தப் பாத்திரத்துக்கு பலம் சேர்த்திருக்கிறது. 'எங்கேயாவது பாத்தா சொல்லுங்கள்' என்று தன்னிடமிருந்த மனைவி, குழந்தைகளின் புகைப்படத்தை விஜய் சேதுபதியிடம் கொடுத்துவிட்டு போலீசோடு நேசன் போகும்போது ஏற்படுத்தும் தாக்கம் பெரியது.

இசை: 'கே'. வயலின் கோர்வைகளை சிறப்பாகப் பயன்படுத்தியிருந்தார். ஆனால், தேவையற்ற இடங்களில் ஒலிக்கும் இசை இரைச்சலாக இருக்கிறது. சண்முகசுந்தரத்தின் ஒளிப்பதிவும் அனு சரணின் படத் தொகுப்பும் படத்திற்கு மிகவும் உதவியிருக்கின்றன. கதை: அருள் செழியன். தமிழ் திரைக்கு ஒரு வித்தியாசமான களத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறார்.

திரைக்கதை, இயக்கம்: மணிகண்டன். சிறு குழந்தைகளுக்குக் கதை சொல்வதுபோல நேர்கோட்டில் மிக எளிமையாகக் கதைகள் சொல்வது இவருக்கு மிகச் சுலபமாக வருகிறது. திரைக்கதையை இவ்வளவு எளிமையாகக்கூடக் கையாள முடியுமா என ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு மணிகண்டனின் திரைக்கதைப் பாணி எளிமையானதாகவும் சரளமானதாகவும் இருக்கிறது. சென்னையின் பழக்கப்பட்ட குடியிருப்புகளுக்குள் உலவும் வாடகை வீட்டுக்காரர்கள், வீடு தேடுபவர்கள், இடைத் தரகர்கள், போலிக் கடவுச்சீட்டுப் பெற்றுத் தருபவர்கள், குடும்பக் கோர்ட்டில் குறைந்தபட்ச திறமைகளுடன் தொழில் செய்யும் வழக்கறிஞர்கள், சராசரி தமிழ்ச் சேனலுக்காக ஓடிஓடி செய்தி சேகரிக்கும் செய்தியாளர்கள் போன்ற பாத்திரங்களின் எளிய அன்றாட சமூக உறவுகளுக்குள் இவ்வளவு சுவாரஸ்யமா என்று வியக்கும் அளவுக்கு திரைக்கதையை விறுவிறுப்பாக நகர்த்தும் சாமர்த்தியம் மணிகண்டனிடம் இருக்கிறது. 'காக்கா முட்டை', 'குற்றமே தண்டனை', இப்போது 'ஆண்டவன் கட்டளை' மூன்றிலும் அதை செய்தும் காட்டியிருக்கிறார்.

அசாதரண மனிதர்களைப் பற்றி மட்டுமே பேசிய தமிழ்த் திரை பின்பு சமான்ய மனிதர்களின் வாழ்வில் நிகழும் அசாதாரணங்களைப் பேசியது. இப்போது சாமான்யர்களின் வாழ்வின் சாமான்ய விசயங்களைப் பேசும் காலம். அதற்கு சாட்சி இந்த படம். தமிழ்த் திரை ரசிகர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய தமிழ்ப் படம்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கருப்புத் தங்கம் மிளகு

**அறிவியல் கதிர்**

ஒரு காலத்தில் தங்கத்திற்கு ஈடான மதிப்புமிக்க பொருளாக மிளகு கருதப் பட்டது. உலகில் மிக அதிகமாக வர்த்தகம் செய்யப்பட்ட நறுமணப் பொருளாகவும் அது இருந்தது. தென்னிந்தியாவின் மலபார் கடற்கரையோரம் 4000 ஆண்டுகளுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்ட மிளகு நறுமணப் பொருட்களில் மிகப் பழமையானது. ஆனால் கி.மு. 1000 ஆண்டுவாக்கில்தான் அது பயி ரிட்டு வளர்க்கப்படும் பொருளாக மாறியது. கி.மு. 4000 ஆண்டிலேயே கிரேக்கர்கள் மிளகைப் பற்றி அறிந்திருந்தாலும் மிக விலை உயர்ந்த பொருளாக இருந்ததால் பணக்காரர்கள் மட்டுமே அதைப் பயன்படுத்த முடிந்தது. மலேசியாவிலும் தென் தாய்லாந்திலும் மிளகு பயிரிடப்பட்டாலும் மத்திய காலம் முடியும் வரை மிளகின் முக்கியமான பிறப்பிடமாக இந்தியாவே இருந்தது. தென்னிந்தியாவில் பரவலாக அது பயிரிடப்பட்டது. தற்போது வியட்நாம், இந்தியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகள் மிளகை அதிகம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகளாக உள்ளன. அதன் கவர்ந் திழுக்கும் வாசனைக்காகவும் மருத்துவ குணத்திற்காகவும் மிளகு பல்லாண்டு களாகவே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. உலகம் முழுவதும் எல்லாவிதமான சமையல் முறைகளிலும் சேர்க்கப்படும் நறுமணப் பொருட்களில் மிளகுக்கு ஒரு தனி இடம் எப்போதுமே உண்டு. நவீன சமையலிலும் மிளகும் உப்பும் நீக்கமற நிறைந்திருப்பதைப் பார்க்கலாம்.

பல நறுமணப் பொருட்களைப் போல மிளகும் பாரம்பரியமான மருத்துவ முறையிலும் ஆயுர்வேத முறையிலும் ஒரு மருத்துவப் பொருளாகப் பயன்படுகிறது. அதன் செரிமானத்தை மேம்படுத்தும் திறன் அதியற்புதமானது. சுவை அரும்புகளைத் தூண்டுவதன் மூலம் ஹைட்ரோ குளோரிக் அமிலம் சுரப்பதை மிளகு அதிகரிக்கிறது. அதன் காரணமாக உணவு இரைப்பையை அடைந்ததும் அது விரைவாக ஜீரணமாவது எளிதாகிறது. மிளகின் எதிர்விஷத்தன்மை (antioxidant) குணங்கள் மூலிகங்களால் (free radicals) ஏற்படக்கூடிய சேதாரங்களைத் தடுத்து இதயம், கல்லீரல் சம்பந்தமான நோய்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறது. மிளகு சேர்க்கப்பட்ட அனைத்து உணவு வகைளும் உடலில் சேரும் தேவையற்ற கொழுப்புகளை அகற்றுவதற்கு உதவுகின்றன. அது மட்டுமல்ல.. பல் வலி, பல் தேய்மானம், காது வலி, காங்க்ரீன் எனப்படும் புண், ஹெர்னியா, பூச்சிக் கடியினால் வரும் புண்கள் போன்றவற்றைக் குணப்படுத்த வல்லது மிளகு. மிளகு அல்லது மிளகு சேர்ந்த பொருட்களைத் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் ரத்த ஓட்டம் சீராகி, கீல்வாதம், மூட்டுவலி போன்ற வலிகளில் இருந்தும் தொண்டைக் கட்டு, சைனஸ் பாதிப்பு, வாயுத் தொல்லை, இருமல், ஜலதோஷம் போன்ற பாதிப்புகளிலிருந்தும் நிவாரணம் கிடைக்கிறது. வாய், குடல் பகுதிகள், ஜீரண உறுப்புகள், சிறுநீர் பாதை ஆகிய உறுப்புகள் நோய்க்கிருமிகளால் பாதிக்கப்படும்போது மிளகு சிகிச்சை பலன-ளிக்கிறது. படை போன்ற தோல் நோய்களைக் குணப்படுத்தவும் புற்று நோய்க் கட்டிகளில் உள்ள புற்று நோய் செல்கள் பெருகாமல் தடுக்கவும் மிளகு பயன்படு கிறது. புறஊதாக் கதிர்களின் அளவு அதி-கரிக்கும்போது தோல் புற்று நோய் உருவாக வாய்ப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்கும் பாதுகாப்பு அரணாக மிளகு பயன்படுகிறது. மிளகு எண்ணெய் உடல் உறுப்புகளைப் பாதுகாக்கக் கூடியது. முதுமையின் காரணமாக ஏற்படும் பார்வைக் குறைபாடு, தோல் சுருங்குவது, தசைகள் தேய்மானம், எலும்பு இணைப்புகளில் பலவீனம், நரம்பியல் கோளாறுகள், நினைவாற்றல் குறைபாடு, வயிற்றுப் போக்கு, சிறுநீர் கழிப்பதில் சிக்கல்கள், உறக்கமின்மை, பூச்சிகள் கடிப்பதால் வரும் பிரச்சனைகள் போன்ற எண்ணற்ற உடல் பாதிப்புகளுக்கு மிளகு ஓர் அருமருந்தாகப் பயன்படுகிறது.




- பேராசிரியர் கே. ராஜு -

உடலில் வரும் சிறுசிறு கோளாறுகளுக்கு ஆங்கிலமருந்துக் கடையில் போய் மருந்து, மாத்திரைகள் வாங்கி உட்கொள்வது நம் வழக்கமாகிவிட்டது. பாட்டி வைத்தியம் என்றழைக்கப்பட்ட நமது பாரம்பரிய மருத்துவத்தில் மிளகு, சீரகம், வெந்தயம், துளசி, வேப்பிலை, கருவேப்பிலை, மஞ்சள், தூதுவளை, சித்தரத்தை போன்ற பொருட் களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முக்கியத்து வத்தை மீட்க வேண்டிய அவசியம் இருக்கிறது.







# கனடாவின் மூன்று பிரபல நகரங்கள்

## விக்ரோறியா

விக்ரோறியா பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் தலைநகரம் ஆகும். இது வன்கூவர் தீவின் தெற்கில் அமைந்துள்ளது. இந்நகரம் வன்கூவர் நகரில் இருந்து 10 கிமீ தூரத்திலும், Seattle நகரில் இருந்து 100 கிமீ தூரத்திலும் அமைந்துள்ளது. 80,000 மக்கள் வாழும் இந்நகரில் பல தெற்காசியர்களும், சீனர்களும் வாழ்கின்றனர். பல பழங்குடி மக்களும் வாழ்கின்றனர்.



Victoria ராணிக்காக பெயர் வைக்கப்பட்ட இந்த நகருக்கு 'Garden City' என்ற பெயரும் உண்டு. இந்நகரம் 1843இல் ஐரோப்பியரால் தொடங்கப்பட்டது.

விக்ரோறியாவின் குறிப்பிடத்தக்க இடங்களில் 1905 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட Empress Hotel உம், 1897 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட நாடாளுமன்ற கட்டிடங்களும் அடங்கும். மிதமான பனிக்காலமும், குளிர்மையான கோடைகாலமும் உடைய இந்நகரம் உலகில் மிகவும் தரமான வாழ்க்கை வாழ கூடிய முதல் 20 நகரங்களில் ஒன்றாகும்.

## எட்மன்டன்

அல்பேட்டா மாகாணத்தின் தலைநகரமாகவும், அம் மாகாணத்தில் இரண்டாவது பெரும் நகரமாகவும் இருக்கும் நகர் எட்மன்டன் ஆகும். இந்த நகரில் 880,000 பேர்களும் நகரைச் சுற்றி 1,000,000 மக்களும் வாழ்கின்றனர்.




எட்மன்டன் என்ற பெயர் அந்நகரில் இருக்கும் 'Fort Edmonton' என்ற கோட்டையில் இருந்து வந்தது. இந்தக் கோட்டையின் பெயர் இலண்டனிலுள்ள ஒரு ஊரின் பெயராகும். எட்மன்டன் 'Canada's Festival City' என்றும் 'Gate way to the North' என்றும் அழைக்கப்படுகிறது. எட்மன்டனில் பல விழாக்கள் நடைபெறுவதாலும், இந்நகரிலிருந்து தான் வடக்கு கனடாவிற்குச் செல்வதாலும் இந்நகரிற்கு இப்பெயர்கள் வந்தன.

கனடாவின் முதலாவது உள்ளக அங்காடியும், முதலாவது மசூதியும் இங்கு இருக்கின்றன. வட அமெரிக்காவின் மிகப் பெரிய உள்ளக அங்காடி எட்மன்டனில் உள்ள 'West Edmonton Mall' ஆகும்.

எட்மன்டனில் கி.மு 3000 ஆம் ஆண்டில் மக்கள் வாழ்ந்தனர் என்றும், சிலவேளை கி.மு 12000 ஆம் ஆண்டிலேயே மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் 1754 ஆம் ஆண்டில் எட்மன்டனிற்கு வந்த Hudson's Bay Companyயின் தொழிலாளி ஒருவர் தான் எட்மன்டனில் காலடி வைத்த முதல் ஐரோப்பியர் ஆவார்.

## மொன்றியல்

குவிபெக் மாகாணத்தின் இரண்டாவது பெரும் நகரம் மொன்றியலாகும். இது மொன்றியல் தீவில் அமைந்துள்ளது. பழங்காலத்தில் Ville Maire (மேரியின் நகர்) என அழைக்கப் பட்டாலும், பின்னர் Mount Royal மலையின் பெயர் இந்நகருக்கு வந்தது. இம்மலை இந்நகரின் நடுவில் அமைந்துள்ளது.

இந்நகரில் 1,650,000 மக்களும், நகரை சுற்றி 4,000,000 மக்களும் வாழ்கின்றனர். 1844 ஆம் ஆண்டில் இருந்து 1849 ஆம் ஆண்டு வரை இது கனடாவின் தலைநகரமாக இருந்தது. இங்கு 57% ஆன மக்கள் பிரஞ்சு மொழியும், 18% ஆன மக்கள் ஆங்கிலமும் வீட்டில் பேசுகின்றனர்.

1976இல் ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மொன்றியலில் நடைபெற்றன.




மொன்றியலின் தென்மேற்கில் 'Old Montreal' என்ற பகுதி உள்ளது. அங்குதான் Notre Dame போன்ற குறிப்பிடத்தக்க இடங்கள் இருக்கின்றன.



ஞா. ஆரணி
அகவை 18




GF
GOLDEN FALCON
HOMES
AMAZING
INVESTMENT
OPPORTUNITY
STARTING FROM
$277
DETACHED & SEMI-DETACHED HOMES FROM HIGH 200'
தொழில் வாய்ப்புகள் பெருகி வரும் Kingston Ontario விற்கு மிக அருகில் உருவாகும் புத்தம் புதியவீட்டுத் தொகுதியில்
முதலீகளை மேற்கொள்ளும் வாய்ப்பு
Hwy 401 இல் இருந்து 5 நிமிட தூரத்தில் Queens University, Good Year Tire Manufacturing Plant ஆகியவற்றில் இருந்து
20 நிமிட பயண தூரத்தில் உருவாகிவரும் Millcreeck Community இன் Phase 1 இல் முதலீடுகளை மேற்கொள்ள சிறந்த சந்தர்ப்பம்.
மிகக் குறைந்த விலையில் புத்தம் புதிய Detached மற்றும் Semi-Detached வீடுகள்
3 BEDROOM
3 WASH ROOM
2 CAR GARAGE
தொழில் வாய்ப்புகள் மற்றும் உயர் கல்வி வசதிகளுக்கு மிக அருகில் அமையும் புத்தம் புதிய வீட்டுத்திட்டம் என்பதால் அதி வாடகைக்
குடியிருப்பாளர்களை அதிகளவில் கவரும் தன்மைகொண்ட இந்தவீட்டுத் தொகுதியில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் அதிகம் அதிகமான
நன்மைகளையும் உங்கள் முதலீட்டின் மீதான தேறிய இலாபத்தையும் பெருக்கிக் கொள்ளுங்கள்.
மிகக் குறைந்தளவு எண்ணிக்கையான வீடுகள் மட்டுமே Phase 1 இல் வழங்கப்படவுள்ளதால் உங்கள் முதலீட்டை
உறுதிப்படுத்துவதற்கான பதிவுகளை உடனடியாகவே மேற்கொள்ளுங்கள்.
www.millcreekhomes.ca
RAMANAN SANTHIRASEGARAMOORTHY
SALES REPRESENATATIVE
416.290.6000
THUSHAN THANABALASINGHAM
SALES REPRESENATATIVE
416.434.5583
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC BROKERAGE*
ADDRESS: 5215 FINCH AVE. EAST SUITE # 203,
TORONTO, ON M1S 0C2
PHONE : (416) 321-6969 FAX : 416.321.6963
* EACH BROKERAGE IS INDEPENDENTLY OWNED AND OPERATED.


இனிப்புக்கள் பரிமாற
உள்ளங்கள் இடம்மாற
அன்பு கொண்ட இதயங்கள் களிப்புற
இனிய தீபாவளி நல்வாழ்த்து
Niru Brand
Tel: 416 750 1976
Niru Enterprises Inc.
40 Minuk Acres
Scarborough, ON. M1E 4Y6
Niru
நிரு

TBC Toronto Business College

கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்

படிக்க கொஞ்சம் நேரம் ஒதுக்குங்க கைநிறைய சம்பாதிங்க



JOB READY PROGRAMS

PERSONAL SUPPORT WORKER(PSW)
28 Weeks
Immediate Job Opportunities

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks
Jobs available in plenty
Earn good salary
Co-op Available

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
12 Weeks

GOVERNMENT GRANT
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக்கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $25000 or more

PART TIME COURSES
SCARBOROUGH வில் அமைந்துள்ள Used Car Dealer Ship ஒன்றிற்கு வாகனங்களை Cleaning செய்ய, Display Lot ஐ பராமரிப்பதற்கு ஆட்கள் தேவை. Must have Ontario valid Driver Licence. Full / Part time position available. தொடர்புகளுக்கு: **416.419.2300**

# HELP WANTED

***Ideal square*** இல் வேலை செய்வதற்கு ***Stair Installer*** **(தச்சுவேலை)** ***(GENERAL HELP WANTED)*** அனுபவம் உள்ளவர்கள் தேவை. Full time or Part time. With Benefit.

தொடர்புகளுக்கு: **416.830.3932**

# A+ DRIVING SCHOOL

For all your driving educational needs

**Thava Nagaratnam**

**(Govt. Licensed In - Car Instructor)**

**416.473.6155**

**www.aplusdriving.ca**



# கேதார கௌரி காப்பு விரத சீனி அரியதரம்

கோயில்களுக்கும், விரதகாரர்களுக்கும் தேவையான சீனி அரியதரம், பலகாரத்தை உங்களுக்குத் தேவையான அளவுகளில் விசேட விலைகளில் எவ்வளவு வேண்டுமானாலும் ஓடர் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

***Sulasie Foods Sweets & Party Supplies*** 100% தூய சைவ உணவகம்

Markham Mcnicoll Centre, 3011 Markham Road, #7

***416.879.2725 / 416.712.2020***



# FOR SALE

Motorized wheel chair. TDX SP with air cushion seat.
Excellent condition like new
for SALE $2,250.00

Contact: **Sarvesh. 416 726 8403**

## ALL COUNTRIES MATRIMONY
### அனைத்து நாட்டு திருமண சேவை

எங்களிடம் அனைத்து மதத்தினரின் வரன்கள் இருக்கிறார்கள். அத்துடன் விவாகரத்து எடுத்தவர்களும் இருக்கிறார்கள். போட்டோ ஸ்ருடியோவில் எடுத்த புகைப்படங்களுடன் நேரடியாகவும், தபால் மூலமும், E-Mail மூலமும் அனைத்து விபரங்களையும் அனுப்பி வைக்கவும். முன் பணம் இல்லை.

**E-Mail : allcountriesmatrimony@gmail.com**

2296 EGLINTON AVE EAST AT BIRCHMOUNT RD
3 LOWER LEVEL - SCARBOROUGH - ONT - M1K 2M2
416 644 7273 CANADA

## போட்டோ ஸ்ருடியோ விற்பனைக்கு

20 வருடமாக ஸ்காபரோவில் இயங்கிவந்த ஏ1 கொழும்பு & சென்.பிரான்சிஸ் போட்டோ ஸ்ருடியோ விற்பனைக்கு அல்லது பங்காளி தேவைப்படுகிறது. விலைபேசித் தீர்க்கப்படும்.

**CALL : 416 613 2818 - 416 755 2333**

2296 EGLINTON AVE EAST AT BIRCHMOUNT RD
3 LOWER LEVEL - SCARBOROUGH - ONT - M1K 2M2

## மொழிபெயர்ப்பு/*QUOTATION/INVOICING/ BUSINESS REGISTRATION* சேவை

தனிநபர் நிறுவனங்களுக்கு தேவையான Invoice/Quotation தயாரித்தல், அனுப்புதல் அது தொடர்பான தொடர்பாடல்கள் செய்து தரப்படும். ஆங்கிலத்தில் அலுவலக கடிதங்கள் எழுதுதல், தமிழ் ஆங்கில Typesetting, தமிழ்-ஆங்கில, ஆங்கில-தமிழ் மொழிபெயர்ப்பு சேவை, சகலவிதமான Form நிரப்பல், Business Registration, Business Name Registateion சேவைகளும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: ***416.900.8859***

## *RESTURANT FOR SALE*

***MALVERN TOWN CENTRE ( SCARBOROUGH)***

Busy location with inside & outside access family oriented business. Including all furniture & fixtures. ***Contact:***

***416.419.8299 / 416.418.9390***

# WATSON PROPERTY MANAGEMENT

**416-284-9999 FOR RENT - CONDO / HOUSE / BASEMENT**

*Scarborough* - **McCowan/Finch – Basement**
with sep entry (1Brm, 1Bath) One bus to Seneca, Close to Several schools, walk to TTC, shopping, park, Library **[Asking $ 800/m]**

*Scarborough* **Orton Park / Ellesmere – Basement**
(1Brm, 1Bath) Close to Transit, Parks, Schools, Daycare, shopping. **[Asking $650/m]**

*Scarborough* - **Midland/Eglinton – Main floor**
(3Brm, 2Bath) Open concept. Newly renovated, walk to Kennedy subway, Go Station. 24 Hr. TTC, Close to shopping, Banks, school. **[Asking $1600/m]**

*Scarborough* – **Kennedy / Sheppard – Condo**
(2Brm, 2Bath) 24 Hrs Ttc Bus Service. Steps to No frills, Walmart, Mall, Library, restaurants, Parks and many more. **[Asking $1800/m]**

*Scarborough* - **Warden/ McNicoll- Full House -**
(3+1Brm, 3Bath)Well maintained, move in immediately. Finished Basement with sep. entry. , Steps To supermarket, parks, TTC, plaza. Close to YMCA daycare, Top ranked schools. **[Asking $1850/m]**

*Ajax* – **Simcoe / Conlins – Full House**
(3Brm, 3 Bath) Fully upgraded, All new items in the house. Close To Banks, Restaurants,Hwy401, 407, Dollarama, Superstore, Costco etc. **[Asking $1950/m]**

*Ajax* – **Westney / Delaney – Townhouse**
(3Brm, 2Bath) Fully upgraded, open concept kitchen & living room Close To Elementary + Secondary Schools, 401,Shops & Restaurants.Short Walk To Public Transit, Parks with bike & walking trail **[Asking $1900/m]**

*Oshawa* – **Ritson/Wentworth- Main Floor**
(3 Brm, 1 Bath) Well Maintained, Spacious, Laminate floor Throughout, Close To Shopping, Hwy 401, Bus Stop,& Restaurants.**[Asking $1500/m]**

*Oshawa* – **Adelaide / French – Main Floor**
( 3Brm, 1Bath) Open concept eat in kitchen with walk out to the deck. Close to Costco, Shopping & Transit **[Asking $1800/m]**

*Newmarket* – **Mullock / Yonge – Basement**
Open concept, Spacious, Close To High Rank Elementary School & High School. Minutes To Mall, Bus Stop, Park. Short Term Lease Also Available (6 Months And Up). **[Asking $900/m]**

*North York*- **Sheppard/Shaughnessy – Main Floor**
( 4 Brm + 3Bath) A Large detached home. TTC at doorstep, Steps to Schools, church, & childcare centre. Close to North York General Hospital, Banks, Shopping, Hwy 401 and resta urants and Fairview Mall **[Asking $2500/m]**

*East York* - **Bay/College– Condo**
( 2Brm, 2Bath) Brand New with parking, West facing corner suite with 9'Ceiling. Walk out to Oversized Balcony. Close to Financial district, U of T, Queen's park, Major Hospitals, Restaurants & Shopping. Subway at doorstep. **[Asking $2950/m]**

*Brampton* – **Goreway/Countryside- Full House**
(4Brm + 3Bath) Brand new, never lived in! 2500sq ft of living space. Close to public and catholic schools, shoppers, walmart & other shopping and various parks. **[Asking $2600/m]**

watsonpm1989@gmail.com

**SPECIALISING IN MANAGING RESIDENTIAL PROPERTIES**

**Karu: 416-616-7278 Vithy: 416-509-9557 Vathsan: 416-417-8432**









Tutorial 332

Answers to tutorial 331

1)$\text{Log}_3(-9) = x$, $3^x = -9$ ,there is no real value forx such that a power of 3 is a negative number.

2)If $y = 5/2(e^{x/5} + e^{-x/5})$

Then $y' = 5/2(1/5e^{x/5} - 1/5e^{-x/5})$ and

$Y'' = 5/2(1/25e^{x/5} + 1/25e^{-x/5})$

$= 1/25[5/2(e^{x/5} + e^{-x/5})] = \frac{1}{25}y$

3)Let the centre be C(0,K), and the points on the circle O(0,0) ,A(2,1).Then $CO = CA, K = \sqrt{(2^2 + 1^2 + (1-K)^2)}$

$2K = 5$ ,$K = 5/2$, equation is

$X^2 + (y - 5/2)^2 = (5/2)^2$ or

$X^2 + y^2 - 5y = 0$

4) First one is a circle with centre (1 ,-3) and radius $\sqrt{13}$

b) This is an equation of sphere with centre(1 ,-2 ,3) and radius 3

Tutorial 332 (Questions)

1)Determine the co ordinates of a point that is equidistant from the points A(1,4) B(1 ,8) andC(5,4) .Determine the eqa. Of the circle passing throA,B,andC

2)The symbols a,b,cand dcan be used to make words of length1 to4 if no repetition is allowed, how many such words can be created ?

3)Find a unit vector that is parallel to the xy plane and is perpendicular to the vector 4i-3j+k

4)The equation$4x^2y - 3y = x^3$ implicitly defines y as a function of x ,use implicit diffrenciation to find dy/dx

5)Using the laws of exponents explain why$64^{1/6} = 8^{1/3}$

By Mr S.F.Xavier(Teacher) tel 6473409490/4167322228

# வடமாகாண சபையினால் பாராட்டப்பட்டார் கனடா எழுத்தாளர் முனைவர் பால. சிவகடாட்சம்

கனேடிய எழுத்தாளர்களுக்கும் தாய்வீடு பத்திரிகைக்கும் பெருமை சேர்க்கும் தன்மை யில் இடம்பெற்றுள்ளது தாய்வீட்டு பத்திரி-



கயின் எழுத்தாளரும் முன்னைநாள் யாழ். பல் கலைக்கழகப் பேராசிரியருமான முனைவர் பால. சிவகடாட்சம் அவர்களின் பெருமுயற் சியினால் வெளியே கொண்டு வரப்பட்ட 1310 எழுதப்பட்ட "சரசோதி மாலை" என்னும் வர லாற்றுச் சிறப்பு மிக்க நூல். பத்திரிகையில் அவரால் தொடர்ந்து எழுதப்பட்ட "தேவ நுவரப் பெருமாள்" அல்லது போதிராசன்" என்னும் தமிழரால் எழுதி தம்பதெரிய (தம்பதெனிய) அரசாட்சிக் காலத்தில் தெவிநுவரவில் பராக்கிரமபாகுவின் ஆதர வோடு

**- த. சிவபாலு -**

வெளியிடப்பட்ட நூல். தமிழ்நாடு தரமணிய-ில் உள்ள தமிழ் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தால் வெளியீடு செய்யப் பட்டமை தாய்வீடு வாசகர்கள் அறிந்ததே. சரசோதி மாலையைத் தொகுத்துத் தந்த தோடு அதற்கு ஒரு விளக்கநூலாக "சரசோதி மாலை என்னும் "காலக்கணிதம் - பாகம் 2" என்ற நூலையும் எழுதியிருந்தார். இவ்விரு நூல்களையும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் வெளியீடு செய்ததோடு அவரை அழைத்துக் கௌரவப்படுத்தியிருந்தது.

அவ்விரு நூல்களையும் வடமாகாண கல்வி, கலாச்சார, விளையாட்டுத்துறை பொறுப் பேற்று அதற்கு ஓர் அறிமுக விழாவினைக் கடந்த 26.09.2016 இல் யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் அறிமுகம் செய்து வைத்தது. இந்தவிழாவிற்கு வடமாகாணக் கல்வி பண் பாட்டு அலுவல்கள் அமைச்சர் குருகுலராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அங்கு கொண்ட செல்லப்பட்ட அனைத்து நூல்களையும் பெற்று பாடசாலை களுக்கு அன்பளிப்பாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற தமிழ்த்துறை பேராசிரியரும் தலைவருமான சிவலிங்கராஜா அவர்கள் சிறப்பு விருந்தின ராகக் கலந்து நூலை அறிமுகம் செய்து உரையாற்றியிருந்தார். அவரைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத்தின் இந்து கலாச்சாரத் துறையின் பேராசிரியர் வேதநாதன் அவர்களும் நூல்பற்றிய ஆய்வுரையினைச் செய்திருந்தார். இந்த நூல் பற்றிய சிறப்புரை யை யாழ். பல்கலைக்கழகத்தின் இந்துகலாச் சாரத்துறை விரிவுரையாளர் இ. செல்வ மனோகரன் அவர்கள் நிகழ்த்தியிருந்தார்.

கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட இந்த நிகழ்விற்கு வரவேற்புரையினை வட மாகாண சபையின் உறுப்பினர் கலாநிதி சர்வேஸ்வரன் அவர்கள் நிகழ்த்தியிருந்தார். சிறப்புப்பிரதிகளை கலாநிதி குகபாலன், கலாநிதி சரோஜா சிவச்சந்திரன், மாகாண சபை உறுப்பினர் திரு. பரஞ்சோதி ஆகி யோர் பெற்றுக்கொண்டனர் என்பதும் குறிப்பி டத்தக்கது. மாகாண அரசு மட்டத்தில் கனட-ாவில் உள்ள எழுத்தாளர் முனைவர் பால. சிவகடாட்சம் அவர்கள் கௌரவிக்கப்பட்டு கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சரி னால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பட்டமை எமக்குப் பெருமை தருவதாக அமைந்துள்ளது. முனைவர் பால. சிவ-கடாட்சத்தின் வரலாற்றுத் தேடல் தொடர வாழ்த்துவோம்.






# EDUCATION

## Review Questions16-20

➢ **BIOLOGY 11 – Genetics**

(i) What is galactosaemia?

If both parents are carrying heterozygous for galactosaemia gene and having 3 children. What is the probability that none of the three will have galactosaemia?

(ii) In pea plants, round and green seeds are dominant. When two plants produced from green wrinkled seeds were crossed, 146 green round seeds and 51 yellow round seeds were produced . What are the genotypes of the parent plants?

(iii) Colour blindness is considered to be sex linked disease and males much more likely to be colour blind than females " Explain" why?

➢ **BIOLOGY 12 – Biochemistry**

What are polypeptides? Explain the formation of 3-Dimensioanal protein structures from polypeptides.

➢ **CHEMISTRY 12 –Organic Chem.**

Show reagents and experimental conditions to synthesize the following compounds from 1-propanol.

(i) Propene (ii) Propanal
(iii) proponoic acid (iv)2- proponol
(v) 2- bromopropane (vi) Propanone

## Answer Key : 16-18

➢ **PHYSICS 11 &12**

1200 m
P ———————————— Q
A ⟶ 45km /h V m/s ⟵ C
B ⟶ 54km/h a m/s²

Speed of the car A = 12.5 m/s (constant speed)
Speed of the car B = 15 m/s (constant speed)

Speed of the car C at Q = V m/s with a constant acceleration of a m/s²

Car A crosses car C in 25.2 s after it passes the intersection P.

$$t = \frac{d}{v} = \frac{315}{12.5} = 25.2\ s$$

In this time duration Car- C travels (1200-315) = 885m

$$\Delta d = v\Delta t + \frac{1}{2} a\Delta t^2$$

$885 = v \times 25.2 + \frac{1}{2} a \times 25.2^2$ ....(1)

$885 = 25.2v + 317.5a$ ....(1)

Car B crosses C in 24.3 s after it passes the intersection P.

$$t = \frac{d}{v} = \frac{365}{15} = 24.3\ s$$

At this time duration Car - C travelled (1200 -365) = 835m

$$\Delta d = v\Delta t + \frac{1}{2} a\Delta t^2$$

$835 = v \times 24.3 + 320a \times 24.3^2$ ....(2)

$835 = v \times 24.3 + 295.2a$ ....(2)

Solve for $v$ and $a$ using equations 1&2

$v$ = 14 m/s (50km/h) ; $a$ = 1.68 m/s²

➢ **PHYSICS 12**

(a) T= mg = 900x9.8N

(b) (i) pulling back, (h=15-15cos20)= 0.905m


Δ Eg =Δ mgh=mg x0.905 J= $\Delta E_k$ = ½ mv²; V= 4.2m/s

(ii) T = mg + mv²/r = 9.9x10³ N

(c) $V_2$= 0, $V_1$ = 4.2m/s

a= 4.2/0.2 =21m/s²;

F= ma = 900x21N=1.9x10³N




➢ **ADV. FUNCTIONS 12**

Determine the x- values in the interval [0,2 π] that satisfy the inequality $0 < \sin x \leq \frac{\sqrt{2}}{2}$

ans: $\sin x \leq \frac{\sqrt{2}}{2}$ $(0, \frac{\pi}{4}) \cup (\frac{3\pi}{4}, \pi)$

Answer key
16-20 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# கனடாவில் "சோக்கல்லோ சண்முகத்தின்" முத்தான நான்கு நிகழ்ச்சிகள்

## சோக்கல்லோவாக, பாரதியாக, ஔவையாக கலக்கலோ! கலக்கல்!

அகவை எண்பதையும் கடந்து நிற்கும் சண்முகநாதன் என்ற இயற்பெயர் கொண்ட சோக்கல்லோ சண்முகம், கனடாவின் கலையுலக, இலக்கிய நண்பர்களுக்குப் புதிய இரத்தம் பாய்ச்சி வருகின்றார் என்றால் மிகையாகாது.

தனது பத்து வயதில் நாடகம் மூலம் கலையுலகில் காலடி எடுத்து வைத்த சண்முகம், நாடகம், வில்லடிப்பாட்டு, தனிநடிப்பு, எழுத்து ஆகிய வடிவங்கள் மூலம், ஓய்வு ஒளிச்சலின்றித் தனது பங்களிப்பை வழங்கி வருகின்றார். கலைதான் அவரது வாழ்க்கை என்றாகி விட்டது.

மறைந்தும் மறையாத கலைஞன் கே. எஸ். பாலச்சந்திரன் கனடாவில் ஆரம்பித்து வைத்த சோக்கல்லோ சண்முகத்தின் வில்லடிப்பாட்டுக் குழுவில், கலைஞர்கள் வி. ரி. இராஜேந்திரன், இராஜ்மீரா, இராசையா, கனி விமலநாதன், இரத்தினம் உருக் மணிகாந்தன், நளினி குகசீலன், நமோ நாகேஸ்வரி, மங்கையர்க்கரசி சிவசுப்பிரமணியம், கமல் கேகையலிங்கம், ஆசிரியர் சின்னத்தம்பி போன்றவர்கள் அங்கம் வகிக்கின்றார்கள். இவர்கள் அனைவரும் நன்கு பயிற்சி பெற்ற, திறமையான அனுபவம் வாய்ந்த கலைஞர்களாவர். நேரத்திற்கு மிகவும் பஞ்சமான கனடாவில் தமது பொன்னான நேரத்தை, இப்பாரம்பரிய கலைக்கு வழங்குவது பாராட்டுக்குரியது.

பல்லினக் கலாச்சார அமைப்பாக இயங்கி வரும் ஹார்மணி நிலையம் தமிழ், சீன, பங்காலி மற்றும் ஆங்கிலேய முதியவர்களுக்கான சேவைகளை வழங்கி, அவர்களது உடல், உள ஆரோக்கியத்தை



மேம்படுத்துவதையும், அவர்கள் சுயாதீனமாக இயங்குவதையும் உறுதிப்படுத்துவதனூடாக ஆரோக்கியமான முதுமையை ஊக்குவிக்கும் நோக்கில் சேவையாற்றி வருகிறது. இந்நிலையம் முன்னெடுக்கும் நிகழ்வுகளில் முதியவர்களே ஆர்வத்துடன் பங்குபற்றித் தமது திறமைகளை வெளிப்படுத்துவதனூடாக எல்லோரையும் மகிழ்விக்கும் அதேவேளை எமது கலை கலாச்சாரங்களைப் பேணுதலுக்குப் பங்களிப்புச் செய்கின்றனர். ஹார்மணி நிலைய விழாக்களில் சிறப்புக் கலைஞராக சோக்கல்லோ சண்முகம் வழங்கியுள்ள பங்களிப்பு குறிப்பிடத்தக்கதொன்றாகும். இந்நிலையத்தின் தமிழ் நிகழ்ச்சிகளில் அவர் பாரதியாராக, ஔவையாராகத் தோன்றி அவையினரை மகிழ்வித்தது மட்டுமன்றித் தனது கலை ஆற்றலினூடாக எம்மொழியின் பெருமையை எமது தலைமுறையினருக்கும் ஏனைய இனத்தவருக்கும் எடுத்துக் காட்டுவது எம்மினத்துக்கான சேவையாகும்.

ஹாார்மணிஹோல் நிலையம் நடத்திய 2015 ஆம் ஆண்டுத் தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளின்போது பாரதியாராகத் தோன்றி அனைவரையும் மகிழ்வித்தார். புரட்சிக் கவியின் வரலாற்றை அப்பாத்திரமாகவே மாறி அற்புதமாக எடுத்துக் கூறியதுடன் விடுதலைக் கவியின் கருத்துக்களையும் எண்ணங்களையும் அனல் பறக்கும் கவிதை வரிகளூடாக வெளிப்படுத்தினார். பாரதியாராக இவரது ஒப்பனை மெச்சும்படியாக அமைந்தது. ஓவியங்களிலும் திரைப்படங்களிலும் நாம் காணும் பாரதியாரது மெருகூட்டப்பட்ட உருவத்தை விடவும் உண்மையான பாரதியாரது உருவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தது. பாரதியார் பாத்திர ஒப்பனையும் நடிப்பும் அவையோரால் வியந்து பேசப்பட்டது.

அண்மையில் ஹார்மணி நிலையம் நடத்திய பொங்கலோ பொங்கல் 2016 விழாவிலே ஔவையாரை எம் கண்முன்னே தோன்றச் செய்து மீண்டும் தனது திறமையை வெளிப்படுத்தினார். ஔவையாரது வரலாற்றை அறிந்து மறந்தவர்களுக்கு நினைவுபடுத்தி, அறியாதவர்களுக்கு அறிமுகப்படுத்திய அதேவேளை, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவாறு நகைச்சுவையுடன் கலந்து வழங்கிய போது அரங்கிலிருந்த அனைவரும் முழுமையாக ரசித்து மகிழ்ந்தனர். ஔவையாராக வேடமிட்டிருப்பது ஓர் ஆண் என எவருமே ஐயுறாவகையில் ஒப்பனை கனகச்சிதமாக அமைந்திருந்தது. ஔவையாரது வரலாற்றைக் கூறுதல், நூல்களையும் பாடல்களையும் அறிமுகப்படுத்துதல், அறிவுரை கூறுதல் என்பவற்றை நகைச்சுவை கலந்து வழங்கியும், சிறப்பான ஒப்பனையாலும் நிகரற்ற இயல்பான நடிப்பினாலும் நிஜ ஔவையாரை எம் கண்முன்னே நிறுத்தி அனைவரையும் அதில் ஒன்றித்து

தொடர்ச்சி 41ஆம் பக்கம்

# கனடா தமிழ் எழுத்தாளரில் முன்னோடி

வாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ்ந்து பலதையும் பத்தையும் அனுபவித்து நல்ல பிள்ளைகளைப் பெற்று அவர்களின் புகழில் உச்சி முகர்ந்து நின்றவர். 'குறமகள்' என எழுத்துலகில் முத்திரையைப் பதிக்க என கிருபானந்தவாரியார் சூட்டிய பெயர். அந்தப் பெயரிலேயே அவரை எழுத்துலகம் பெருமளவுக்கு அறிந்திருந்தது. அவர்தான் காங்கேசந்துறையில் பிறந்து வளர்ந்து ஈழத்தின் கல்விப் பாரம் பரியத்தில் பல மாணவருக்கான வழிகாட்டியாக இருந்து வந்த வள்ளிநாயகி இராமலிங்கம். சாதாரண எழுத்தாளர் அல்லாமல், பெண் களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

மாட்டை அடித்து கசக்கிப் பிழந்தபின் தொழுவத்தில் கட்டிவிடும் அடிமைப் படுத்தும் பாரம்பரியத்தைத் தமிழரும் கொண்டிருந்தனர். அந்தமாதிரித்தான் 'பெண்' பிறவிகளையும் தமிழ்நாட்டிலும் அடக்கி ஊழியம் செய்ய வைத்து வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்திருந்தனர். அவர்களை வைத்திருந்த நிலைபற்றி வயோதிபப் பெண் சிவயோகம் கூறும்போது 'எனக்கு அப்ப 12 வயதுதான் இருக்கும். வேலி எல்லாம் ஒரு ஈயும் புகாத அளவுக்கு ஒரு ஓட்டைகூட இல்லாமல் அடைத்து வைத்திருந்தார்கள். மூன்றாவது வீட்டுக் காரன்தான் என்ரை புருஷன். ஆனால் கலியாணத்துக்குப் பிறகுதான் அவரை எனக்குத் தெரியும். பெரியபிள்ளையான பிறகு ஒருதற்றை வீடும் தெரியாது' என்று கூறினார். எனக்கும் கூட என் கணவரை கலியாண எழுத்துக்குப் பின்னர்தான் தெரியும். இப்படியான நிலையில் தான் பெண் அடக்குமுறை இருந்தது. பெண்களின் கதை பின்புத்தியாகவே கொள்ளப்பட்டது.

வள்ளிநாயகியின் காலம் பெண்கள் கூடுதலான அடக்குமுறைக்குள் வைக்கப்பட்டிருந்த காலம். அப்படியான சூழலில் இருந்தும் அவர் இந்தியா சென்றும் கல்வி கற்றார். மொறிஸ் மைனர் காரில் வலம் வந்தார். நாடகப் பட்டறையில் ஆண்களுடன் நாடகம் பழகினார். ஆண் வேடம் இட்டு மாணவருடன் மேடை ஏறினார். அகில இலங்கை நாடகப் போட்டிகளில் பங்கு பற்றிய இவரது நாடகங்கள் முதலிடம் பெற்றன. குழந்தைகளை கணவரிடம் விட்டுச் சென்று கொழும்பில் பல்கலைக்கழகத்தில் நாடக டிப்ளோமா 2 வருடங்களாகச் செய்து 'அம்மா என்றால் 'அறிவு' என பெண்களுக்கும் உச்சிக் கொம்பில் ஏறும் ஆற்றல் உண்டு என்பதைக் காட்டியவர். எழுத்து ஊடாக பெண்கள் வாழ்வை உயர்த்தும் உந்துசக்தியாக இருந்தவர்.

தனக்குக் கிடைத்த சுதந்திரம் மற்றைய சகோதரிகளுக்கு ஏன் கிட்டக் கூடாது என்பதில் மிகுந்த கரிசனையுடன் செயற் பட்டவர். ஆரம்பகாலங்களில் அவரது மேடைப் பேச்சுக்களால் பெண்ணிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கணீர்



என்ற கட்டைக்குரல் மக்களைக் கவர்ந்தது. பட்டிமன்றங்களில் காரசாரமான விவாதங் களில் வித்துவத் திறமையாலும் விவாதத் திறமையாலும் பெண்களுக்கு எதிராகப் பேசுவோரையும் பெண்களை அடக்கி வாழத் துடிப்போரையும் எதிர்த்து நின்று வாதாடினார். அவரது துணிச்சலை யாரும் பாராட்டாமல் இருக்கமுடியாது. அசாதார ணத் துணிச்சல் அவருடைய உருவத்துடன் இணைந்த ஒன்று போல அவருடைய கம்பீரமான நடையும் பேச்சும் இருந்தன.

சிறுவயதிலிருந்தே குறமகள் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். முக்கந்தர் என்று பட்டம் கொண்டு கொந்தராத்து வேலைகளால் உழைத்து முன்னேறிய தந்தையாரை வள்ளிநாயகி அடிக்கடி நினைவுக்குக் கொண்டுவருவார். தந்தையார் அடிக்கடி இந்தியாவுக்கு போய் வரும்போதெல்லாம் ஆனந்த விகடன், கல்கி, குமுதம், கலைமகள் போன்ற சஞ்சிகைகளையும் மு.வ எழுத்துக்களை யும், அகிலன் கதைகளையும் கொண்டு வருவார் எனவும், அதைத்தான் வாசித்து வாசிப்புப் பழக்கத்தை வெகுவாக ஏற்படுத்திக் கொண்டதாகக் கூறுவார். எமது பாடசாலைகளில் வாசிப்பதற்கு நூல்கள் இருந்தனவா? பாடப் புத்தகங்கள் தவிர பிற புத்தகங்கள் நமக்கு கிடைக்க வில்லை. யாழ். நூலகத்துக்கு செல்லும் வாய்ப்பு எத்தனை பெண்களுக்குக் கிடைத்தன? ஊர் வாசிகசாலைகளுக்கு ஆண்கள்தான் சென்றனர். அங்கு இருக்கும் நூல்களின் தொகை மிக அரிது.

நான் வாழ்ந்த வன்னிக் கிராமத்தில் வாசிக சாலை என்ற கட்டடம் மழைக்கு ஒதுங்கத் தான் கட்டியிருந்தார்கள். வள்ளிநாயகிக்கு இந்தியக் கல்வி ஏற்படுத்திய உறவு வாசிப்புப் பலத்தை அதிகரிக்க வைத்தது.

நாடகம் அவரது சிறப்பு விடயமாக இருந்தது. 'மன உளைச்சல்' என்ற கல்வியூட்டல் நாடகத்தில் சிறப்பான பாத்திரம் ஏற்று கனடாப் பெண்கள் வாழ்விலும் வெளிச்சம் ஏற்ற எனது முயற்சியிலும் இணைந்தார். கனடாவில் சிவத்தம்பியை ஒதுக்கிய காலத்தில் அவரை வரவேற்று பெருங் கூட்டம் ஒன்றை லாண்ட்ஸ்ரவுண் கூட்டுறவு இல்லத்தில் என்னுடன் இணைந்து தலைமை ஏற்று நிகழ்த்தினார். எழுபதுகளிலும் வலம் வந்தார். இவரது எழுத்துக்களைப் படித்த வரை விட மேடைப் பேச்சுக்களைக் கேட்டவர்கள் அதிகம். அந்த வகையில் ஒரு பெரும்தாக்கத்தை இளம் மாணவ வட்டத்திலும் ஏற்படுத்தியிருந்தார். 'கட்டுப் பட்டு இந்த வீட்டில்கூட இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை! உன் இஷ்டம் போல எங்குபோய் வேண்டுமானாலும் இருக்க லாம்' எனக்கூறும் அவரது வரிகளில் பெண்கள் சிறகு முளைத்தவர்கள் ஆக்கப் படுகிறார்கள். விரிவுரையாளராக இருந்த குறமகளுக்குப் பல ஆயிரம் பெண்களை யும் ஆண்களையும் பெண்கள் புரட்சி நோக்கிச் சிந்திக்க வைக்க முடிந்தது. ஆசிரியராக இருந்த காலமும் யாழ்ப்பாணத்து இளம் சமூகத்தை தூண்டிச் சிந்திக்க வைத்தகாலம்.

குறமகள் நான்கு குழந்தைகளுக்குத் தாயாவார். அவர்களை கணவன் அநுச-ரணை யில் விட்டுச் சென்று இத்தகைய கூட்டங்களில் கலந்து கொண்டமை அக்காலப் பெண்களுக்குக் கிடைத்திராத ஒரு பேறு. கூட்டங்களில் பேச தன் கணவன் தனக்கு உற்சாகம் அளித்ததாகப் பல தடவை கூறியுள்ளார். மீண்டும் மீண்டும் தன் கணவனையும் மகள் றோசாவையும் நினைவுபடுத்திக் கொள்வார். வீரச்சாவு அடைந்தாலும் தாய்க்கு மகளின் இழப்பு மிகவும் கஷ்டமானது எனக் கூறுவார். மூன்றா வது பிள்ளையை வயிற்றில் சுமந்த போது கொழும்பில் ஒரு கூட்டத்துக்குப் பேச வரும்படி கேட்டபோது அவர் செல்ல மறுத்தாராம். கணவன் வற்புறுத்திப் போக வைத்தாராம். இயக்கத்திலிருந்து றோசாவின் கடிதம் வர அதை வாசித்த போது திரு. இராமலிங்கத்திற்கு இரத்த அழுத்தம் கூடியதால் அவரை ஸ்ரீலங்கா நேசிங்ஹோமில் அனுமதித்தனராம். அப்படியான நிலையிலும் நீதிபதியாக இருந்த விக்னேஸ்வரன் தலைமையில் நடந்த விவாத அரங்கில் சாரதா அம்மையார் மண்டபத்தில் பேசக்கேட்ட போது கணவர் "போ போ" என வில்லங்கமாகப் போக வைத்தாராம். "எனக்குச் சுகம் நீ போ" எனச்சொல்லி அனுப்பினாராம். அதற்கு ஐந்து நாட்களின் பின்னர் கணவர் இறந்தார் எனக் கூறிக் கண்ணீர் விட்டார்.

**- பார்வதி கந்தசாமி -**

பிள்ளையைச் சுமந்த போது கூட "வயிற்றினாலா பேசப் போகிறாய் வாயால் தானே பேசப் போகிறாய், இப்ப இவ்வளவு நேரமும் அலட்டினது போல அங்கேயும் பேசுறது தானே" எனக் கூறினாராம். அவர் காதலித்து விவாகம் செய்யவில்லை. ஆனால் மணமான மண வாழ்க்கையில் தங்கள் இருவரிடையேயும் சொல்ல முடியாத அளவுக்குக் காதல் உணர்வுகளும், பகிர்தல்களும், புரிந்துணர்வுகளும் இருந்ததால் "அன்புள்ள கணவனை" அவரது இதயத்தில் சாகும் வரை சுமந்து கொண்டுதான் இருந்தார்.

குறமகள் சேவையைப் பாராட்டி தமிழர் தகவல் இலக்கியசேவை விருதை வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத் தக்கது. கொழும்பில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் பாரதிவிழா மூன்று நாட்கள் நடந்தது. அதில் 'புதுமைப்பெண்கள் இன்று இருக்கிறார் களா?' என்ற தலைப்பில் மேடையில் விவாதித்து பேசிய பின் பேராசிரியர் கைலாசபதி 'மிகவும் காரசாரமான பேச்சு. இன்றுதான் கொழும்புப் பொம்பிளை யளுக்கு உங்கள் மேல் கோபம் வரும். பாவக்காய்ப் பச்சடி பத்துவிதமாகச் செய்வது எப்படி என்றுதான் இந்த எழுத்துக்கள் இருக்கு." குறமகள் பெண்கள் தொழிலதிபர்கள் ஆகவேண்டும் என்று பேசியதாகக் கூறினார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் போது சாப்பாடு மிக மோசமாக இருந்த

தொடர்ச்சி 39ஆம் பக்கம்...

TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➤ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➤ FUNCTIONS, ADV. FUNCTIONS
➤ CALCULUS & VECTORS, DATA MGT
➤ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB &AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com


நகைச்சுவைத் தொடர் 342

# ராசம்மா ராச்சியம்


கலகலப்பு தீசன்




புரட்டாதிச் சனிக்கு ஒருத்தரும் வெள்ளை இல்லாட்டி கறுப்புக் காகங்களைக் கூப்பிட்டு சாப்பாடு வைப்பாரில்லை என அவல் சுண்டல் சாப்பிட்ட களையுடன் கூறினா செக்கண்ட்புளோர் செல்லம்மா.



தாங்ஸ் கிவிங் சிலருக்குக் கொண்டாட்டம். பல இடங்களில் பயங்கர வாகன விபத்துக்கள், உயிரிழப்புக்கள்.



பொலிசாரும் விசேட பிரிவுகளை ஒழுங்கு செய்து வீதிக்கு வீதி நின்றாலும் வேகத்தை தடுக்க முடியவில்லை. செல்போனை நிறுத்த முடியவில்லை. ரெக்ஸ் செய்தி அனுப்புபவர்களை ரின்ட் அடித்த காரினில் பார்க்க முடியவில்லை.



ஜம்பூதங்களின் ஆவேசம் மக்களை இடம்பெயர வைக்கிறது. ஆனால் அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் புயல், சுழல்காற்று, சூறாவளி பல இடங்களைப் பாதித்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இயற்கையின் சீற்றம் மாறி மாறி வந்துகொண்டேயிருக்கிறது. நீரோடு அடித்து செல்லப்பட்ட முதலைகள் வீதிகளிலும் மக்கள் வாழ் பகுதிகளிலும் திரிகின்றன. (பல பண முதலைகள் பதுங்கி வாழ்கின்றன)



ஜனாதிபதி ஒபாமா அந்தப் பகுதிகளில் அவசரகால நிலமையைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.

இந்த அமளி துமளிக்குள்ளும் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்கிறது.



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை அமெரிக்கரை விட உலக நாடுகள் மிக உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருக்கின்றன. கிலாரி - ட்றம் நீயா? நானா? வாக்குவாதம். வாக்கு வேட்டை. அவரவர் விட்ட பிழைகள் அம்பலத்திற்கு வருகின்றன. அமெரிக்க சரித்திரத்திலை ஒரு பெம்பிளையளும் ஜனாதிபதி யாக வரேல்லை. பாவம் கிலாரி அவவை இந்தமுறை சனம் தெரிவு செய்யவேணும் எண்டா செக்கண்ட்புளோர் செல்லம்மா. அதுதானே இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் நாட்டுப்பெண்கள் வந்தவர்கள் தானே எனப் பக்கப்பாட்டுப் பாடினா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.

தான் சென்ற கோவில்கள் கல்வி நிறுவனங்களில் ஏடு தொடக்குவதை ஐபொட் அகிலாண்டேஸ்வரி படம் எடுத்து பேஸ்புக்கில் போட்டிருந்தா. லைக் வந்து குவிந்து கொண்டேயிருந்தது.



எல்லாவற்றிற்கும் மேலாக அப்பலோ வைத்தியசாலை செய்திகளை தினமும் சாப்பாட்டுக்கு முதல் 3 முறையும் சாப்பாட்டிற்குப் பின் 3 முறையும் பார்த்து அந்தச்செய்திகளை அசைபோடத் தவறுவதில்லை.

தினம்.... தினம்.... தீபாவளி
நீ..சிரித்தால்....தீபாவளி



15. சீரடி பாபா நினைவுதினம் (1918)

15. அப்துல் கலாம் பிறந்தநாள் (1931...2015)

15. இணுவையூர் வீரமணி ஐயா பிறந்தநாள் (1931..2003)



15. புரட்டாதி கடைசிச்சனி

16. உலக உணவு நாள்

16. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட தினம் (1760....1799)

17. உலக வறுமை ஒழிப்பு நாள். எல்லோரும் எல்லாமே பெறவேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். (கவிஞர் கண்ணதாசன் - கருப்பு பணம் படத்திற்காக எழுதிய பாடல் வரிகள்)



17. கவியரசு கண்ணதாசன் நினைவு தினம்

17. உலக வறுமை ஒழிப்பு நாள்

18. தோமஸ் ஆல்வா எடிசன் (1931) நினைவு தினம்

18. பி.பி.சி வானொலி ஆரம்பிக்கப்பட்ட நாள் 1922

BBC WORLD SERVICE

19. மயில்வாகனம் நிமலராஜன் நினைவுதினம் (2000)

21. சர்வதேச அப்பிள் நாள்

21. ஐப்பசி வெள்ளி விரதம் (ஆரம்பம்).



24. சர்வதேச போலியோ நாள்

24. இ.ஜெயராஜா கம்பன்கழக அமைப்பாளர் பிறந்தநாள்

24. UNITED NATION DAY (1945)



29. தீபாவளி

31. பண்டாரவன்னியன் நினைவு தினம் (1811)

31. கந்தசஸ்டி விரதாரம்பம் (31 ஒக்ரோபர்.......5 நவம்பர்)

31. Halloween Day





**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**
**இலவச ஆலோசனை வழங்கப்படும்**



சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் எண்ணையினாலும் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும்.

இலவச ஆலோசனைகளுக்கு: 647.456.9796

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada) Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician LG.Ayurvedic Medical Services (SriLanka)



**விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு**
**www.vlambaram.com / www.tamilvanakkam.com**




**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall** இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham -** செல்வ சோதி - **416.289.2033**


# முகமூடிப் பெண்



முதல் நாள் கழற்றி வைத்த
முகமூடியை ஆயாசமாக பூட்டிக் கொண்டாள்
வாசல்கதவை பூட்டியபடி
எட்டிப்பார்த்த பக்கத்து வீட்டு அம்மாவுக்கு
புன்னகையை
சிந்தியவண்ணம் முகமூடியை
சரிசெய்தாள்


நாள் முழுவதும் உழைப்பில் நொந்தாலும்
நயமாக பேசி நட்பில் கலந்து
நாளை நகர்த்த
மீண்டும் முகமூடியை சரிசெய்தாள்

வீடு வந்த பேதைக்கு
விதி தந்த விளையாட்டில்
முகமூடியை கழற்றிவிட்டு
விடியும் வரை கண்ணீரில் நனைந்தாள்.

விடியலை பறைசாற்றியதால்
கதிரவன் தன் கவலையை மறைத்தபடி
முகமூடியை பூட்டிக்கொண்டு
கதிர்களை விரிக்க ஆயத்தமானான்

நிசப்தமான இரவில் நெஞ்சில் வலித்த
வடு சொற்கள் ஆறா காயமாகியும்
விழிகள் திறந்து,

நாம் ஒவ்வொருவரும் முகமூடி அணிந்தவாறே வாழ்கிறோம் என்பதை பெரும்பாலும் மறந்து போகிறோம். நாம் அணியும் முகமூடிகள் மட்டும் தான் வித்தியாசப்படுகிறது.



மீரா - ஜேர்மனி

# கனடா...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

தால் மாணவரை ஒழுங்குபடுத்தி வள்ளி நாயகியும் அஞ்சுகமும் வெற்றிகரமாகச் சத்தியாக்கிரகம் முன்னெடுப்புச் செய்யப் பட்டது. இதனால் தனக்கும் அஞ்சுகத்துக் கும் அதிபர் செல்வி முருகேசுவிடம் கெட்ட பெயர் என்றார். குறமகளின் கதைகள் பெண்களைத் தூக்கி விடுவனவாகவே உள்ளன. 1955இல் முதலாவது கதையை 'போலிக் கௌரவம்' என்ற தலைப்பில் எழுதினார். அம்பை, ஜோதிலதா, கிரிஜா போன்றவர்கள் குறமகளுக்கு பக்கபலமாக நின்றனர். அவர்களது படைப்புக்கள் அவரை வெகுவாகவே கவர்ந்திருந்தன. 'அவள் கொடுத்த விலை' என்ற கதை அதிக பாராட்டுக்களைப் பெற்றது. திருமதி கைலாசபதி மிகுந்த வாசிப்பு பழக்கம் உடையவர். ஆனந்த விகடனில் வந்த இந்தக் கதையை வாசித்து 'வாசிப்போரை உணர்ச்சி வசப்பட வைத்த கதை எனவும் அது நல்லதை விளைவிக்கும் நோக்குக் கொண்ட கதை எனவும் வர்ணித்துள்ளார்.' 'தாய்மையின் மடியில்' என்ற கதை ஈழத்து விமர்சகர் கே. எஸ். சிவகுமாரனால் புகழப்பட்டது. எழுத்தாளர் குறமகள் தன்னைச் சூழ்ந்து வாழ்ந்த சமூகத்தைப் படம்பிடித்த கதைகளாக இருப்பதைக் கூறியுள்ளார். செங்கை ஆழியான் என்ற தலைசிறந்த ஈழத்து இலக்கியப் படைப்பாளி குறமகளின் கதைகளில் 'அவர் பேணும் சுருதி அலாதியானது' என்றார்.

குறமகள் சகலகலா வல்லியாகத் திகழ்ந்தார். சிறுவயதில் வயலின் வாசிக்க வும் நடனம் ஆடவும் கற்றுக் கொண்டார். சிறுகதை, கதை, பெருங்கதை, நாவல் என பல்வேறு படைப்புக்களை கொண்டு வந்தார். அவர் தனது M.A பட்டம் பெற எழுதிய 'யாழ்ப்பாணத்தில் பெண்கல்வி' என்ற நூலில் ஆரம்பகாலப் பெண்கள் கல்லூரிகள் பற்றியும் பெண்களுக்கு நிகழ்ந்த கல்விப் பிரச்சினைகள் பற்றியும் எழுதியுள்ளார்.

'பெண் எழுத்தாளர்' என்று பலரும் பேசுவது மரபு. குறமகள் பெண் எழுத்தாளர் எனத் தன்னை அறிமுகப்படுத்த விரும்புவதே இல்லை. யாரும் அவ்வாறு மேடையில் கூறினாலும் அவர் அதனை எதிர்த்துப் பொங்கி எழுவதை நான் பார்த்திருக் கிறேன். எழுத்தாளர் அம்பையும் 'பெண் நயங்கள்' பெண்களிடம் இருக்கிறது. அதனைப் பெண் எழுத்தாளர் கொண்டிருக் கிறார்கள் என வெங்கட் சாமிநாதன் கூறிய கருத்துக்கு அதிரடிப் பதில் கொடுத்ததை 2014ஆம் ஆண்டு தமிழ் நதியுடனான தாய்வீடு நேர்காணலில் காணலாம். வீரத்தாய், தாய்மை என்பவற்றைப் புகுத்தி எழுத்துக்களில் பெண்கள் அதை தமதாக்கி வைத்துக் காட்ட வேண்டும் என முற்போக்கு எழுத்தாளரிடையேயும் சுய மரியாதை இயக்கப் பெண்களிடையேயும் இருப்பது கூட பெண்ணியத்திற்குப் பங்கமானது என்றார். குறமகள் பல சந்தர்ப்பங்களில் பெண் என ஏன் எழுத்தாளருக்கு அடை வைக்கிறார்கள். 'ஆண்' என ஏன் அடை வைப்பதில்லை? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார்?

"பெண் எழுத்தாளர் என ஈழத்தில் உள்ளவர்களை கணக்கிடும்போது



விரல்களில் முதல் மடிவது 'குறமகள்' தான்" என டொமினிக் ஜீவா கூறியுள்ளார். கனக. செந்திநாதன் அறிமுகமும் அவரது கலையுலகப் பாதைக்கு வித்திட்டது என்பார் குறமகள். 'கணவன்' கால்களைக் கட்டிப்பிடித்து மன்னிப்பு கேட்டாள்' என சீதை அக்னிப் பிரவேசம் செய்து கற்பை முழு உலகுக்கும் காட்ட வேண்டிய இராமாயணத்தை ஒப்பிட்டு மேடைகளில் சாடுவார். 500 க்கும் அதிகமான மேடைப்பேச்சுக்களால் தன்னை ஒரு பெண்கள் சீர்திருத்தம் வேண்டிய வழி காட்டியாக அறுபதுகளிலும் செயல்பட்டவர். ஐம்பதுகளின் இறுதிப் பகுதியில் பத்மசுந்தரி சோமசுந்தரம் என்பவரது தொடர்பும் வள்ளி நாயகிக்கு உற்சாகமாக இருக்க உந்துசக்தியாக இருந்தது. பத்மசுந்தரி சமசமாஜக் கட்சிக் கூட்டங்களில் பேசியவர். என். எம் பெரேரா பேச்சுக்களை மொழி பெயர்த்தவர். சமசமாஜி என அரசியல் பேசுபவரை ஆசிரியராக வைத்திருக்க முடியாது எனப் பானுதேவன் என்பவரை அவர் பணிபுரிந்த பெரும் பாடசாலையிலிருந்து பணி நீக்கம் செய்ய, சமசமாஜிகள் மருதனாமடம் வரை ஊர்வலமாகச் செல்ல தானும் அதில் சென்று "பானுவைத் திருப்பி எடு" எனக் கோஷமிட்டதாகக் குறமகள் கூறினார். இவருக்கு உந்துசக்தியாக பத்மசுந்தரி இருந்தார்.

பெண்களின் வாழ்வை உயர்த்துவதற்கு கங்கணங் கட்டியவர் குறமகள் என்பது அவர் எழுதிய கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், நூல்கள் எல்லாவற்றில் இருந்தும் தெரியவருகின்றது. குறமகள் கதைகள், பெண் கல்வி பற்றிய நூல் இதற்கான ஆதாரங்கள். கதைகளின் மூலம் படிப்பவருக்குக் கற்பிதம் செய்யப்படுவதும் "அட்டை" என்ற கதை பெண்கள் கோபம் எழக் கூடாத பிரதி கிருதிகளாகக் கற்பித்த சமூகத்திற்கும் அப்பெண்களை அடக்க முயலும் ஆண்களுக்குமான மனச்சாட்சியை உலுக்கிய கதை. குறமகள் சொல்வார் "பள்ளிக்கூடங்களிலே சில ஆண்கள் பெரிய மோசம். கங்கையிலே மூழ்கி வந்தாலும் கழியுமோ கன்னியர்க்கு இவர்கள் செய்யும் பாவம்? என்று அவர்களது அளவு கடந்த அட்டூளியங்களைப் பற்றிக் கூறுவார். ஆண் போராளிகள் வாழ்விழந்த பெண்களுக்கு வாழ்வு கொடுத்தமை பற்றிய கதையில் போராளியைப் புகழ்கின்றார். போர்ச் சூழலால் பாதிக்கப்பட்ட குறமகளும் தன் கணவனையும், மகளையும் இழந்து சிறிது காலம் இழப்பினால் தவித்த நிலையிலும் படைப்பிலக்கியத்தில் அவரது ஆளுமை குறிப்பிடத்தக்கதாகவே இருந்தது. சுகவீன முற்ற நிலையில் இருந்த காலத்தில் கூட வைத்தியசாலை நிகழ்வுகளைக் கதை யாக்கி மிதுனம் என்ற குறுநாவலை வெளியிட்டார்.

நவீன தமிழ் இலக்கிய வானில் வள்ளி நாயகி இராமலிங்கம் பொறுப்புணர்வுடன் சமூகசீர்திருத்தக் காய்களை நகர்த்திப் பெண்ணியப் பார்வை கொண்ட படைப்புக் களைப் படைத்து ஈழத்து மூத்த சிறுகதை யாளர்களில் முன்னின்றவர். குறமகளின் பார்வையில் பெண்கல்வி தான் யாழ்பாணத்துப் பெண்களுக்கான முக்கிய மான விடயமாகப் பார்க்கப்பட்டது. அவர் படித்த காலத்தில் படித்த பெண்கள் மிகமிகக் குறைவே. அவரது குடும்பத்தி லும் இளமையில் ஏனைய சகோதரிகளிடம் கல்வி செல்வாக்குச் செலுத்தவில்லை என்பது அவருக்கு விசனம் தான். தனது தங்கை ஒருவர் லண்டன் சென்று தாதியாகப் படித்து முன்வந்ததையிட்டு மிகுந்த சந்தோஷம் உடையவராக இருந்தார். அவரது பிள்ளைகள் அவருக்கு ஈடிணையற்றவர்களாக கல்விப்புலமை நிறைந்தவர்களாக உள்ளமை அவரது மனதில் பூரிப்பை ஏற்படுத்தியிருந்தது.

பாரதியின் புரட்சிக் கவிதைகளில் பற்றுக் கொண்ட வள்ளிநாயகியின் பேச்சுக்கள், விவாதம், எழுத்துக்கள் அவரது இளமைக் காலத்தில் அவரை ஒரு புதுமைப் பெண்ணாகவே காட்டி வந்திருக்கின்றன. சமூகசீர்திருத்தம் அவரது பாரதி பற்றிய சமூகப் பார்வையில் ஈழத்துக் கலைஞரின் பன்முகப் பார்வையில் ஒன்றாக வள்ளி நாயகியின் பார்வை காணப்படுகிறது. வள்ளிநாயகியை ஒரு மாக்சிச சிந்தனை யாளராகவோ, பெரியாரிசவாதியாகவோ காணாமல் பாரதியின் பன்முகப்பார்வைக் குள் தன் எழுத்துக்களை உள்ளடக்கிய பெண்களுக்கான சீர்திருத்தவாதி எனலாம். ஈழத்தில் காணக்கூடிய சிந்தனைத்தடத்துள் அவர் வளர்ந்து வரக்கூடிய கல்விப் பாரம்பரியம் அவருக்குக் கிடைக்காமையும் அவரது எழுத்துக்களிலிருந்து அறிய முடிகிறது. பெண்கள் முன்னேற்றம் அவரது உள்ளக்கிடக்கை என்பது மறுக்க முடியாதது.






MATH & PHYSICS TUTION

By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.

Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228



# கௌரி விரதம்

## 25ஆம் பக்கத்தொடர்ச்சி

யாரத்தை உண்ணலாம். பூசையில் வைத்த காப்புக் கயிற்றினை இருபத்தியொரு முடிச்சிட்டு ஆடவர் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக் கொள்ளுதல் வேண்டும்.



பார்வதி தேவியார் பிரானை நோக்கி சுவாமி, அடியார் அனுட்டித்த இவ்விரதத்தை யார் அனுட்டிக்கிறார்களோ அவர்களுக்கு நீண்ட ஆயுளையும் புத்திரப் பேற்றையும் சகல செல்வங்களையும் அளித்து இறுதியில் தேவரீர் திருவடித்தாமரைகளை அனுக்கிரகித்தருள வேண்டும் என்று வேண்டினார்.

சிவபிரான் பிராட்டியார் பிரார்த்தனைக்கு அனுக்கிரகம் செய்ததோடு கௌத முனிவருக்குத் திருக்கண் பாலித்து அர்த்தநாரீஸ்வராகக் கைலாயத்தில் எழுந்தருளினார். கணவன், மனைவி ஐக்கியத்திற்காக அனுட்டிக்கப்படுவது இவ்விரதம்.

இவ்விரதத்தை அனுட்டித்துப் பெறக்கரிய பேறுபெற்ற தேவர்களும், நரர்களும் ஏராளம். இவ்விரத்தை அனுட்டித்து உலகைப் படைக்கும் உயர் பதவியினைப் பெற்றார் பிரம்மன். இவ்விரதத்தால் தேவலோக அதிபதியானான் இந்திரன். எனவே இவ்விரதத்தை அனுட்டிப்போர் பேரின்பப் பெருநிலை எய்துவர்.

காப்பெடுக்க வந்தேனே
கௌரி அம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய்
காளி மகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய
காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம்
இனிதாக முடித்திடுவாய்.

# ஆரணியின்...

## 27ஆம் பக்கத்தொடர்ச்சி

குறிப்பாகப் பிள்ளைகளது பிறந்த நாள் பரிசாகத் துப்பாக்கி, வாள் போன்ற தீய செயல்களைத் தூண்டும் பொருட்களை வாங்கிக் கொடுப்பதை நிறுத்தி, இவ்வாறான சிறுவர்களுக்கு ஏற்ற பயனுள்ள நூல்களைப் பெற்றோரும் உறவினரும் வாங்கிக் கொடுக்கவேண்டும். தீய செயல்களும், தீய பழக்க வழக்கங்களுக்கும் வழிவகுக்கும் பொருட்களும், கணினி விளையாட்டுக் களும் சிறுவர் மனதைப் பாழாக்குகின்றன. இதனால் உலகம் முழுவதும் தீவிரவாதச் செயல்களால் திக்குமுக்காடுகிறது. அனைத்துலக நாடுகளும் பங்குபற்றும் நிகழ்ச்சிகளையோ, கூட்டங்களையோ, விளையாட்டுப் போட்டிகளையோ நடத்துவது பெரும்பிரச்சினையாகவும் ஏராளமான பணச்செலவோடு செய்ய வேண்டியதாகவும் உள்ளது. எனவே வருங்காலம் அமைதியானதாகவும் ஆனந்தத்தைத் தருவதாகவும் ஆக்குவது வருங்காலச் சந்ததியினர் கையிலுள்ளது என்பதை உணர்ந்து பெற்றோர் செயற்பட வேண்டும்.

ஆரணியின் கதைகள் சிறப்பான கற்பனையு டன் அழகு தமிழில் சொற்பிழைகள் எதுவுமின்றி (நான் வாசித்த சில கதைகளில்) அழகாக வடிவமைக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. இதற்கு விளம்பரம் பத்திரிகை நிர்வாகத்தைப் பாராட்ட வேண்டும். குழந்தைகளுக்காக ஓர் இளையவரால் கனடாவில் வெளியிடப்பட்ட முதல் தமிழ் நூல் வரலாறு படைத்திருக் கிறது. இதற்கு ஊக்கமளித்த பெற்றோரை யும் உற்றோரையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும் ஆரணி கதைகள், கட்டுரைகள், எழுதுவதோடு ஓவியக் கலையிலும் சிறந்து விளங்குகின் றார். இந்நூலிலுள்ள சித்திரங்களைப் பார்க்கும் போது வியப்பாக இருக்கிறது. இவர் பல்கலை விற்பன்னராக வருவார் என்பது திண்ணம். படிப்பிலும் இவர் சிறந்து விளங்குகிறார் என அறிகிறேன். எனவே இவ்வாறான இளஞ்சமுதாயத்தினரை ஊக்குவித்து உற்சாகமளிப்பது எமது இனத்தின் கடமை. எனவே இவரது நூலை எல்லோரும் வாங்கிப்படிக்க வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன். ஆரணிக்கு வாழ்த்துக்கள். மென்மேலும் பல நூல்களைத் தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**'பாட்டி சுடாத வடை' நூலினை விளம்பரம் அலுவலகத்திலும், முருகன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம்.**



# கனடாவில்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

லயிக்கச் செய்திருந்தார். பல்வகைக் கலைப் பின்புலத்தைக் கொண்டிருக்கும் அவரது திறமைகள் பாராட்டப்பட வேண்டியது, தமிழினத்துக்கான அவரது கலைச் சேவை போற்றுதற்குரியது.



- கே. அன்ரன் -

"சோக்கல்லோ சண்முகம்" பிறவியிலேயே ஒரு நகைச்சுவைக்கலைஞர், குணச்சித்திர மும் அவருக்குக் கைவந்த கலை. அவருடைய நகைச்சுவை நிகழ்ச்சிகளும், நாடகம், வில்லடிப்பாட்டு போன்ற நிகழ்வு களும் ஹார்மணிஹோல் நிலையத்தில் மற்றும் கனடா அடங்கலுமாக இடம்பெற்று வருகின்றது. கனடாவில் "சோக்கல்லோ" என்ற நகைச்சுவை தனிநபர் நடிப்பு அண்மையில் ஹார்மணிஹோல் நிலையத் தில் நடைபெற்றது.

இருபது நிமிட இந்த நிகழ்ச்சியில் சபையை நகைச்சுவை மூலம் தனது கட்டுக்குள் வைத்திருந்தார். கனடாவில் நடக்கின்ற தில்லுமுல்லுகளை நகைச்சுவை மூலம் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் ஏற்றினார். இவருடைய நகைச்சுவை இரட்டைக்கருத்தற்ற, உடல் நெளிப்புக்கள் அற்ற, சிரிக்கவும் சிந்திக்கவுமான நகைச் சுவையாகும். எம்முடைய முழுமையான பாராட்டுக்களை இந்தப்பிறவிக் கலைஞனுக்கு நாம் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இவரோடு சேர்ந்து இயங்குகின்ற கலைஞர்களில் ஒப்பனைக்கலைஞர் ஸ்ரீமுருகன் பற்றியும் சொல்லவேண்டும். பாரதியாகவும், அவ்வையாகவும் இவரை ஒப்பனை மூலம் மாற்றியவர் ஸ்ரீமுருகனாவர். சண்முகம் பத்து வயதில் ஸ்ரீமுருகன் நாடகம் மூலம்தான் கலையுலகிற்கு வந்தார் என்பதும் ஒரு சுவையான நிகழ்வாகும். ஸ்ரீமுருகனும் நாடக, திரைப்படக்கலைஞர் என்பதும் கனடா கீதவாணி வானொலி நிலையத்தில் பணியாற்றுபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கலைஞர்கள் அனைவரும் சுபீட்சம் பெற ஹார்மணிஹோல் நிலையம் சார்பாக எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# தீபாவளி

தீபாவளி என்னும் திருநாளில் - தேவியை
 தீபங்கள் ஏற்றித் தொழும் நாள் - அன்று
மனத்துயர் யாவும் மறந்து - எல்லோரும்
 மகிழ்ந்து கொண்டாடும் திருநாளாம்

எண்ணை தலையில் தேய்த்து நீராடி - வண்ண
 எழிலாய் புத்தாடை புனைந்திட்டு - எல்லோரும்
கோபதாபங்களைக் கொழுத்தி விட்டு
 கொஞ்சிக் குலாவிக் கழிக்கும் நாள்




அறுசுவை பலகாரங்கள் செய்து - வீட்டில்
 அயலவர்களுக்கும் கொடுத்து உண்டு
மெய் அன்பு கொண்டு எல்லோருடனும்
 மேம்பட கொண்டாடும் திருநாளாம்

சின்னம் சிறியவர்கள் உள்ளம் மகிழ
 சிங்காரமாய் துள்ளி விளையாடி - களித்திட
பாசமுள்ள மக்களுடன் இணைந்து
 பட்டாசு கொழுத்தி கொண்டாடும் நாள்

புதுமணம் புரிந்த மாப்பிள்ளை பொண்ணு
 புத்தாடை அணிந்து புகுந்த வீடு சென்று
தலைவன் தலைவியாய் இணைந்து - அங்கே
 தலைத்தீபாவளி கொண்டாடும் ஒரு நாள்

அருந்திடப் பானங்கள் அத்துடன்
 அறுசுவை உணவுகள் அவரவர்களுக்கு
அளித்து இனிது மகிழ்ந்து சேர்ந்து இருந்து
 அனைவரும் கொண்டாடும் தீபாவளி



கவிநாதம் பரந்தாமன்




MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

# JRS AUTO TECH

OPEN 7 DAYS A WEEK
9am-11pm

VISA



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors

TIRE SPECIALS

NEW TIRES FROM $99
USED TIRES FROM $49.95

FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV

BRAKE JOB
STARTING FROM
$199

WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans

Castrol
REGULAR OIL CHANGE $29.95
CASTROL OIL CHANGE $39.95
SYNTHETIC OIL CHANGE $49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR $149.95

TRANSMISSION FLUSH
Starting From…
Imports $74.95
Radiator Flush $79.95
Domestic $149.95

ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection

2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by panchaldesigns.com 647.204.2963


IP
IP GOLDHOUSE LTD.
Diwali Special Sale
Design your dreams with us
SPECIALIZING IN ANTIQUE AND STONE JEWELLERY
PLATINUM, ROSE GOLD WHITE GOLD YELOW GOLD DIAMOND BANDS SPECIALITY BANDS
பிரசித்திபெற்ற 22கரட் தங்கநகை விற்பனையாளர்கள்
I.P SILVERHOUSE
I.P GOLDHOUSE
40 New Delhi Drive Unit 56
Markham ON. L3S 0B5
Tel: 905-554-5890
E-mail: ipsilverhouse@hotmail.com

KOENIG
PROPERTY MANAGMENT LTD

We take the stress out of managing your investment property.

416.895.5000 • 1.800.909.7209

BRINGING YOUR DREAMS TO LIFE TODAY...
BUYING, SELLING & INVESTING. RESIDENTIAL & COMMERCIAL

Vany Jeganmohan
Realtor/Financial Advisor
Cell: 416-670-7436
vanyj26@yahoo.ca

* LIFE INSURANCE
* SUPER VISA
* NON MEDICAL
* RESP

www.vjsfinancial.ca

Homelife/GTA Realty Inc., Brokerage
GTA Square, 5215 Finch Ave. East. #203. Toronto ON. M1S 0C2. Bus: 416.321.6969 Fax: 416.321.6963

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"

List Buy Sell

RE/MAX All-Stars Realty Inc., Brokerage
Raj Paramasamy
Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com

வீடு வாங்குவதற்கு வருமானம் போதாதென்று எண்ணுகிறீர்களா?
NO DOWN PAYMENT? கவலை வேண்டாம்

வீடு மற்றும் வாகனக் காப்புறுதி HOME + AUTO = MORE SAVINGS*

"Call me today for a free home and auto insurance quote"
*Inclusive of all other discounts applies to Allstate's base rates. Terms & conditions apply & may vary region. Rates & discounts subject to change. Trademark used under licence by Allstate Insurance Company.

Allstate.
Raji Linghan
Cell: 416.817.5060
905.427.2827 Ext:5020
Ajax Agency 15 Westney Road N

we always care at . . .

Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS. (University of Toronto)
Dentist
416 492 3775

Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
(1 Block South of Finch Ave. East on Warden)

வீடு,வியாபார நிலையம் வாங்க விற்க..
பொன்னம்பலம் மகாலிங்கம்
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive #205 Markham ON. L3S 4N8 Tel: 905.201.9977
*Independently owned and operated

**Free Real Estate Class -** Call: **416.321.6969**

அகத்தின் அழகு முகப்பில் தெரியும்.....
உங்கள் அகத்தின் முகவரியை தேட
விசுவாசமான முகவர்.....
VK Kanthasamy
Sales Representative
Cell: 416-726-1698
Let Me find the key to your HoMe!
HomeLife/GTA Realty Inc., Brokerage
Buss: 416-321-6969 Email: vkpromise@gmail.com

# BUY / SELL PROPERTIES IN GTA



**MCCOWAN & HWY 401**
Bedrooms : 3
Washroom : 2
Asking Price:$299,000




**BRAMPTON**
Bedrooms : 4
Washroom : 4
Asking Price:$699,990



**AJAX**
Bedrooms : 4
Washroom : 4
Asking Price:$489,900



**OSHAWA**
Bedrooms : 3
Washroom : 3
Asking Price:$439,900



**PETERBOROUGH**
Asking Price:$899,999
BUILDING + BUSINESS



**BOWMANVILLE**
Bedrooms : 4
Washroom : 3
Asking Price:$479,900

A. Anton Jeeva, FRI
(Broker)
Contact: 416.575.5055
RE/MAX Dynasty Realty Inc.
Specialized in Power Of Sale Homes & New condos
RE/MAX Dynasty Realty Inc., Brokerage*
8 Shadlock St. #7, Markham ON L3S-3K9
Tel: 905.471.0002
Web: www.antonjeeva.com
E-Mail:anton.jeeva@gmail.com
*Independently Owned & Operated

Homesby Natheesh
BUY SELL RENT INVEST with Homes by Natheesh
www.HomesbyNatheesh.ca
info@HomesbyNatheesh.ca
- FREE Home Evaluation
- FREE Home Staging
- FREE Virtual Tour

For all your Real Estate needs...
Natheesh Parameshvaran
SALES REPRESENTATIVE
647.545.8462

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

FOR ALL YOUR MORTGAGES

Pradeepraj Mani
Mortgage Consultant LIC# M14001956
Cell: 416-997-3862
Dedicated and knowledgeable team...
Provide you with the best solutions
for 1st and 2nd Mortgages!
Our commitment to you is to provide you with the very best...